பக்கங்கள் - 28
விலை - 30ரூபா

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 கதிர் 289 ஆவணி 28ஆம் நாள் சனிக்கிழமை 14 செப்ரெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## சந்நிதியில் 40 பவுண் நகை திருட்டு

யாழ்ப்பாணம், செப். 14
செல்வச்சந்நிதி ஆலய தேர் உற்சவத்தின் போது தங்க ஆபரணங்கள் களவு 05

## வங்கியில் திருட்டு முயற்சி: சபை ஊழியர் பணிநீக்கம்

கிளிநொச்சி, செப். 14
வங்கியின் தன்னியக்கப் பணப்பரிமாற்று இயந்திரத்தில் திருட முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 6 பேரில் ஒருவர் பிரதேச சபை ஒன்றின் ஊழியர். அவர் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
கிளிநொச்சி முழங்காவிலில் உள்ள இல நங்கை வங்கிக்குச்சொந்த மான தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரத்தை உடைத்து களவாட முயன்றனர் 23

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்

## நாளை பேரெழுச்சியுடன் திரளுமாறு அறைகூவல்



யாழ்ப்பாணம், செப். 14
அமைதிப் படையாக தாயக மண்ணில் காலடி எடுத்து வைத்து, ஆக்கிரமிப்புப் படையாக, ஈழத் தமிழர்களை வேரறுக்கும் படையாக மாறி, வயது, பால் வேறுபாடின்றி தேசத்து உறவுகளை வேட்டையாடி - கூறையாடி, அழித்தொழித்த இந்திய இராணுவத்துக்கு எதிராக அகிம்சை வழியில், நீராகாரமும் இல்லாது 12 நாள்கள் 04

## எனது அதிகாரங்கள் குறைக்கப்பட்டமையாலேயே

# சிறுபான்மையினரின் நலன்சார் முக்கிய விடயங்களை நிறைவேற்ற முடியவில்லை

## இலங்கை - இந்திய அரசியல்வாதிகள் முன்பாக மைத்திரிபால தெரிவிப்பு



**கொழும்பு, செப்ரெம்பர் 14**
**தமிழ் - முஸ்லிம் மக்கள் வழங்கிய அமோக வாக்குகள் எனது வெற்றிக்கு வழிசமைத்தது. எனது ஆட்சியில் நாட்டுக்கு நன்மை பயக்கும் பல விடயங்களைத் தற்துணிவுடன் முன்னெடுத்தேன். ஆனால், சிறுபான்மை இனத்தவர்களின் நலன் சார்ந்த முக்கிய விடயங்களை என்னால் நிறைவேற்ற முடியாமல் போய் விட்டது. நாடாளுமன்றம் எனக்குரிய பல அதிகாரங்களைப் பறித்தெடுத்தமையே இதற்குக் காரணம். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.** 04

## இளைஞனின் உயிரிழப்பில் சந்தேகம்

யாழ்ப்பாணம், செப். 14
திருநெல்வேலிப் பகுதியில் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டார். அவரது உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதாக, இளைஞனின் உறவினர்கள் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இளைஞனின் உடலை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் புதைக்குமாறு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பணித்துள்ளார்.
முருகன் வீதி 23

## தமிழருக்கான தீர்வு விடயத்தில் இந்தியா ஆரோக்கியமாக சிந்திக்கிறதாம்

யாழ்ப்பாணம், செப். 14
தமிழ் மக்களின் தீர்வு விடயத்தில் பன்னாட்டுச் சமூகத்தின் ஒத்துழைப்புக் கிடைத்தாலும், இந்தியாவின் பங்களிப்பு இதில் மாறுபட்டதாகும். தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதில்அவர்கள்ஆரோக்கியமாகச் சிந்திக்கின்றார்கள். 04

## தமிழ் - முஸ்லிம் வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும்

### மைத்திரியிடம் எடுத்துரைத்தனர் இந்திய அரசியல்வாதிகள்

கொழும்பு, செப். 14
இலங்கையின் அரச தலைவர் தேர்தலின் வெற்றியை தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகள்தான் தீர்மானிக்கின்றன. இம்முறையும் அதேதான் நடக்கும். இவ்வாறு தெரிவித்தனர் இந்திய அரசியல்வாதிகள். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவ 04

## யாழ். மையப் பேருந்து நிலைய வடைக் கடையில் கத்திக்குத்து

### மூன்று பேர் மருத்துவமனையில்



யாழ்ப்பாணம், செப். 14
வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியதில் கத்தி வெட்டுக்கு இலக்காகிய மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வடைக் கடையும் அடித்து நொருக் 23

## வேலைநிறுத்த போராட்டத்துக்கு தயாராகும் அதிபர், ஆசிரியர்கள்

கொழும்பு, செப். 14
சம்பள உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடுமுழுவதிலும் உள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து வேலை நிறுத்த போராட் 05

## வீடுகளை நோட்டமிட்டவருக்கு மக்கள் முறையான கவனிப்பு

### மூதூரைச் சேர்ந்தவர் பொலிஸில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், செப். 14
யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டப் பகுதியில் வீட்டுக்கு அருகில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞனை மடக்கிப்பிடித்த பொதுமக்கள் உரிய கவனிப்புடன், மின்கம்பத்தில் கட்டி வைத்தனர். பின்னர் பொலி 04

## வெற்றிபெற முடியாவிட்டால் வெளியேறுகிறேன் - *ரணில்*

கொழும்பு, செப். 14
எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற முடி[illegible] இல்லாவி[illegible] தலைமை 05

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத ராசிபலன்

## விருச்சிகம்




## 2019

விருச்சிக ராசிக்காரர்களே நீண்ட காலமாக ஒருவித கஷ்டத்தில் சிக்கித் தடுமாறிக்கொண்டிருக்கிறீர்கள். இனி நன்மைகள் நடைபெறுவதற்கான காலம் நெருங்கி வருகிறது. மாத முற்பகுதியில் தன்னம்பிக்கையைக் தரக்கூடியதாக இருக்கும். புதிய உற்சாகத்தைத் தரும். சிறந்த மாதமாக அமையப்போகிறது. கிரகங்களின் சஞ்சாரம் உங்களுக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கிறது.

### சந்தோஷம் தரும் மாதம்

சந்தோஷம் தரும் மாதம் சந்தோசமான மாதமாக அமையும். உங்களுக்குச் சிறப்பு கிடைக்கும். பாத சனி இருந்தாலும் வக்ரத்தில் பாதிக்கப்பட்டீர்கள். இனி சனி வக்ர நிவர்த்தி அடைவதால் பாதிப்புகள் குறையும். இனம் புரியாத உற்சாகம் பிறக்கும். 10ஆம் வீட்டில் நான்கு கோள்களின் கூட்டணியால் பலம் கிடைக்கும். பதவி அதிகாரம் கிடைக்கும். தைரியம் கூடும். விருச்சிகத்துக்குக் குருவால் கிடைக்கக் கூடிய நன்மைகள் பயனை முன்கூட்டியே கொடுக்க ஆரம்பித்து விடும். குடும்பத்தில் ஒற்றுமை கூடும், மகிழ்ச்சி அதிகரிக்கும். சகோதர சகோதரிகள் ஒத்துழைப்பு தருவார்கள். சொத்துக்களை விற்பதால் பணம் வரும். தொழில் மீதான மதிப்பும் மரியாதையும் கூடும் வெற்றியும் வளமும் கூடும். பட்ட கஷ்டத்துக்குப் பலன் கிடைக்கப் போகிறது. அடுத்தடுத்து இனி வரும் மாதங்கள் எல்லாம் சிறப்புதான்.



**திருமணம் பேச்சு**

தற்சமயம் தொடங்க வேண்டாம். இரண்டாம் வீட்டில் உள்ள சனி விலகும் வரை காத்திருக்கவும். குடும்ப பிரச்சினையை விட்டுக்கொடுத்து போவதன் மூலம் தீர்க்கலாம். மனக் குழப்பத்தால் பிரச்சினைகள் வரும். எதற்கும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவு செய்யுங்கள்.

# பிள்ளையார் சுழி போடுவது எதற்குத் தெரியுமா?

உ

சிவ சக்தியின் இணைப்புப் பிள்ளையார். எந்தச் செயலை செய்யத் தொடங்கும் முன்,பிள்ளையார் சுழி எழுதப்படுகிறது. பிள்ளையார் சுழி ஒரு வட்டமும், ஒரு கோடும் இணைந்து 'உ' என்று எழுதுவார்கள். இதற்கு ஒரு தத்துவம் உண்டு. வட்டத்தைப் 'பிந்து' என்றும், தொடர்ந்துவரும் கோட்டை, 'நாதம்' என்றும் கொள்கின்றனர். எனவே பிள்ளையார் சுழியை 'நாதபிந்து' என்பர். பிள்ளையாருடன் சிவசக்தியின் இணைப்பை இது உணர்த்துவதாகக் கூறப்படுகின்றது. சிவனும் பார்வதியும் இணைந்து அர்த்தநாரீஸ்வர வடிவமாய் காட்சியளித்து, இந்த உலகில் ஆணும், பெண்ணும் சமம் என்பதை உணர்த்துகின்றனர்.

அந்த நாதன்-நாயகியின் மகனான விநாயகர், தன்னைக் குறிக்கும் குறியீடான பிள்ளையார் சுழியிலேயே இந்தத் தத்துவத்தை உணர்த்துகிறார். எந்தச் செயலை தொடங்கும் முன்னரும் பிள்ளையார் சுழி போட்டு அதைத் தொடங்கினால், செய்யும் செயலில் நான் என்ற மமதை இருக் காது.

கடவுளின் படைப்பின் அனைத்தும் சமம் என்ற எண்ணம் தோன்றுவதால் அந்தச் செயல் இனிதே நிறைவடையும். இதனால்தான் பிள்ளையார் சுழி போட்டு அனைத்தையும் தொடங்கச் சொன்னார்கள் எம் முன்னோர்கள்.





## இன்றைய நாள்

**மேடம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பண பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. புத்திரர் விரும்பிய பொருள் வாங்கி தருவீர்கள்.

**இடபம்:** சிரமங்களை சரி செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்கள் தேவையான உதவி வழங்குவர். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். ஆதாய பணவரவு கிடைக்கும்.

**மிதுனம்:** பேச்சில் நிதானம் வேண்டும். சொந்த பணிகளில் கவனம் கொள்வது நல்லது. தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். குறைந்த அளவில் பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்..

**கடகம்:** முக்கிய பணிகளை பிறரிடம் தரக்கூடாது. மனதில் நம்பிக்கை வளர்ப்பதால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரம் செழிக்க அதிக உழைப்பு அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**சிம்மம்:** நண்பரின் உதவி கிடைக்கும். மதிநுட்பம் நிறைந்த செயலால் தொழில், வியாபாரம் முன்னேற்றம் பெறும். நிலுவை பணம் வசூலாகும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**கன்னி:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். செயல்களில் வெற்றி எளிதாகும். தொழில், வியாபாரம் செழித்து வாழ்க்கை தரம் மேம்படும். உபரி பண வருமானம் கிடைக்கும். வீட்டு உபயோக பொருள் வாங்குவீர்கள்..

**துலாம்:** சமூக நிகழ்வுகள் அதிருப்தி தரலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். கூடுதல் உழைப்பினால் பணவரவு சீராகும். புத்திரரை கண்டிப்பதில் நிதான அணுகுமுறை நல்லது.

**விருச்சிகம்:** வழக்கத்திற்கு மாறான பணி தொந்தரவு தரலாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணவரவு சிக்கன செலவுகளுக்கு பயன்படும்.

**தனுசு:** உங்கள் உழைப்பின் ஆர்வத்தை நண்பர் பாராட்டுவார். மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் அனுகூலம் ஒருசேர கிடைக்கும். ஆதாய பண வரவு உண்டு. பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.

**மகரம்:** வாக்குறுதி நிறைவேற தாமதமாகலாம். பொறுமையுடன் செயல்படுவதால் சில நன்மை கிடைக்கும். தொழில் வளர்ச்சி அடைய புதிய நுட்பங்களை அறிந்துகொள்வீர்கள்.

**கும்பம்:** விலகி சென்ற நண்பர் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற தேவையான பணி புரிவீர்கள். சராசரியை விட பணவரவு அதிகரிக்கும்.

**மீனம்:** செயல்களில் சுறுசுறுப்பு அவசியம். பிறருக்காக தகுதி மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். கொஞ்சம் பணக்கடன் பெற நேரிடலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# எதிர்பார்த்த அளவு சினிமா வாய்ப்புகள் வரவில்லை


## பிக்பாஸ் பிரபலம் வருத்தம்

'மெட்ராஸ்', 'கபாலி', 'ஒருநாள் கூத்து' படங்களில் நடித்தவர் ரித்விகா. பிக்பாஸ் நிகழ்ச்சியின் கடந்த சீசனில் பங்கேற்று வெற்றி பெற்றார். அதற்கு பின் சினிமாவில் பெரிய அளவில் வருவார் என்று எதிர்பார்த்தால் பெரிய படங்களில் அவரைப் பார்க்க முடியவில்லை. அவர் இதுபற்றி அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளதாவது:

"சினிமாவில் நடிக்கணும்னு ஆசைப்பட்டு வந்த பொண்ணு நான். ஆனால் 'மெட்ராஸ்' படத்துக்குப் பிறகு பெரிய வாய்ப்புகள் எதுவும் வரவில்லை. முக்கியமாக 'பிக்பாஸ்' நிகழ்ச்சிக்குப் பிறகு பட வாய்ப்புகள் தொடர்ச்சியாக வரும்ன்னு நினைத்தேன். ஆனால், புகழ் கிடைத்ததே தவிர எதிர்பார்த்த அளவுக்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை. முன்பு இருந்தது போலவே தான் இருக்கிறது. அதுக்காக நான் வருத்தப்படவும் இல்லை. அது ஒரு நிகழ்ச்சி அவ்வளவுதான்.



தம்பி பேசுறதை பார்த்தா நம்மகிட்ட இருந்து போஸ்டிங் ஏதோ எதிர்பார்க்கிறார் போலயே...




அடிக்கடி நாணயத்துக்கு ஆசைப்பட்டு நாணம் இழந்து பேசுவதால்..இன்று முதல் நீ...



முரளிதர நாணயக்கார...என்று அழைக்கப்படுவாய்..

### ஆணவம்





உள்ளத்தோடு
போராடுவதே
உண்மையான
போராட்டம்
அதுவே
உண்மையான
வெற்றியும் கூட

**வாழ்க்கையில் வெற்றிபெற 'தகுதி' அவசியம்**

த- (தன்னம்பிக்கை)
கு- (குறிக்கோள்)
தி- (திட்டமிடல்)



### இசை ஒர் உணர்வு

- நீங்கள் கேட்கும் இசைக்கேற்ப உங்கள் இதயத்துடிப்பு மாறுகின்றது.
- மகிழ்ச்சியான அல்லது சோகமான இசையை கேட்பதை பொறுத்து நீங்கள் உங்களைச் சுற்றியுள்ள உலகத்தை பார்க்கும் விதம் மாறுபடுகிறது.
- பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு பெரும்பாலும் இசை பரிந்துரைக்கப்படுகிறது.
- மூளையின் எல்லா பகுதிகளையும் பயன்படுத்தும் சில நடவடிக்கைகளை நாம் எந்நாளும் செய்கிறோம். அவற்றில் இசையும் ஒன்று.
- உடற்பயிற்சி செய்யும் போது இசை கேட்பது உங்கள் செயற்றிறனை கணிசமாக மேம்படுத்துகிறது.
- உங்களுக்கு பிடித்த பாடலை நீங்கள் விரும்பி கேட்க காரணம் அது உங்களின் ஒரு முக்கியமான உணர்வுடன் இணைந்திருக்கக்கூடும்.

### பிக்பாஸ் 3



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாக தீபம்...

உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த லெப். கேணல் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நாளை ஞாயிற்றுக்கிழமை எழுச்சியுடன் ஆரம்பமாகவுள்ளது.

மக்கள் மத்தியில் விடுதலைத் தீயை விதைத்த திலீபன், உணவு ஒறுப்புப் போராட்டத்தை 1987ஆம் ஆண்டு ஆரம்பித்தான். ஈழத் தமிழரின் தாயக தேசம் எங்கும் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவம் மற்றும் இலங்கை அரசுக்கு எதிராக 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து அகிம்சைத் தீயை நல்லூரில் திலீபன் பற்ற வைத்தான். 12 நாள்கள் நீராகாரமும் இன்றி உணவு ஒறுப்பை முன்னெடுத்த தியாக தீபம் திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி வீரச்சாவைத் தழுவிக் கொண்டான்.

அகிம்சையைப் போதித்த காந்திய தேசம் என்று சொல்லப்பட்ட இந்தியா, தியாக தீபம் திலீபனின் அகிம்சைப் போராட்டத்தின் முன் தோற்றுப் போனது. திலீபனின் சாவை வேடிக்கை பார்த்தது இந்தியா. இதுவே பின்னாளில் விடுதலைப் புலிகள் இந்தியாவை ஈழமண்ணிலிருந்து அடித்து விரட்டி துரத்தும் அளவுக்கு மாற்றம் கண்டது.

'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்! சுதந்திர தமிழீழம் மலரட்டும்!!' என்று முழக்கமிட்டு தாயக மண்ணை முத்தமிட்டு வீரகாவியம் படைத்த தியாக தீபம் திலீபனின் நினைவு நாள், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆளுகைப் பிரதேசங்களில் மிக உணர்வெழுச்சியுடன் கடந்த காலங்களில் நினைவுகூரப்பட்டது. சிவப்பு - மஞ்சள் கொடிகளால் தமிழர் தாயக மண் அலங்கரிக்கப்பட்டு, முக்கிய சந்திகளில் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடத்தப்பட்டது.

தாயக தேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட்ட பின்னர், பகிரங்கமாக பொதுவெளியில் நினைவுநாள் நினைவுகூரப்படவில்லை. புலம் பெயர் தேசங்களில் மாத்திரம் பேரெழுச்சியுடன் நினைவுகூரப்பட்டு வந்தது.

கடந்த 2016ஆம் ஆண்டு, நல்லூரில் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியில் 10ஆண்டுகளின் பின்னர் பகிரங்கமாக நினைவுநாள் நிகழ்வுகள் முதன் முறையாக நடத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் திலீபனின் நினைவுத் தூபியில் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

நல்லூர் ஆலயத்தின் பின் வீதியில், மாநகரசபையின் இந்து விடுதிக்கு அருகிலுள்ள தியாக தீபத்தின் நினைவுத் தூபியில் நினைவேந்தலுக்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் இ.ஆனோல்ட் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், ஆரம்ப நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை தியாகி திலீபன் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்த நேரமான காலை 9.30 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்தில் நடைபெறும். அஞ்சலி செலுத்த வரும் சகலரும் குறித்த நேரத்துக்கு அரை மணித்தியாலங்களுக்கு முன்பாகவே நினைவுத்தூபி முன்றலில் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். நிகழ்வின் நினைவுச் சுடரை எமது மக்களுக்காக உயிர்நீர்த்த மாவீரர்களின் பெற்றோர்களில் ஒருவர் ஏற்றிவைப்பார். அதனைத் தொடர்ந்து ஏனையோர் தமது அஞ்சலிகளை செலுத்துவர். உணர்வுபூர்வமான ஆரம்ப நினைவு நாள் நிகழ்வில் கட்சி பேதங்களுக்கு அப்பால் சகல அரசியல் கட்சித் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், மாவீரர்களின் குடும்பங்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் தமிழ் பேசும் மக்களாக ஒன்றாக அணிதிரண்டு நம் ஒற்றுமையை வெளிப்படுத்தி நிற்போமாக என்று பகிரங்க அழைப்பு விடுகின்றேன்- என்றுள்ளது. (ஒ.5)

## சிறுபான்மையினரின்...

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீமின் புதல்வியின் திருமண நிகழ்வு கொழும்பிலுள்ள பிரபல தனியார் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இலங்கை, இந்திய அரசியல்வாதிகள் பலர் கலந்து கொண்டனர். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இரு நாட்டு அரசியல்வாதிகளுடனும் உரையாடினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று அறியமுடிந்தது.

'சர்வாதிகார ஆட்சியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவே கடந்த தடவை அரச தலைவர் தேர்தலில் களமிறங்கினேன். அதில் வெற்றியடைந்தும் காட்டினேன். தமிழ் - முஸ்லிம் மக்கள் எனக்கு வழங்கிய அமோக வாக்குகள் என் வெற்றிக்கு வழிசமைத்தன. எனது ஆட்சியில் நாட்டுக்கு நன்மை பயக்கும் பல விடயங்க ளைத் தற்துணிவுடன் முன்னெடுத்தேன். ஆனால், சிறுபான்மை இனத்தவர்களின் நலன் சார்ந்த முக்கிய விடயங்களை என்னால் நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது. நாடாளுமன்றம் எனக்குரிய பல அதிகாரங்களைப் பறித்தெடுத்தமையே இதற்குக் காரணம். ஐக்கிய தேசியக் கட்சி அரசே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டும். எனினும், இம்முறை நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் பல அதிர்ச்சிகள் காத்திருக்கின்றன. நாட்டின் எதிர்காலத்தைச் சிறிதளவேனும் சித்தி க்காது செயற்படும் சுயநல அரசியல் அனைவருக்கும் விரைவில் தக்கபாடம் புகட்டவுள்ளேன்' என்று இதன்போது அவர் மேலும் கூறினார் எனத் தெரியவந்தது.

(ஒ,5,22)

## தமிழருக்கான...

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் தீர்வு விவகாரத்தில், பன்னாட்டுச் சமூகம் கொடுக்கும் பங்களிப்பில் இந்தியாவின் ஆதரவு வித்தியாசமானது. எமது பிரச்சினையைத் தீர்ப்பதில் இந்திய- இலங்கை ஒப்பந்தம் அடிப்படையானது. அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகள் எங்கள் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதில் கவனம் செலுத்தினாலும், எப்படியான தீர்வு கிடைக்கவேண்டும் என்பதில் அவர்கள் கவனம் செலுத்துவது குறைவு. இது இந்தியாவைச் சேர்ந்த விடயமாகவே இருக்கின்றது - என்றார்.

(ஒ,5,61)

## தமிழ் - முஸ்லிம்...

ரான அமைச்சர் ரவூப் ஹக்கீமின் புதல்வியின் திருமண நிகழ்வு கொழும்பிலுள்ள பிரபல தனியார் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இலங்கை, இந்திய அரசியல்வாதிகள் பலர் கலந்து கொண்டனர். அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இரு நாட்டு அரசியல்வாதிகளுடனும் உரையாடினார். இதன்போதே அவரிடம் இந்திய அரசியல்வாதிகள் மேற்கண்டவாறு கூறினர்.

'இலங்கையில் தமிழ், முஸ்லிம் மக்கள் எவ்வித துன்புறுத்தலும் இன்றி சுதந்திரமாக வாழ வேண்டும். கடந்த காலங்களில் அவர்கள் சொல்லணாத் துயரங்களை அனுபவித்தார்கள். அந்த நிலமை இங்கு மீண்டும் ஏற்படக்கூடாது. இலங்கையின் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்திகளாக தமிழ் - முஸ்லிம் மக்கள் உள்ளனர். அரச தலைவர் தேர்தலின் வெற்றியை தமிழ் - முஸ்லிம் மக்களின் வாக்குகள் தான் தீர்மானிக்கின்றன. இம்முறையும் அதேதான் நடக்கும்' என்றும் அவர்கள் இதன்போது மேலும் தெரிவித்தனர்.

(ஒ,5,22)

## வீடுகளை...

ஸாரிடம் அவரை ஒப்படைத்தனர். மக்களால் பிடிக்கப்பட்ட சந்தேகநபர் மூதூரைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம் பெற்றுள்ளது.

இராசாவின் தோட்டத்து வீதியில் வீட்டுக்குள் நுழையும் ஒழுங்கைக்குள் முச்சக்கரவண்டி நிறுத்தப்பட்டிருந்தது. முச்சக்கரவண்டிக்கு அருகில் நீண்ட நேரம் மேற்படி இளைஞன் நின்றுள்ளார். அந்த வீட்டையும் நோட்டமிட்டுள்ளார். முச்சக்கரவண்டி உரிமையாளர் சந்தேகமடைந்து, இளைஞனை விசாரித்துள்ளார். அவர் சிங்களத்தில் கதைத்துள்ளார். முச்சக்கரவண்டி உரிமையாளர் நண்பர்களை அழைத்துள்ளார். அவர்களும் இளைஞனுடன் உரையாடியபோது சிங்களத்திலேயே முன்னுக்குப் பின் முரணாகப் பேசியுள்ளார்.

சந்தேகமடைந்த மக்கள் இளைஞனை உரிய கவனிப்புடன் மின்கம்பத்தில் கட்டினர். பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்ட இளைஞனை விசாரணை செய்தனர். அப்போது தமிழில் இளைஞன் பேசியுள்ளார். தான் மூதூரைச் சேர்ந்த இஸ்லாமியர் எனவும், மிருசுவில் பகுதியில் தமிழ் பெண்ணை இஸ்லாத்துக்கு மாற்றித் திருமணம் செய்துள்ளதாகவும் கூறியுள்ளார். அத்துடன் சிறுநீர் கழிப்பதற்காகவே ஒழுங்கைக்குள் சென்றதாக முதலில் கூறிய இளைஞன் பின்னர் காசு வாங்கச் சென்றதாகக் கூறினார். சந்தேகமடைந்த பொலிஸார், இளைஞனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ஒ,5,ரி1,105)



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு

**பதிவு செய்யப்பட்ட கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கட்டடம் கட்டுவதற்கான கேள்வி மனுக்கள் கோரல்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் அறங்காவலர் சபையின் கூட்டத்தீர்மானத்துக்கமைய சபையின் செயலாளரினால் தகுதி வாய்ந்த கட்டட ஒப்பந்தகாரர்களிடமிருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது.

1) கட்டட நிர்மாண ஒப்பந்தத்துக்குத் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர், பதிவு செய்யப்பட்டவராகவும் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
2) கட்டடத்துக்கான வரைபடத்தை ஆலய நிர்வாகப் பணிமனையில் செயலாளரிடமிருந்து நேரடியாகப் பார்வையிட்டு அதற்கான **BOQ** தயாரிக்கப்பட்டு, எதிர்வரும் 28.09.2019 திகதிக்கு முன்னர் அரக்கு முத்திரையிடப்பட்டு ஆலயப் பணிமனையில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடல் வேண்டும்.
3) கட்டடத்துக்குத் தேவையான மூலப்பொருள்கள் யாவற்றையும் கட்டட ஒப்பந்தகாரரே பொறுப்பேற்றுக் கொள்வதுடன் அவை தரமானதாக அமைவதையும் ஒப்பந்தகாரர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
4) கட்டுமானத்துக்கான கேள்வித் தொகையானது ஏற்றி இறக்கல் செலவீனம் அனைத்தும் உட்பட்டதாக அமைய வேண்டும்.
5)ஒப்பந்தகாரருக்கும் வேலையாள்களுக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டதும், தங்குமிட வசதியும் மதிய உணவும் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.
6) படிப்படியாக வேலைகள் நடைபெற்று முடிந்ததும் அதற்கான கொடுப்பனவில் 75% கொடுப்பனவு, தொழில்நுட்ப உத்தியோகத்தரின் சிபார்சுக்கமைய காசோலை மூலம் வழங்கப்படும். முற்பணமாக எதுவும் வழங்கப்படமாட்டாது.
7) கட்டடத்துக்கான மூலப்பொருள்கள் ஆலய வளாகத்துள் கொண்டு வரப்பட்ட பின்னர் அறங்காவலர் சபையின் தீர்மானத்துக்கமைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
8) அக்கறையுள்ள கேள்வியாளர்கள் ஆலயத்துக்கு நேரடியாக வருகை தந்து ரூபா 2000/-த்தை மீளளிக்கப்படாத வைப்பில் செலுத்தி தமது தகுதியினை வெளிப்படுத்தி உரிய ஆவணங்களைப் பெற்று 28.09.2019 ஆம் திகதிக்கு முன்னர் தமது கேள்வி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.
9) மேலதிக விவரங்கள் தேவைப்படின் ஆலய நிருவாகப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.
10) அறங்காவலர் சபையின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

**கட்டுமானங்கள்**

**1) கலாசார மண்டபம்**
**2) இறை பயணிகள் இல்லம்**
**3) உணவுக் கூடமும், சமையல் கூடமும்.**

**அன்னையின் பணியில்**
**செயலாளர், அறங்காவலர் சபை,**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு**

(IN/11256)(11.17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணவில்லை



புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த **திருமதி இராஜகோபால் கமலேஸ்வரி** (வயது 56) என்பவரை (12.09.2019) மு.ப 11 மணியளவில் காண வில்லை. இவர் வைத்திய சாலைக்கு செல்வதாக கூறிச்சென்றார்.

இவரை பற்றிய தகவல் அறிந்தவர்கள் உடனே அறிய தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

CS28039(16/17)

**077 048 9345, 076 536 8894**

## மரண அறிவித்தல்



### காங்கேசு பத்மநாதன்

வேலணை கிழக்கு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த காங்கேசு பத்மநாதன் 12.09.2019 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காங்கேசு - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாவதிப்பிள்ளை - இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், இலட்சுமி (மணி)யின் அன்புக் கணவரும், இலட்சுமணன், ஸ்ரீரங்கன், றேகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரவதனியின் (ஆசிரியை, யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம்) அன்பு மாமனாரும், வர்சன், பவிசன், கஜனுகா, மதுசிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் வட்டாரம்,**
**வேலணை கிழக்கு.** (CS/28016)(11,17)

**தகவல்:-**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 02 . 07 . 1947



**மறைவு** 11 . 09 . 2019

### ஜெகதீஸ்வரதேவி தாமோதரம்

கோயிற் சந்தை, கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரதேவி தாமோதரம் 11.09.2019 புதன்கிழமை லண்டனில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், தாமோதரத்தின் அன்பு மனைவியும், தாரணி, நிவேதன் ஆகியோரின் பாசமிகு தாயும், செந்தில்குமரனின் அன்பு மாமியும், கார்த்தி, லஸ்மிதா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரநாதன், இராமச்சந்திரன், இராமதாஸ், சண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும், சத்தியலீலா, இராஜேஸ்வரி, ஜெய மங்களேஸ்வரி, பவானி, காலஞ்சென்றவர்களான கண்ணகை, சிதம்பரநாதன், சிவபாக்கியம், சிவக்கொழுந்து, சிற்றம்பலம் மற்றும் சின்னம்மா, கந்தப்பு ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2019) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குறிப்பு: 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் அன்னாரின் கரவெட்டி இல்லத்தில் ஆத்ம சாந்தி பிரார்த்தனை இடம்பெறும்.**

**கோயிற் சந்தை,**
**கரவெட்டி மத்தி, கரவெட்டி.** (cs28020)(13.17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வேலைநிறுத்த...

டத்தில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தால் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு கடந்த மார்ச் மாதம் பெரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. எனினும் இன்று வரையில் எம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அரசோ, கல்வி அமைச்சோ எவ்வித பதிலும் வழங்கவில்லை.

எனவேதான் எமது கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு அரசுக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையில் எதிர்வரும் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

அத்தோடு 26 ஆம் திகதி கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்துக்கு முன்பாக பெரிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவும் தீர்மானித்துள்ளோம், என்றார். (ஓ.5,31)

## வெற்றிபெற...

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் காலை, கட்சியில் தனக்கு நெருக்கமானவர்கள் சிலரை அழைத்துள்ளார். அவர்களுடன் மனம் திறந்து பேசியுள்ளார் ரணில். அரச தலைவர் தேர்தல் தொடர்பில் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடு தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளார். அத்துடன் ரணில் விக்கிரமசிங்க மனம் நொந்து சில கருத்துக்களை வெளியிட்டதாகவும், அவரது கருத்துக்களைக் கேட்ட சிலர் அழுததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்ற வகையில் கட்சியின் தலைமைத்துவத்தில் உருவாகும் கூட்டமைப்பை வெற்றிபெற செய்வது தனது கடமை என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் அந்தக் கடமையை நிறைவேற்ற முடியாவிட்டால் வெளியேறிச் செல்வதில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

70 ஆண்டுகள் அரசியல் துறையில் இருந்த தனக்கு அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது அவ்வளவு கஷ்டமான விடயம் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். கஷ்டமான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கட்சியைப் பாதுகாத்த தலைவராக எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் வெற்றி பெற முடியுமானால் களமிறங்குவதாகவும் அவ்வாறு இல்லாவிடின் வெளியேறிச் செல்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.5)

## சந்நிதியில்...

போயுள்ளதாக ஆலய சூழலில் இருந்த வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. 28 முறைப்பாடுகள் இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ளன என்று தெரிவித்த பொலிஸார், களவாடப்பட்ட நகைகள் சுமார் 40 பவுணுக்கு மேற்பட்டதாக இருக்கும் என்று குறிப்பிட்டனர். சங்கிலி, தாலிக் கொடி என்பனவும் இதில் உள்ளடங்குகின்றன. (ஓ.5,26)


## பணியாளர்கள் தேவை

**சிவகுரு வாணிபம் கிளிநொச்சிக்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்**

1. நிறுவனத்தினை முகாமைத்துவம் செய்யக்கூடியவர் - 60000/- சம்பளம்
2. கணக்காய்வாளர்
3. கணக்காளர்
4. சீமெந்து விற்பனையாளர்
5. கட்டடப்பொருள் விற்பனையாளர்
6. மோட்டார் சைக்கிள், உதிரிப்பாக விற்பனையாளர்

குறிப்பு:
- கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத் தக்கது.
- வயது 35 - 50இடைப்பட்டவர்கள்
- கணினி போதியளவு அறிவும் அனுபவமும்
- தேவைப்படின் உணவும், தங்குமிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

(AC2019/812)

மேலதிக விவரங்களுக்கு: **0777722305**


## 2 ஆம் வருட நினைவு அஞ்சலி



பிறப்பு 29.03.1950 — இறப்பு 06.09.2017

திதி: தேய்பிறை பிரதமை

அமரர் **வைத்தியநாதர் நடேசபிள்ளை (நெடுந்தீவு)**
சில்வா வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி

*நினைப்பதை மறந்து நீர் எங்கே சென்று விட்டீர்?*
*நினைவுகளைச் சுமந்து நாம் இங்கே தவிக்கின்றோம்.*

அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி,
பெறாமக்கள் குடும்பத்தினர்.

## பதினேழாம் ஆண்டு நினைவு (17 ஆம் ஆண்டு)

### செல்வி கந்தவனம் தர்சிகா

(மாணவி - கொக்குவில் இந்துக் கல்லூரி)

திதி: பிரதமை (14.09.2019)



சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990
சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது 23.08.2002

கந்தவனம் மனையில்
களித்தாறி மீண்டைன்கால்
வந்திடுவாய் என்றேதான்
வரந்தந்தனுப்பினரோ
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்சிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழ் அம்மா!
என்றும் உம் நினைவுகளோடு

**குடும்பத்தினர்.**
**077 271 9696**

(13.17)

## பொன்மொழிகள்

- உன் விதியை நீயே நிர்ணயம் செய்; இல்லையென்றால் மற்றவர்கள் நிர்ணயித்து விடுவார்கள்.
- மரியாதை பெறும் ஒரேவழி அதனை முதலில் கொடுப்பதாகும்.
- திருப்தியும் பேரின்பமும் எம்முள் இருப்பின் நாம் மற்றவர்களால் விரும்பப்படுவோம்.
- எல்லாச் சந்தர்ப்பத்திலும் சமநிலையுடன் இருப்பதுதான் மகிழ்ச்சி.
- நிரந்தரமற்றதன் மீது அன்பு செலுத்துவது உன் தோல்வியின் முதல் படியாக அமையும்.
- பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடாகும்.
- நிசப்தத்தை நாடுபவன் வாழ்வின் உண்மை நிலையை உணர்ந்துள்ளான்.
- வாழ்வின் அறநெறியை தேடுபவன் தன் வாழ்வின் அன்பு நெறியை உணர்ந்திருத்தல் அவசியம்.
- பொறுமையால் வெற்றி பெற்றவரும் உண்டு. வாழ்வை இழந்தவரும் உண்டு.


## பணியாளர்கள் தேவை

ஸ்தாபனங்களில் சுத்திகரிப்பு பணியாளர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். வயது எல்லை 22 வயது முதல் 42 வயதிற்கு உட்பட்டவர்கள். **077 497 5962**


## மணமகன் தேவை

யாழ் இந்து குடும்பத்தைச் சேர்ந்த கும்பராசி சதயம் 4 ஆம் பாதம் 8 ஆம் இடத்தில் செவ்வாயும் 42 கிரக பாவமும் உள்ள 1983 இல் பிறந்த மணமகளுக்கு தகுந்த படித்த மணமகனை எதிர்பார்க்கின்றோம்.

**076 991 4201**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### மயில்வாகனம் காந்தராஜா

(இளைப்பாறிய சீமெந்து கூட்டுத்தாபன கணக்காளர்)

மண்ணில் 30.11.1943 — விண்ணில் 15.08.2019

எங்கள் அன்பின் திருவுருவே...
நாள்கள் முப்பத்தியொன்று கழிந்ததையா...
உங்கள் நினைவுகள்....
எங்கள் நெஞ்சமதை உருக்குதையா....
வாழ்ந்த காலம் தன்னை வசந்தமாக்கியவரே...
காலன் ஏன் உங்களை கண்வைத்தான்?
நெஞ்சமே நீராய்ப் போச்சு
நினைவுகள் இருண்டுபோச்சு..
வந்த பேரிடியினால் வசந்தமும் போச்சு
ஏந்தலே உம்மை நாங்கள் எப்படி மறப்போம் ஐயா?


கடந்த 15.08.2019 வியாழக்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் மயில்வாகனம் காந்தராஜா அவர்களின் இழப்புச் செய்தி அறிந்து உடன் வந்து எமக்கு வார்த்தைகள் கூறி பல வழிகளில் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி ஊடாக ஆறுதல் தெரிவித்தும் பல உதவிகளை உடனிருந்து செய்த வர்களையும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு இறுதி வரையிலும் எம்முடன் இருந்து துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். .

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

நெளுக்குளம்
வவுனியா.

உங்கள் நினைவுகளை சுமந்து நிற்கும்
குடும்பத்தினர். (cs.5760 (13.17)

## விண்ணக வாழ்வின்
### முதலாம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 02 . 07 . 1934

மறைவு 14 . 09 . 2018

### அமரர் பொன்னையா அன்ரன்

"பூவுலகில் என்னை நேசித்த அனைவரும்
விண்ணுலகிலும் என்னை மறவாதிருப்பீர்களாக"

அன்பு மொழி பேசி
ஆதரவாய் எமக்கிருந்து
இன்பமாய் நாம் வாழ
ஈடின்றி உழைத்தவரே
உங்களை நாம்பிரிந்து
ஓராண்டாகும் இவ்வேளையில்
உங்கள் ஆன்ம இளைப்பாற்றுக்காக
இறைவனை வேண்டுகின்றோம்.



குடும்பத்தினர்.

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணம் மாநகர சபை - சபை நிதி 2019

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் பிராந்தியபெறுகைகள் குழுத்தலைவரால் தற்போதுதகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானதுதேசியபோட்டிவிலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாணகைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டடநிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத் தினைக் கொண்டிருப்பதோடு,பொதுநிதிசுற்றறிக்கை, இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானதுதகுந்த வியா பார அல்லதுகம்பனிப் பதிவுகளைவடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படா ததுமானகேள்விதாரரிற்குவழங்கப்படுவதற்குஉரித்துடையதாகமட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியானகேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்டகேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையானதகைமைகள்,கேள்விஆவணம் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவுஅட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் ஆணையாளர்,மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 2216468, 021 2222019) என்னும் முகவரியிலிருந்து16.09.2019 திகதியில் இருந்து30.09.2019 திகதி வரைகாலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாதகட்டணமாகரூபா.2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை,பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
06. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து ஆணையாளர்,மாநகர சபை,யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு01.10.2019 திகதிமாலை 2.00 மணிக்குமுன்பதாகக் கிடைக்கக் கூடியவாறுபதிவுத் தபால் மூலமாகஅல்லதுநேரடியாகச்சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்வியின் வெளியுறையின் இடதுபக்கமேல்மூலையில் வேலைவிபரம் குறிப்பிடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லதுபிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்களுக்கு (03.12.2019வரை) செல்லுபடியாகும்.
08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
09 கேள்விதொடர்பானமுன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம்,மாநகர சபை,யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 24.09.2019 அன்றுகாலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்பு பிணைத் தொகை | செல்லுபடியா கும் காலம் |
| 1 | JMC/WD/CF-PackageX/2019-124 | Improvement of Pirappankulam By lane<br>ReConstruction of Pirappankulam Road Flood Canal Bed Concrete work<br>Improvement of Pirappankulam lane Drainage side wall work<br>Constrcution of 5 Floor Scheme Drainage Cover Slab work, Kurunagar<br>Constrcution of Central East Road 1st lane sub drainage canal work, Kurunagar<br>Construciton of Sidha Ayurvedic Hospital Building at Navanthurai | 4.495 | 2 | C8/C7 | 45,000.00 | 31.12.2019 |

ஆணையாளர்,
பிராந்தியபெறுகைகள் குழுத்தலைவர்
மாநகர சபை,யாழ்ப்பாணம்.

12.09.2019

(IN/11253)

## Personal Class

• இரசாயனவியல் • உயிரியல் • பௌதிகவியல்
தரம் 06 - O/L வரை கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் வீடு வந்து கற்பிக்கப்படும். (CS/28032)

**0752347120**

## விற்பனைக்குண்டு

கனகராயன் குளத்தில் நல்ல இன **16 மாடுகள்** மற்றும் **6 ஆடுகள்** உடனடியாக விற்பனைக்குண்டு. (cs. 28024) (13.17)

**077 687 9205**

## வீடு விற்பனைக்கு

உக்குளாங்குளம், வவுனியா, முதலாம் ஒழுங்கையில் வீதிக்கருகில் நான்கு பக்கமும் மதிலுடனான $2\frac{1}{4}$ பரப்பு நவீன ரக புத்தம் புதிய வீடு (உறுதியுடனான) விற்பனைக்குண்டு. (CS/27873)

தொடர்புகளுக்கு:
0779457705, 0710232288, 0776152992

## திருமண சேவை

இந்து, கிறிஸ்தவர்கள்,
உள்நாடு, வெளிநாடு, தகுதியான
மணமக்கள் தேவைக்கு
உடன் அணுகவும்.

சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
கோயில் வீதி, மல்லாகம், யாழ்ப்பாணம்.
077 969 4009, 021 568 1126
shivaalaya@yahoo.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




### இலங்கைராசன் லேனுகா

(Bachelor of Science Public Management - Special)

11.09.2019 புதன்கிழமை கொழும்பு ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக 45 ஆவது பட்டமளிப்பு விழாவில் **(B.Sc 1st Class, Gold medal)** பட்டம் பெற்றதற்காக வாழ்த்துவதோடு மேலும் பல பட்டம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் : S. இலங்கைராசன் குடும்பத்தினர் (மன்னார்) (cs.28023) (13.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் கோயிலில்

ஒரு நூல் 13.09.2019 ஆம் திகதி வெளியிடப்பட்டது

"இந்நூலின் பெயர்:- 'எனது வாழ்க்கைப் பயணம்"

ஆசிரியரின் பெயர்:- கலாநிதி சதாசிவம் கனகசபை



Congratulations Congratulations

**கலாநிதி சதாசிவம் கனகசபை**

*DSc (CULE) DEng (SPUA) MSc(B'ham) PEng (APEO) SLM (IEEE)MIET (UK)BSc Eng(Lond) BSc (CEY)RETD.ENGG CONSULTANT& SR LECTURER (TERY ED)*

**கவன ஈர்ப்புச் செய்தி:-**

எனது மனைவி சிவபதப்பேறு அடைந்த பின்பு என்னுடன் நல்லுறவு பேணுபவர்களுக்கு **'எனது வாழ்க்கைப் பயணம்"** நூலின் பிரதி வழங்குவேன். ஏனைய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நூலகங்கள் என்னுடன் தொடர்புகொண்டு ஒழுங்கு செய்யவும்

**சிவபூமிமடம்,**
**கீரிமலை.**
**தொ.பே.இல:- 077 134 8964** (CS/28014)(11,17)

**கலாநிதி ச.கனகசபை.**

---



www.esoft.lk

TVEC APPROVED CENTRE

PEARSON
A Pearson Assured organisation

நாட்டின் மிகவும் பிரசித்தி பெற்ற

## இரட்டை டிப்ளோமா

யாழில் எம்மிடமிருந்து மட்டுமே..!

சர்வதேச ரீதியில் விசேட அங்கீகாரம் பெற்ற PEARSON (UK) சான்றிதழ்

## IT மற்றும் ஆங்கிலம்

வார நாட்களாயின் – 4 மாதங்கள் வார இறுதி நாட்களாயின் – 6 மாதங்கள்

வகுப்பு நாட்கள்
16 SEP 2019
21 SEP 2019

**ஏனைய சர்வதேசத்தரம் வாய்ந்த டிப்ளோமாக்கள்**

- Diploma in Business Management
- Diploma in Hardware & Networking
- Diploma in Computerized Accounting
- Diploma in Software Engineering
- Diploma in Web Engineering
- Diploma in Auto CAD
- Diploma in Graphic Designing
- Diploma In Business English
- Diploma in Academic English
- Diploma in Hospitality Management

முதலாம் டிப்ளோமாவிற்கு **25%** கட்டணச்சலுகை

இரண்டாம் டிப்ளோமாவிற்கு **50%** கட்டணச்சலுகை

மொத்த செலவு ரூ. 17,125 நிபந்தனைக்குட்பட்டது

**HOTLINE 021 7 572 572**

ESOFT
**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna | Tel : 021 222 4142

SRILANKA'S ONLY PEARSON PLATINUM AWARD WINNER PEARSON ANNUAL AWARDS 2019

40 Branches Island-wide | Sri Lanka's Largest Private Sector Higher Education Network | www.esoft.lk

---

## "ஷெரோணி பப்ளிகேஷனின்"

**2020ற்கான புத்தம் புதிய வெளியீடாக,**

தரம்-02,03,04 என மாணவர்களின் தனித்தனியான பாடத்திட்டங்களுக்குரிய கருப்பொருள்களை கொண்டதும், பெற்றோர் மாணவர்கள் சிரமங்களை தவிர்த்துக்கொள்ளக்கூடிய வகையிலான வர்ணப்படங்களை உள்ளடக்கிய படப் புத்தகங்கள்

மற்றும்

**வெளிவரவிருக்கும் வெளியீடுகள்**

**ந.சந்திரகுமார்** ஆசிரியரின், தரம் –**01** முதல் **04** வரையான மாணவர்களின் **சுற்றாடல், தமிழ், கணிதம்** பாடசெயல் நூல்கள்

**இ.நாகேந்திரன்** ஆசிரியரின், தரம் –**06,07,08** மாணவர்களின் வரலாறு நூல்கள்

**த.மேகராசா** ஆசிரியரின், தரம் –**10, 11** மற்றும் **உயர்தர கலைப்பிரிவு** மாணவர்களுக்கான தமிழ் நூல்கள்

முன்பள்ளி மாணவர்களின் **அரிச்சுவடி அட்டவணைகள், வர்ணம் தீட்டும் புத்தகங்கள்**

தரம்- 03,04
மாணவர்களுக்கான ந.சந்திரகுமார் ஆசிரியரின் சுற்றாடல் பாடப் புத்தகங்கள் தற்போது வெளியீடாகி அனைத்து புத்தகசாலைகளிலும் விற்பனைக்காக உள்ளது.



**வெளிவரவிருப்பவற்றில் சில....**




மொத்தமாகப் பெற்றுக்கொள்ள
☎ 0776258360

SPP

**கல்வியின் அடித்தளம் கற்றல்**
**கற்றலின் ஊன்றுகோல் புத்தகம்**

---

## முதலாம் ஆண்டு நினைவுகளுடன்



அன்னை மடியில்
03 . 04 . 1934

ஆண்டவன் அடியில்
14 . 09 . 2018

## திருமதி சவேரியாப்பிள்ளை பிலிப்பு

*ஆண்டு ஒன்று ஆனதுவோ எம் அன்பு அம்மா*
*நீயின்றி நாம் தனித்திருப்போமா ?*
*நின் அன்பான வார்த்தைகளும்*
*கனிவான செயல்களும்*
*எம் நினைவில் நிழலாடுகின்றன*
*உங்கள் மூலம் நாம் பெற்ற எல்லா*
*நல்ல செயல்களையும் நன்றியுடன்*
*நினைத்துப் பார்க்கின்றோம் இந்நாளில்*
*நித்தமும் உங்கள் நினைவு தனில்*
*நெஞ்சுருகி வாழ்கின்றோம் இங்கு நாம்*
*நின் ஆன்மா இறைவனில் அமைதி பெற*
*இறையருள் வேண்டுகின்றோம்.*

இன்று (14.09.2019) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடிகாமம் கச்சாய் புனித பேதுருவானவர் ஆலயத்தில் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

மாறாத நினைவுகளுடன் :
**குடும்பத்தினர்.**

(CS 26864)(14,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 09 . 1963



மறைவு 11 . 09 . 2019

திருமதி
### நித்தியராசா செந்தமிழ்ச்செல்வி (செல்வி)

வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நித்தியராசா செந்தமிழ்ச்செல்வி (செல்வி) 11.09.2019 புதன்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானச்செல்வம் மற்றும் பத்மாவதி (ஓய்வுநிலை நெசவு ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அண்ணாமலை-இராசமணி தம்பதியரின் அன்பு மருமகளும், நித்தியராசாவின் (ஓய்வுநிலை தபால் ஊழியர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜனனி மற்றும் பிரணவி, டதுசிகா (இராமநாதன் இந்துக் கல்லூரி), கபிலாஸ் (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செந்தமிழ்ச்செல்வன் (பிரான்ஸ்), குமரகுரு (லண்டன்), உஷாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பார்த்தீபன் (லண்டன்), தர்சினி (லண்டன்), கலாவதி, பிறேமாவதி, ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.09.2019 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் 4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு வேலணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10.00 மணிக்கு சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**தி.பத்மாவதி (ஓய்வுநிலை நெசவு ஆசிரியை)**
**4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கு,**
**வேலணை .**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**076 915 7773 , 021 2211 545**

## மரண அறிவித்தல்

மலர்வு 11 . 03 . 1938



உதிர்வு 13 . 09 . 2019

### தம்பிஐயா சபாநாயகம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிஐயா சபாநாயகம் 13.09.2019 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - மங்களம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரமௌலீசனின் அன்புச் சகோதரரும் கோதை (அதிபர் - கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), இளங்கோ (உரிமையாளர் - ஜெகா எலெக்ரிக்கல்ஸ், சாவகச்சேரி), திருநந்தி, அகிலன் (ஆசிரியர் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), திலகன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நகுலராஜா (ஓய்வு நிலை ஆசிரியர், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ஜெகதீஸ்வரி, சுகந்தினி, சுமங்கலா (யாழ் கட்டட திணைக்களம்), மேகலை(ஆஸ்-திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதாபன், கஜன், கார்த்திகன், மாதங்கி, மயூரிகா, பிரியங்கா, பக்ஷிகா, அம்ருதா, வைவிஸ்தா, கதிலன், மேதினிகா, வெண்பா, செங்கோ ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.09.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணிக்கு வேலாயுதம் வீதி, நுணாவில் மத்தி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை வடக்கு கொம்பிகுளம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வேலாயுதம் வீதி,**
**நுணாவில் மத்தி, சாவகச்சேரி.** (IN 11258) (14.17)

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# செல்லத்துரை சத்தியானந்தம்



கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியை, வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை சத்தியானந்தம் அவர்கள் கடந்த (08.09.2019) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை பொன்னரியத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லர் சின்னத்தங்கச்சியின் அன்பு மருமகனும் யோகேஸ்வரியின் பாசமிகு கணவரும் ஆனந்தம் மற்றும் நித்தியானந்தம் அவர்களின் அன்பு சகோதரனும் பிரபாகரன் (சுவிஸ்), பிரபாகினி (வவுனியா), சத்தியேஸ்வரி, கிருபாகினி (கனடா), நிருபாகரன் (கனடா) அவர்களின் அன்பு தந்தையும் ஜரிமீரா (சுவிஸ்), குணரூபன் (வவுனியா), தர்மராஜா, சிவனேஸ்வரன் (கனடா), மதுஷா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, இராசேந்திரம், பரமேஸ்வரன் (சுவிஸ்), செல்வராணி (கனடா), தவமணி, திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிவேதன், நிருஷிகா, ஜனனி, அனோஜன், அஷானா, உதயசங்கர், திஷான், பவிசன், தருசுபன், ஜனார்த்தன், மதுஷன், சௌமியா, நேகா இவர்களின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (15.09.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 09.30 மணிக்கு நடைபெற்று கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்வதற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

CS28043(16/17)

**ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ந.இலங்கேஸ்வரன்




# உயிர்காக்கும் உன்னத பணி

உலக முதலுதவி தினம் இன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் உலக முதலுதவி தினம் செப்ரெம்பர் இரண்டாவது வார சனிக்கிழமைகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. 2019ஆம் ஆண்டுக்குரிய கருப்பொருளாக "முதலுதவி சேவை இலகுவில் பாதிப்படைய கூடியவர்களுக்கே" என்பது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

முதலுதவி தொடர்பான அறிவு மற்றும் திறன் எமது சமூகத்தில் இலகுவில் பாதிப்பைஎதிர்நோக்கக்கூடிய குழுக்களான மாற்றுத் திறனாளிகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள், முதியவர்கள் போன்றோருக்கு முதலுதவி தொடர்பான அறிவு மற்றும் சேவைகளை வழங்குவது தார்மீக பொறுப்பாகும்.

செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனம் கடந்த 150 வருடங்களுக்கு மேலாக முதலுதவிப் பயிற்சி, முதலுதவி சேவைகளை தேசிய சங்கங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தி வந்துள்ளது. 2017ஆம் ஆண்டு வரையான காலங்களில் உலகளாவிய ரீதியில் 100 தேசிய சங்கங்கள் ஊடாக 16 மில்லியன் மக்களுக்கு முதலுதவி பயிற்சி பயிற்றுவிக்கப்பட்டுள்ளது.

உயிர் காக்கும் உன்னத பணி முதலுதவி ஆகும். இது அனைவருக்கும் முக்கியமான ஒரு பணியாகும். உலக முதலுதவி தினமானது முதலுதவி பற்றிய அறிவு மற்றும் திறனைவிருத்தி செய்வதற்கும் பொது மக்களிடையே முதலுதவி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவதற்குச் சந்தர்ப்பமாக அமைகின்றது.

**முதலுதவி என்றால் என்ன?**

முதலுதவி என்றால் திடீர் விபத்து அல்லது திடீர் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு அந்த இடத்தில் இருந்து மருத்துவ உதவி கிடைக்கும்வரை சூழலில் உள்ள பொருள்களைக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட பயிற்றப்பட்ட ஒரு முதலுதவியாளரால் செய்யப்படும் உதவியே முதலுதவி ஆகும்.

**முதலுதவியின் நோக்கங்கள்**

1.உயிரைக் காத்தல்
2.நோயின் தீவிரத்தன்மையைக் குறைத்தல்
3.சுகமடைதலை இலகுவாக்கல்

மேற்கூறப்பட்ட நோக்கங்கள் யாவும் எந்தவொரு பாதிக்கப்பட்டவருக்கும் முதலுதவி செய்யும்போது இருக்கவேண்டும். முதலுதவியாளன் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்கவேண்டும்.

1.தலைமைத்துவம்
2.விடாமுயற்சி
3.சகிப்புத்தன்மை
4.பொறுமை
5.இரக்கம்

விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டவர் சுயநினைவு அற்று இருந்தால் பின்வரும் படிமுறையின்படி முதலுதவியை மேற்கொள்ளலாம்.

**உலக முதலுதவி தினம் இன்று**

**நிலைமையை மதிப்பீடு செய்தல் :**

சம்பவ இடம் பாழகாப்பானது என்பதையும் அதிக பாதிப்புக்கு உள்ளானவர்கள் பற்றியும் மற்றும் அவசர உதவி தேவைப்படுவோர் பற்றியும் கிடைக்கக் கூடிய வளங்கள் தொடர்பாகவும் மதிப்பீடு செய்ய வேண்டும். விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டவர் சுயநினைவு அற்று இருந்தால் பின்வரும் படிமுறை முதலுதவியை மேற்கொள்ளவும்.

1. **ஆபத்து –** பாதிக்கப்பட்டவர் ஆபத்தானபகுதிக்குள் இருக்கின்றாரா இருந்தால், ஆபத்து காரணிகளை உரியமுறையில் அகற்றி பாதுகாப்பானதாக மாற்ற வேண்டும்.

2. **துலங்கல் –** பாதிக்கப்பட்டவரின் தோற்பட்டைக்கு நேராக முதலுதவியாளன் முழந்தாள் இட்டு இருந்து தோற்பட்டையை அசைவுடன் குரலையும் எழுப்ப வேண்டும்.

3. **சுவாசப்பாதையை திறத்தல் –** பாதிக்கப்பட்டவரின் நெற்றியில் ஒரு கையையும், நாடியில் இரு விரல்களையும் வைத்து தலையைப் பின்புறமாக சுவாசப்பாதை நேராக இருக்கக்கூடியவாறு வைக்கவேண்டும். இது பாதிக்கப்பட்டவரின் சுவாசத்தை இலகுபடுத்தக் கூடியதாக இருக்கும்.

4. சுவாசம் பாதிக்கப்பட்டவரின் மூக்கின் மேல் முதலுதவியாளன் தனது காதை வைத்துப் பாதிக்கப்பட்டவரது மார்புப் பகுதியை அவதானித்தல் வேண்டும் பார்த்தல், கேட்டல், உணர்தல் என்னும் 3 வகையான செயற்பாடுகளும் முதலுதவியாளனால் பாதிக்கப்பட்டவர் தொடர்பாக அறியலாம். இந்த முடிவின் படி பாதிக்கப்பட்டவர் சுவாசிக்கிறார் அல்லது சுவாசிக்கவில்லை என்ற முடிவு முதலுதவியாளனால் அறிய முடியும்.

5. குருதிச்சுற்றோட்டம் பாதிக்கப்பட்டவர் சுவாசித்துக் கொண்டிருந்தால் உடனடியாக அவருடைய சிரச நாடியைப் பரிசோதனை செய்யலாம். அதன் பின்னர் ஏனைய பிரச்சினை தொடர்பாக உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஆராயவும். முதலுதவி தேவையாயின் வழங்கவும். பாதிக்கப்பட்டவரைக் கொண்டு செல்ல வாகன ஒழுங்கை உதவியாளனிடம் மேற்கொள்ளவும். அடுத்து வாகனம் வரும்வரை மயக்க மீள்நிலைக்கு சரித்தல். இந்த நிலைக்கு சரிப்பதன் நோக்கம் பாதிக்கப்பட்டவரின் சுவாசப்பாதை தொடர்ந்து நேரான நிலையில் இருப்பதற்கும் வாந்தி போன்றன வரும் போது இலகுவில் வெளியேறுவதற்கும் இந்த நிலை உதவும். சுவாசம் இல்லையெனில் உடனடியாக இதய சுவாச மீள் உயிர்ப்புச் செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவரது மார்புப் பகுதியில் இதயத்தை 30 தடவை அழுத்தவேண்டும். இதன் பின் வாய்க்கு வாய் 2 தடவை சுவாசம் வழங்கவேண்டும். இந்தச் செயற்பாட்டை மீள இதய சுவாசம் செயற்படும் வரைக்கும் அல்லது மருத்துவமனையில் மருத்துவரிடம் ஒப்படைக்கும் வரை செய்ய வேண்டும்.

**காயங்கள்**

உடற்கலங்கள், இழையங்கள் ஆகியவற்றில் ஏற்படும் சிதைவு காரணமாக நாடி, நாளம், மயிர்த்துழைக்குழாய்கள் ஏற்படுகின்ற பாதிப்பு காயம் எனப்படும். கண்டற்காயம், வெட்டுக் காயம், கிளிசல் காயம், துழைகாயம், சிராய்ப்புக் காயம் என வகைப்படும்.

குருதி கூடிய அளவு வெளியேறும் காயங்கள் நாடிநாளம் பாதிக்கப்பட்டிருக்கும். குருதி குறைந்தளவு வெளியேறும் காயங்கள் மயிர்த்துழைக்குழாய் பாதிக்கப்பட்டிருக்கும். குறைந்தளவுகுருதிவெளியேறும் காயங்கள் சம்பவ இடத்திலேயே முதலுதவிப் பெட்டியைக் கொண்டு காயத்தைத் துப்புரவு செய்துகொள்ளலாம்.

**முறிவு**

ஓர் என்பு உடைவு அல்லது சிதைவு அல்லது வளைவு முறிவு என்று சொல்லப்படும்.

முறிவு ஒன்றின் பின்வரும் அறிகுறிகள்
1. வீக்கம், வலி, அசைக்கமுடியாதநிலை
2. விகாரம்.

**முறிவுக்கான முதலுதவி**

1. முறிவு ஏற்பட்ட பகுதியை அசைக்காது இருக்கச் செய்தல்.
2. காயத்துடன் காணப்படின் காயங்களுக்கு முதலில் முதலுதவி செய்தல் அடுத்து முறிவுக்குரிய முதலுதவி.
3. வினைத் திறனாக அசையாது கட்டுத் துணியால் கட்டுதல்.
4. மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுதல்.
5. நீராகாரம் கொடுக்கக் கூடாது.

**மயக்கம் :**

மயக்கத்துக்குரிய காரணம் ஒட்சியேற்றப்பட்ட குருதி மூளைக்குச்செல்வது தற்காலிகமாகக் குறைவடைவது ஆகும்.

இதன் பின் முதலுதவி
1. கால்களை மேலே உயர்த்தவேண்டும். (மூளைக்குச் செல்லும் ஒட்சி குருதியைவிருத்தி செய்தல்)
2. சுத்தமான காற்று கிடைப்பதற்கு வழிசெய்தல்
3. நெஞ்சுப்பகுதி இடுப்புப் பகுதியில் உள்ள இறுக்கமானஆடைகளைத் தளர்த்துதல்.

**தீக்காயம்**

தீக்காயம் ஏற்படுவதில் சிறுவர்கள் பாதிக்கப்படுவது கூடுதலாக உள்ளது. ஏனெனில் தீப்பற்றக்கூடிய பொருள் களுடன் விளையாடுதல், தீயைப்பற்ற வைத்தல், தீ பற்றிய அவதானம் இன்மை, எனவே சிறுவர்கள் இருக்கும் இடத்தில் தீப்பற்றினால் முதலுதவி செய்யக்கூடியவை

1. தீயை அணைப்பதற்கு ஈரப்போர்வைஒன்றினால் பாதிக்கப்பட்டவரைச் சுற்றிநிறுத்துதல், விழுத்துதல், உருட்டுதல்.
2. ஓடும் நீரில் வேதனை குறையும்வரை குளிரச் செய்தல்
3. வீக்கம் ஏற்பட முன்பு அதாவது அணிகலன் ஒட்டாது இருப்பின் கழற்றிஎடுக்கவும்.
4. மெல்லிய பொலித்தீன் ஒன்றினால் பாதிக்கப்பட்ட பகுதியைச் சுற்றுதல்.
5. மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லுதல்.

**செய்யக்கூடாதவை :**

1. தொப்பளங்களை உடைக்கக்கூடாது.
2. காயத்தின் மீது வேறு ஏதும் போடக்கூடாது.
3. ஒட்டியிருக்கும் அணிகலன்கள் அகற்றக்கூடாது.

விபத்தின்போது பாதிக்கப்படுவர்களுக்கு முதலுதவி செய்வதன் மூலம் உயிரைக் காப்பாற்றுவோம். உயிர் காக்கும் உன்னத பணி முதலுதவி ஆகும்.

கட்டுரையாளர்:
முதலுதவிப் போதனாசிரியர்
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பேச்சுக்களால் பயன் ஏது?

அடுத்த அரச தலைவர் தேர்தலில் போட்டியிடும்சகலவேட்பாளர்களுடனும்பேச்சுநடத்தத் தயாராக உள்ளோம். பேச்சின் பின்னர் பங்காளிக் கட்சிகளுடன் விவாதித்து எவருக்கு ஆதரவு என்ற முடிவுக்கு வருவோம் எனத் தெரிவித்துள்ளார்தமிழ்தேசியக்கூட்டமைப்பின்தலைவரான இரா.சம்பந்தன்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ரணில்–சஜித் இடையிலானசந்திப்பின்போது, அரசதலைவர்தேர்தலில்போட்டியிடுவதற்கானவிருப்பத்தை சஜித் வெளிப்படுத்தியிருக்கின்றார். இதற்கு 'தேர்தலில் வெல்வதற்கு கூட்டமைப்பின் ஆதரவு தேவை. அந்த ஆதரவைப் பெற்றுவிட்டு வாருங்கள்' என்று ரணில் பதில் வழங்கியுள்ளார். இது தொடர்பில்தனதுநிலைப்பாட்டைத்தெரிவிக்கையிலேயே சம்பந்தன் இப்படிக் கூறியிருந்தார்.

பேச்சுக்கள்நடத்துவதும்வாக்குறுதிகளைப்பெற்றுக்கொள்வதும் கூட்டமைப்பினருக்கு ஒன்றும் புதிதல்ல. 2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவர் தேர்தலின்போதும்கூட மைத்திரியுடன் பல்வேறுபேச்சுக்களில்ஈடுபட்ட கூட்டமைப்பினர் அதன்பின்னரேஅவருக்கு ஆதரவு என்று முடிவெடுத்தனர். மைத்திரியை அரச தலைவராக்கியதன் மூலம் அவர்கள் பெற்றுக்கொண்ட பயன் ஏது?. அரச தலைவர் மைத்திரியை கூட்டமைப்பினர் விமர்சிப்பதும், கூட்டமைப்பினரை மைத்திரி விமர்சிப்பதும்தான் இன்று இடம்பெறுகின்றது.

பேச்சுக்களில்ஈடுபடுவதென்பது அவசியமானது. அதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. ஆனால் எவருடன் பேச்சில் ஈடுபடுகின்றோம் என்பதையும் அவர்கள் சிந்தித்தாக வேண்டும். பெரும்பான்மைஅரசியல்பிரதிநிதிகள்வழங்கிய வாக்குறுதிகளைக்காப்பாற்றத்திராணியற்றவர்கள் என்பதை கூட்டமைப்பினருக்கு குறிப்பாக முதிர்ந்தஅரசியல்வாதியானசம்பந்தனுக்குசொல்லித்தான் புரிய வேண்டும் என்றில்லை. இதற்கு வரலாற்று எடுத்துக்காட்டுகள் பல உள்ளன. கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படுதல், காணிவிடுவிப்பு, பௌத்தமயமாக்கல் நிறுத்தம், அரசியல் கைதிகளின் விவகாரம் என்று ஏகப்பட்ட சான்றுகளை கொட்டித் தீர்க்கலாம்.

வரலாற்றின் பாடப்புகட்டல் இதுவாக இருக்க கூட்டமைப்பினர் இனியும் பேச்சுக்களில் மூழ்கியிருப்பதைத்தவிர்த்தாக வேண்டும். தமது கோரிக்கைகளைநிறைவேற்றக்கூடியநபரைஉரியபொறிமுறையின்கீழ்அவர்கள்அடையாளம்காணவேண்டும். பெரும்பான்மை அரசியல் பிரதிநிதிகளின் பொய்மைகளையும் கபடத்தனங்களையும் அவர்கள்இனங்காணவேண்டும். வரலாறு மீண்டும்ஒரு வாய்ப்பைத் தந்துள்ளது. இதைத் தவறவிடுவார்களாயின்'எமதுவாக்குகளைப்பெற்றுஆட்சிப்பீடம் ஏறிய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன எம்மை ஏமாற்றிவிட்டார். நன்றிக் கடனை அவர் செலுத்தத் தவறிவிட்டார்' என்று தற்போது புலம்புவதைப் போன்று இன்னும் இரு வருடங்களில் மீண்டும்புலம்பவேண்டியதாகவிருக்கும். சிந்தித்துச் செயற்படும் இன்னொரு வாய்ப்பு இது.

# வறுமை ஒழிப்பை தாமதிப்பது நியாயமா?

இந்துமதி

இலங்கையொரு வளர்ந்து வரும் நாடு என்ற நிலையில் இருந்து வறிய நாடு என்ற நிலையை எட்டி நிற்கின்றது. வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஊழல் ,மோசடி,வீண்விரயம் ஆகிய காரணங்களால் அரச நிறுவனங்கள் பலவும் நட்டத்தில் இயங்கிவருகின்றன. இந்த நிறுவனங்களில் தகுதியும் திறமையும் நிரம்பியவர்கள் நியமிக்கப்படாது அதிகாரத்தில் இருப்பவர்களின் குடும்ப உறுப்பினர்களும் தெரிந்தவர்களும் தலைமைப் பதவிக்கு நியமிக்கப்படுவதே இந்த இழி நிலைக்கான காரணமாகும். ஆட்சியில் இருப்பவர்களும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதால் அரச நிறுவனங்களின் கதி மோசமான கட்டத்துக்குச் சென்றுவிட்டது.

### தண்டனை இல்லை

கடந்த ஆட்சிக்காலத்தில் பெருமளவு மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறப்பட்ட போதிலும் அவை தொடர்பாக நீதியான விசாரணைகள் இடம்பெற்று, குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அரசியல்வாதிகளின் தவறுகளால் சாதாரண பொதுமக்களே பாதிக்கப்படுகின்றனர்.

இன்றைய நிலையில் நாட்டின் தனிநபர் வருமானத்துக்கும் செலவினத்துக்கும் இடையேயான இடைவெளி என்றுமில்லாதவாறு அதிகரித்துவிட்டது. இதனால் வறுமை நிலைக்குள் மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். அன்றாடம் குறைந்தது ஆயிரத்தி ஐநூறு ரூபாவது சம்பாதித்தால்தான் ஒருசிறிய குடும்பத்தை நடத்த முடியுமென்ற நிலை காணப்படுகின்றது. இதனால் வேலைக்கு ஆள்களை அமர்த்துவதற்குப் பலரும் பின்னடிக்கின்றனர். இதனால் கூலிவேலை செய்து பிழைப்பவர்களின்பாடு பெரும் பாடாகவே மாறிவிட்டது.

### திட்டங்கள் இல்லை

அரசு பொருளாதாரச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலமாகவே நாட்டின் நிதி நிலையைச் சீர்செய்ய முடியும். ஆனால் இதற்கான திட்டங்கள் எதுவும் அரசிடம் இல்லை. இதற்கு மாறாக மக்களின் அன்றாடப் பாவனைப் பொருள்களின் விலைகளை அதிகரிப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றது. இதனால் ஏழை மற்றும் நடுத்தர மக்களே பாதிக்கப்படுகின்றனர். உள்ளூரில் உற்பத்தியாகும் தேயிலையைக் கூட மக்கள் அதிக விலைகொடுத்து வாங்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

ஏற்றுமதி குறைந்து இறக்குமதி அதிகரித்துள்ளதால் அந்நியச் செலாவணிக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது. தேசிய வருமானத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாகப் பொருள்களை இறக்குமதி செய்வதில் பெரும் சிக்கல் நிலையும் தோன்றியுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை அதிப்பதற்கான செயற்றிட்டங்களை அரசு உடனடியாக வகுத்துச் செயற்படவேண்டும். நாட்டுக்குத் தேவையான அனைத்தையும் இறக்குமதிசெய்து கொண்டிருக்க முடியாது.தற்போது பிறநாடுகளிலிருந்து பெறப்படுகின்ற கடன்கள் மூலமாகவே அநேகமான இறக்குமதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. மகிந்த ஆட்சியில் அபிவிருத்தியைக் காரணம் காட்டி சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்து பெரும் தொகைக் கடன்கள் பெறப்பட்டுள்ளன. இதனாலேயே அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவின் வசம் சென்றுள்ளது. கொழும்பிலும் துறைமுக நகர் என்ற போர்வையின் கீழ் சீனா தனது பிடியை இறுக்கியுள்ளது. சீனா விரித்த வலையில் இந்தநாடுவசமாகச்சிக்கிக்கொண்டுவிட்டது. இதிலிருந்து விடுபடுவது இலகுவான காரியமல்ல. பிறநாடுகளிலும் சீனா இவ்விதமாக நடந்துகொள்கின்றமை வழக்கமான நிகழ்வாகும்.

### வீணாகும் வளங்கள்

இந்த நாட்டைப் பொறுத்த வரையில் கால்நடைகளை வளர்ப்பதற்கான வளங்கள் நிறையவே உள்ளன. இதனால் நல்லினப் பசுக்களை வளர்ப்பதன் மூலமாக மக்களின் பால் தேவையை இலகுவாகவே பூர்த்திசெய்து கொள்ள முடியும். ஆனால் தொன்கணக்கில் பால்மாவை பெரும் தொகைப் பணத்துக்கு இறக்குமதி செய்துகொண்டிருக்கின்றது. இந்தப்பால் மாவிலும் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனங்கள் கலக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ள நிலையில் இறக்குமதி தொடரத்தான் செய்கின்றது. பால்மா மட்டுமல்லாது ஏனைய உணவுப்பொருள்களும் இறக்குமதிசெய்யப்படுகின்றன. மக்களின் முதன்மை உணவான அரிசியில் கூட தன்னிறைவு காண்பதற்கு அரசால் முடிய வில்லை.

இலங்கையொரு விவசாயநாடு என அழைக்கப்படுகின்ற போதிலும் சகல விவசாய உற்பத்திப் பொள்களும் இறக்குமதி செய்யப்படுவதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எமது அண்டை நாடான இந்தியா பசுமைப் புரட்சி என்ற பெயரில் விவசாய உற்பத்திகளிலும் வெண்மைப் புரட்சி என்ற பெயரில் பால் உற்பத்தியிலும் தன்னிறைவு அடைந்துள்ளது. ஆனால் நாமோ எந்தப்புரட்சியிலும் ஈடுபடாது பொருள்களை இறக்குமதி செய்வதிலும் கடன்களைப் பெறுவதிலும் புரட்சிசெய்து கொண்டிருக்கின்றோம். நாலா புறமும் கடலால் சூழப்பட்டது. இந்த நாடு மீன் வளத்துக்கும் இங்கு குறைவில்லை. .ஆனால் பெருமளவு தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களை இறக்குமதி செய்வதற்குத்தான் எம்மால் முடிகின்றது. ஆட்சியாளர்களின் திறமையின்மையும் மக்களின் சோம்பேறித்தனமுமே இத்தகைய கீழ்நிலைக் கான காரணங்களாகும்.

### தேசிய வருமானம் உயர வேண்டும்

உலகின் முதல் நிலை நாடான அமெரிக்கா தொழிற்றுறையில் மட்டுமல்லாது விவசாயத் துறையிலும் கொடிகட்டிப் பறக்கின்றது. எமக்குத் தேவையான கோதுமையை அங்கிருந்துதான் நாம்இறக்குமதி செய்கின்றோம். இந்த நாட்டில் வறுமை ஒழிக்கப்படவேண்டுமானால் நாட்டின் தேசிய வருமானம் உயர்ந்த நிலைக்குச் செய்ய வேண்டும். உற்பத்திகளை அதிகரித்து வேலையின்மையையும் அதிகரித்து வேலையின்மையையும் போக்குவதன் மூலமே இலங்கையொரு வறிய நாடு என்ற இழி நிலையிலிருந்து விடுபட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்றலுக்கான நம்பிக்கையை வளர்க்கும் ஆசிரியத்துவம்

■ நடேசுதயாளன்

கற்றலுக்கான நம்பிக்கையை வளர்த்தல் என்பது ஆசிரியப் பணியில் முக்கியமானதாகும். மாணவர்களைப் பொறுத்தவரையில் சுயகட்டுப்பாடு என்பது இயல்பான ஆளுமைத் திறனாகும். மாணவர்களிடத்தில் இது காணப்படுவதாகவோ அல்லது இல்லாதுள்ள நிலையோ காணப்படுகின்றது. சுய நம்பிக்கையுள்ள கற்போனது கற்கும் திறனானது அதிகரித்தளவில் காணப்படும் என்பதோடு தனது இலக்கை எவ்வாறுஅடையலாம் என்பது தொடர்பான அறிவுடையவனாகவும் விளங்குவான். தன்னம்பிக்கையற்ற மாணவர்கள் புதிய கற்றல் முறைகளில் நம்பிக்கையற்றவர்களாகவும் தங்களது இயலுமைதொடர்பில் வினா எழுப்புபவர்களாகவும் கூச்ச சுபாவமுள்ளவர்களாகவும் விளங்குவர்.



கற்றலுக்கான நம்பிக்கையை ஆக்க மலர்ச்சியான கற்பித்தல் தந்திரோபாயங்களூடாக வளர்க்கமுடியும். ஆசிரியர்களானவர்கள் மாணவர்களிடத்தில் நம்பிக்கையினையும் பெருமை உணர்வையும் பெற்றுக் கொடுப்பதில் சக்திமிகு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

பிள்ளையைப் பலர் முன்னிலையிலோ தனியாகவோ பாராட்டுதல், செயற்பாடுகளை ஏற்றுக் கொள்ளுதல், எப்பொழுதும் குறித்த மாணவர்கள் தொடர்பில் நேரான கருத்துக்களை முன்வைத்தல், பிள்ளைஉரையாடும் போது இடையூறு செய்யாதிருத்தல், அடையக் கூடிய இலக்குகள் தொடர்பில் தெளிவான கருத்துருவாக்கத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்துதல், பிள்ளைக்கு வாய்ப்புக்களை வழங்குவதோடு அவர்கள் தமக்கேயுரித்தான கற்றல் நிலைகளுக்கு வாய்ப்பளித்தல், பிள்ளைகளிடம் நேரான மனப் பாங்குகளைக் கட்டியெழுப்புதல்., இதன்மூலம் பிள்ளைகளிடம் ஆசிரியரானவர் தன் பக்கமேயுள்ளார் என்ற உணர்வு ஏற்படுவதாக இருக்கும்.

பிள்ளையானது தனது பலத்தைக் கட்டியெழுப்புவதற்கானவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவனது திறன்களை விருத்தி செய்தல் பிள்ளையை ஊக்கப்படுத்துதல் மூலம் அவனது திறன்களை விருத்தி செய்தல் பிள்ளையை ஊக்கப்படுத்தவதன் மூலம் முன்னர் மேற்கொண்டசெயற்பாட்டிலும்பார்க்க வினைத்திறனான செயற்பாட்டை மேற்கொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளல் என்பன அவசியமானதாகும். ஆசிரியரானவர் தனது சிறப்பான செயற்பாட்டின்மூலம் பிள்ளையின் செயற்பாடுகளை நெறிப்படுத்திக் கொள்ள முடியும்.

வகுப்பறைச் செயற்பாடுகளை அங்கீகரித்தலும் ஊக்குவித்தலும் பிள்ளையினுடைய சுய நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவுவதாகவும் இருக்கும். ஆரம்பப் பிரிவுப் பிள்ளையிடம் தாளின் நடுவில் படம் ஒன்றை வரையஅல்லது ஒட்டுவதற்கு வழங்கி ஒட்டிய படத்தைச் சுற்றிதான் விரும்பிய படங்களை ஒட்டவோ, வரையவோ வாய்ப்பு வழங்கி அதை ஊக்குவிக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் புதுப்புது எண்ணங்களை வெளிப்படுத்துபவர்களாக விளங்குவர்.




சிறந்த ஆசிரியரிடம் ஆறு வகையான நற்பண்புகளைக் காணமுடியும். அவற்றைச் சிறப்பான முறையில் வகுப்பறையில் பிரயோகிக்கும்போது வெற்றி வாய்ப்புக்கள் அதிகரிக்கும் நிலையு முள்ளது. சிறந்த ஆசிரியரானவர் பிள்ளையிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவராக விளங்குவார். பிள்ளையிடம் காணப்படுகின்ற நம்பிக்கையற்ற நிலையானது அவனிடம் கற்றலுக்கான தடையைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. பிள்ளையிடம் இத்தகைய நிலையை இல்லாது செய்தல் அவசியமானதாகும். பெரும்பாலான மாணவர்கள் ஆசிரியர்கள் தம்மை நம்புவதில்லை என்ற மனப்பாங்கை உடையவர்களாக உள்ளனர்.

அதுமட்டுமன்றி வளர்ந்தோர் தம்மை நம்புவதில்லை என்ற உணர்வுடையவராகவும் உள்ளார். இந்த நிலையானது பிள்ளையிடம் நடத்தைப் பிரச்சினைகள், கல்விசார் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாகவுள்ளது. இத்தகைய பிள்ளையே வகுப்பறை நிலமைகளிலும் குழப்பத்துக்குரிதாகவுள்ளது.

இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்த ஆசிரியரானவர் ஒழுக்கத்திறன், வகுப்பறை முகாமைத்துவத் திறன், அவதானிக்கும் திறன், பிள்ளையைச் செயலில் ஈடுபடுத்தும் திறன், பெற்றோர் பிள்ளைகளுடனான வலுவான தொடர்பாடற் திறன், கற்பிக்கும் திறன், நேர முகாமைத்துவத் திறன், சிறப்பான திட்டமிடற் திறன், நேர் மனப்பாங்கு குழு உணர்வுடன் இயங்கும் திறன், பொறுமையுணர்வு என்பன நிரம்பப் பெற்றவராக விளங்குதல் அவசியம். இந்த நிலையைப் பெற்ற ஆசிரியரானவர் மாணவர்களிடம் கற்றலுக்கானநம்பிக்கையை வளர்ப்பதற்குத் தன்னைத் தயார்ப்படுத்துவது காலத்தின் தேவையாகவுள்ளது.

கட்டுரையாளர்: அதிபர்

## ஆசிரியருக்கான கடிதம்

# ஏனிந்த தேவையில்லாத கடை அடைப்பு?

தமிழ் மக்கள் தமது குறைகளை உலகம் அறியச் செய்யும் வகையில் எத்தனை பேரணிகளையும் நடத்தலாம்.

அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் அவை மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துவதாக இருந்துவிடக்கூடாது.

எதிர்வரும் 16 ஆம் திகதி தமிழ் மக்கள் பேரவையின் அழைப்பின்பேரில் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது. ஆரம்பத்தில் இந்தப் பேரணியின் பொருட்டு கடையடைப்பு இடம்பெறாதெனவும் எந்தவொரு செயற்பாடும் இடையூறுகளின்றி இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அன்றையதினம் கடையடைப்பு முழுமையாக நடைமுறையில் இருக்குமெனவும் பாடசாலைகள் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இயங்காதெனவும் போக்குவரத்துக்கள் முற்றாகவே முடங்குமெனவும் சந்தைகள் பூட்டப்பட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாகக் கூறினால் அன்றையதினம் பூரண ஹர்த்தால் தினம் போன்று இருக்குமென்று உறுதியாகிவிட்டது.

இதனால் பாதிக்கப்படப்போவது சாதாரண பொதுமக்கள்தான் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்கள் அரச அலுவலகர்களுக்கு விடுமுறை என்பதால் திங்கட்கிழமையும் அவை இயங்காவிட்டால் மக்கள் தமது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். வங்கிச் சேவைகளும் முடங்கிவிடுமானால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். போக்குவரத்துச் சேவைகள் முற்றாக முடங்கி விடுமானால் மருத்துவ மனைகளுக்கும் வேறு அவசர தேவைகளுக்கும் பயணங்களை மேற்கொள்வதில் ஏழை எளிய மக்கள் இன்னல்களை எதிர்கொள்வார்கள். பாடசாலைகள் மூடப்படுவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படும்.

போதும் சந்தைகள் மற்றும் கடைகள் அடைக்கப்படுமானால் தமக்குத் தேவையான பொருள்களை அன்றாடம் வாங்குகின்ற மக்கள் அவல நிலைக்குத் தள்ளப்படுவார்கள். பேரணியை ஒழுங்காக நடத்திக் காட்டட்டும். இதை விடுத்து ஏனிந்தத் தேவையில்லாத கடை அடைப்பு.

*மா.புவனேஸ்வரி, சுதுமலை.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு, அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த [illegible] மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17ஆம் திகதி முதல் விவசாய கண்காட்சி

## திருநெல்வேலியில் 4 தினங்கள் நடக்கும்

யாழ்ப்பாணம்,செப்.14

'காலநிலை மாற்றத்தை எதிர்கொண்டு நஞ்சற்ற உணவு உற்பத்தியில் தன்னிறைவு நோக்கி' என்னும் தொனிப்பொருளில் கண்காட்சியொன்று யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்களத் தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண்காட்சியானது எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சிநிலையம், விவசாய ஆராய்ச்சி நிலையம், வளிமண்டலவியல்திணைக் களம் மற்றும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய வளாகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண விவசாயப் பணிப் பாளர் சி.சிவகுமார் தலைமையில் நடை பெறும் கண்காட்சியில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்தக்கண்காட்சியை விவசாயிகள், மாணவர்கள், பல்வேறுபட்ட அமைப் புக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பார்வையிட்டு பயனடையும் வகையில் 43 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி சிறீரங்கன் தெரிவித் துள்ளார். (ஐ-7)

## குடமுழுக்கு

கொடிகாமம், செப்.14

யாழ்ப்பாணம் சாவகச்சேரி வரணி கோவில் பற்று மந்துவில் வடக்கு குடியிருப்பு கியான் ஞான வைரவர் ஆலய குடமுழுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையுள்ள சுபநேரத் தில் நடைபெறவுள்ளது. எண்ணெய்க் காப்பு சாத் தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை இடம்பெ றும் என்று ஆலய உப யகாரர்கள் அறிவித் துள்ளனர். (ஐ)

## இரு நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.14

அகவை 80 காணும் சோ.பத்மநாதனின் (சோ.ப) இரு நூல்கள் இன்று சனிக்கிழமை வெளியிடப்படவுள்ளன. இந்த நிகழ்வு யாழ்ப்பா ணம்நீராவியடிஇலங்கை வேந்தன் கலைக் கல்லூ ரியில் முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள் ளது.

பேராசிரியர் சி.சிவலிங்க ராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட் டாளர்கள் அறிவித்துள் ளனர்.

'நோக்கு','ஏ சோபா மிக் சீலனி' ( A sopa miscellany) ஆகிய இரு நூல் களே வெளியிடப்படவுள் ளன. (ஐ)

## தமிழ்தினப் போட்டியில் நெல்லியடி ம.கல்லூரி மாணவன் முதலிடம்



யாழ்ப்பாணம்,செப்.14

தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் நெல் லியடி மத்திய கல்லூரி மாணவன் முதலிடம் பெற்றுள்ளார்.

இலங்கைப் பாடசாலை களுக்கு இடையிலான தேசிய மட்ட தமிழ் தினப் போட்டி கல்வி அமைச் சின் முதன்மை மண்ட பத்தில் அண்மையில் நடை பெற்றது.

இதில் பிரிவு 4 இல் "கட் டுரை வரைதலும் இலக் கிய நயத்தலும்'' போட்டி யில் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவன் சி.கஜன் முதலாம் இடத் தைப் பெற்றுள்ளார். (க-422)

## தென்மராட்சிக் கல்வி வலய முழுநிலா கலை நிகழ்வு

சாவகச்சேரி, செப்.14

தென்மராட்சி கல்வி வலயத்தின் முழுநிலா நாள் கலை நிகழ்வு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத் தில் நேற்று இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசர ணையுடன் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற் றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் மாகாண கல்வித் திணைக்கள அழ கியல் பாட ஆசிரிய வளவாளர் திருமதி மதிவதனி விக் னராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

முற்றுமுழுதாக மாணவர்களின் ஆற்றுகைகளுடன் சிறப்பாக நிகழ்வு இடம்பெற்றது.

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் மங்கல இசை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவி களின் வரவேற்பு நடனம், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவர்களின் தமிழமுதம் இசை,கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய மாணவிகளின் தேயிலைக் கொழுந்து நடனம், கைதடி நவீல்ட் பாட சாலை சிறப்புத் தேவையுடைய மாணவிகளின் நடனம், கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி மாணவி களின் வாள் நடனம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவிகளின் கண்ணன் ஆடல், இந்துக் கல்லூரி மாணவர்களின் தில்லானாவுடன் திருப்புகழ் ஆகிய கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

வரணியைச் சேர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியற்றுறை பேராசிரியர் செல்வரத்தினம் மதிப்ப ளிக்கப்பட்டார். (ஐ-9)







வடலியடைப்பு புதானை சிறி சித்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. (க)

## சரஸ்வதி சிலை திறப்பு

கொடிகாமம்,செப்.14

யாழ்ப்பாணம் மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை யில் நிறுவப்பட்ட சரஸ்வதி சிலை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.



பாடசாலை அதி பர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் விருந் தினர்களாக தென்மராட்சி வல யக் கல்வி பணிப் பாளர் த.கிருபாக ரன், தமிழ் பாட ஆசிரிய ஆலோ சகர் வே.உதயகு மார், மீசாலை வீரசிங்கம் மத் திய கல்லூரி அதி பர் த. அம்பலவாணர் உட்பட பலர் கலந்து கொண்டனர் பழைய மாணவர் சங்கத்தின் போசகர் இ.இராசலிங்கத் தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நான்கு லட்சத்து 50 ஆயி ரம் ரூபா செலவில் சரஸ்வதி சிலையுடன் கூடிய மாடம் அமைக்கப்பட்டு அவரது பெற்றோரால் திறந்து வைக் கப்பட்டது. (ஐ-159)

## வீதித் தடையை அகற்றுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.14

பொன்னாலைச் சந்தி யில் கடற்படையினரால் அமைக்கப்பட்டுள்ள வீதித்தடைகளை அகற்றி, போக்குவரத்து இடையூ றுகளை நீக்க வேண் டும் என்று வலி.மேற் குப் பிரதேச சபை உறுப் பினர் ந.பொன்ராசா சபையில் கோரிக்கை விடுத்தார்.

பிரதேச சபையின் சாதா ரண பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. அதில் அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்ப வத்துக்குப் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கை களுக்காக வீதிச் சோத னைச் சாவடிகள் அமைக்கப்பட்டன.

பொன்னாலைச்சந்தியில் காரைநகருக்குச் செல் லும் வீதியில் இந்த வீதித் தடைகள் ஏற்படுத்தப் பட்டுசோதனைகள் இடம் பெற்றன.

ஆனையிறவு, பூநகரி உட்பட முதன்மை வீதிக ளில் சோதனைச் சாவடி கள் மற்றும் வீதித் தடை கள் தற்போது அகற்றப் பட்ட நிலையில், பொன் னாலைச் சந்தியில் மட் டும் வீதித் தடைகள் அகற்றப்படவில்லை.

இதனால் வாகனங் களுக்கு போக்குவரத் துச் சிரமங்கள் ஏற்படுகின்றன என்று உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

இதனைக் கவனத்தில் எடுத்த தவிசாளர் த.நட னேந்திரன், உடனடியா கவே காரைநகர் கடற் படை அதிகாரியுடன் தொலைபேசி ஊடாக உரையாடி விடயத்தைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் கடிதம் ஒன்றை அனுப்புமாறும் அதன் பின்னர் தாம் நட வடிக்கை எடுப்போம் என்று அதிகாரி தெரி வித்தார் என்று தவிசாளர் தெரிவித்தார். (க)

## குருதிக்கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.14

குருதிக் கொடை முகாம் நாளை ஞாயிற்று க்கிழமை யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் (சேர். பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி) காலை 9 மணி தொடக் கம் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மதிப்பளிப்பு நிகழ்வு

கொடிகாமம், செப்.14
கொடிகாமம் திருநா வுக்கரசு மத்திய கல்லூரியில் உடற்பயிற்சி போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி.கி.பிரதீபா கலந்துகொண்டார்.

மேலும் நிகழ்வில் தமிழ் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜெய தேவன், தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் வே.உதயகுமார், சமய பாட ஆசிரிய ஆலோசகர் கே.கமலேஸ்வரன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாகாணமட்டப்போட்டியில் 20 வயதின் கீழ் ஆண்கள் அணியில் 30 மாணவர்கள் பங்கு பற்றி முதன்முறையாக மூன்றாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

"மாணவர்கள் போட்டிகளில்பங்குபற்றும்போதும், பயிற்சிகளின் போதும் அவர்களின் உடல் உள ஆரோக்கியத்தை நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும். பெற்றோர்கள் மிகுந்த அக்கறையோடு கவனிக்க வேண்டும்". இவ்வாறு முதன்மை விருந்தினர் தனது உரையில் தெரிவித்தார். (ஐ-159)

## சிக்கன கூட்டுறவு சமாசத்தினர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,செப்.14
வவுனியா மாவட்ட சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினர், வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை கடந்த புதன்கிழமை சந்தித்தனர்.

கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் சமாசத்தின் நிதித் தேவைப்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆளுநருடனான சந்திப்பை அடுத்து, புதிதாக யாழ்ப்பாணம் கைதடியில் திறந்து வைக்கப்பட்டுள்ள வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் ஆளுநர் சபை உறுப்பினர் சுசீந்திரனை, சமாசத்தினர் வங்கி அலுவலகத்தில் சந்தித்தனர்.

சந்திப்பில் வங்கியிலிருந்து சமாசத்துக்குத் தேவையான கடன்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. சமாசத்தின் தலைவர், செயலர், இயக்குனர் சபை உறுப்பினர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர். (க-222)

## ஹாட்லிக் கல்லூரியில் தொழில்நுட்பக்கூடம் திறப்பு

வடமராட்சி,செப்.14
யாழ்ப்பாணம் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் 6 கோடி ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடி தொழில்நுட்பக்கூடம் கடந்த திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

கல்லூரி அதிபர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு தொழில்நுட்பக்கூடத்தைத் திறந்துவைத்தார்.

நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன், ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், பருத்தித்துறை நகர பிதா யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் அ.சா.அரியகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ஐ-22,173)

# 24 மணித்தியாலத்தில் ஐயாயிரம் வீடுகள்

## ஜனவரி முதல் அமைக்கத் திட்டம்

யாழ்ப்பாணம், செப். 14

**2020** ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 24 மணித்தியாலத்தில் 5 ஆயிரம் வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வருகை தந்த சஜித் பிரேமதாச வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட வீட்டுத் திட்டங்களைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;

2025 ஆம் ஆண்டு 20 ஆயிரம் வீடுகளை நாடு முழுவதும் திறந்து வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த நாட்டில் வீடுகளின்றி எவரும் இருக்காது அனைவருக்கும் வீடுகள் என்ற அடிப்படையில் வீடுகளை வழங்குவதே எமது நோக்கம். இந்த 20 ஆயிரம் வீடுகளையும் நாங்கள் நான்கு படிநிலைகளில் ஆரம்பித்திருக்கிறோம். முதலாவது கட்டமாக 2 ஆயிரத்து 500 வீடுகளை இந்த வருடத்தில் செப்ரெம்பர் மாதம் இறுதிப் பகுதியில் முடிப்பதற்கு திட்டமிட்டோம்.


ஆனால் எங்களுடைய திறமையான அதிகாரிகளைக் கொண்டு 2 ஆயிரத்து 500 வீடுகளையும், ஜூன் மாதம் 15 ஆம்திகதியேகட்டிமுடித்துள்ளோம். இந்த 2 ஆயிரத்து 500 வீடுகளையும் உருவாக்கியது ஒரு காணிக்குள் ஒரு வீட்டை மட்டும் அமைப்பது என்ற அடிப்படையிலேயே. இரண்டாம், மூன்றாம் நான்காம் கட்டங்களில் எஞ்சியுள்ள 17 ஆயிரத்து 500 வீடுகளை எதிர்வரும் வருடத்திலே ஆரம்பிக்க விருக்கிறோம்.


அந்த வீடுகள் ஒரு காணிக்குள்ளேயே தட்டு மாடிகளாக அமைக்கப் படவுள்ளன. இந்த வேலைத் திட்டங்கள் ஜனவரி மாதத்திலே ஆரம்பிக்கப்படும். 24 மணித்தியாலத்துக்குள் கிட்டத்திட்ட 5 ஆயிரம் வீடுகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

எங்களுடைய அரசை அமைத்து கடந்த வருடங்களிலே வீடுகளைக் கட்டியுள்ளோம். அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் 159 வீட்டுத் திட்டங்களும், வடக்கில் மொத்தமாக 772 வீட்டுத் திட்டங்களும் ஆரம்பித்திருக்கிறோம்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 190 வீட்டுத் திட்டங்களையும், கிளி நொச்சியில் 102 வீட்டுத் திட்டங்களையும், மன்னாரில் 143 வீட்டுத் திட்டங்களையும், வவுனியாவில் 142 வீட்டுத் திட்டங்களையும், வவுனியா மேற்கில் 36 வீட்டுத் திட்டங்களையும் அமைத்துள்ளோம். இலங்கையில் 9 மாகாணங்கள் காணப்படுகின்றன. அவற்றில் அதிகப்படியான வீட்டுத் திட்டங்களை அமைத்துக் கொண்டு வரும் மாகாணம் வடக்கு மாகாணமே - என்றார். (க-21)











தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது. (க-37,26,173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் கொள்ளையர்களால் அச்சுறுத்தப்படும் உறுப்பினர்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு சபையில் கோரிக்கை

முல்லைத்தீவு, செப்.14

மணல் கொள்ளையர்களால், பிரதேச சபை உறுப்பினர்கள் அச்சுறுத்தப்படுவதைக் கட்டுப்படுத்த சபை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் மு.முகுந்தகஜன் சபையின் கோரிக்கை விடுத்தார்.

பிரதேச சபையின் இந்த மாத அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. கடந்த மாதம் 28 ஆம் திகதியன்று, மணற் கொள்ளையரால், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் சத்தியசீலன் வழிமறிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டார். இது தொடர்பில் சபையில் விவாதங்கள் இடம்பெற்றன.

இதன் போது சபை உறுப்பினர் முகுந்த கஜன் தெரிவித்ததாவது:

சட்டவிரோதமாக அகழப்படும் மணல், கிரவல், கல் சம்பந்தமான தீர்மானங்கள் சபையில் ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ளன. அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலிலும் வலியுறுத்தப்பட்டன. இருந்தும் அவற்றுக்கான நடவடிக்கை இன்று வரை மேற்கொள்ளப்படவில்லை.

சபை உறுப்பினர் சத்தியசீலன், குடும்பத்தாருடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது மணற் கொள்ளையரால் வழிமறிக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளார். குறித்த மணற் கொள்ளையர் மணவாளன்பட்டமுறிப்பில் சட்ட விரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ளார். அரச திணைக்களங்களும், பொலிஸாரும் துணைபோகின்ற விதத்தில் அங்கு மணல் அகழ்வு இடம்பெறுகின்றன.

இது தொடர்பாக ஒட்டுசுட்டான் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. சபையில் தீர்மானமாகவும் நிறைவேற்றியிருந்தோம். ஆனால் குறித்த நபர் எமது சபை உறுப்பினரின் வாகனத்தை இடைமறித்து அவருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார். பொலிஸார் வந்தே சபை உறுப்பினரை மீட்டெடுத்துச் சென்றுள்ளனர்.

இந்த அச்சுறுத்தல் நடவடிக்கை எமது சபையையும், எங்களையும், எங்களது நடவடிக்கைகளையும் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது. எந்தவொரு அனுமதியுமில்லாமல், எமது வளங்களை அள்ளிக் கொண்டு போகின்ற மணல் கொள்ளையர்கள் இவ்வாறு செயற்பட்டுள்ளனர். சபை உறுப்பினருக்கு அச்சுறுத்தல் இடம்பெற்றதைப் போன்று, நாளை தவிசாளருக்கும், ஏனைய சபை உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல் நிலைமைகள் ஏற்படலாம்.

மாவட்டம் விட்டு மாவட்டம் வந்து எங்கள் பிரதேசத்தினுள் சட்டவிரோத தொழிலில் ஈடுபடும் ஒருவருக்கு இவ்வாறான துணிச்சல் இருந்தால், மக்கள் பிரதிநிதியாக இருக்கின்ற எமது உயிருக்கு சபை என்ன பொறுப்புக் கூறப்போகின்றது.

சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாட்டாது. ஏனெனில் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அனைத்தும் சட்டத்துக்கு எதிரான திணைக்களங்க ளாகவே செயற்பட்டு வருகின்றன. இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை சபை மேற்கொள்ளவேண்டும்.

இது தொடர்பில் வடபிராந்திய பொலிஸ்மா அதிபருக்கும், முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கும் அறிவிக்க வேண்டும். சபை சார்பாக இதற்கு ஓர் ஆய்வுக்குழுவை நியமிக்க வேண்டும். அந்த ஆய்வுக்குழு கனியவளங்கள், வனவளத் திணைக்களம் என அனைத்துத் திணைக்களங்களுடனும் இணைந்து, இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பில் ஆய்வு செய்ய வேண்டும்.

அதன் மூலம் அங்கு இடம்பெறும் மணற்கொள்ளைகளையும், மணல் கொள்ளையர்களின் செயற்பாடுகளையும் நன்கு அறியக்கூடியதாக இருக்கும்.

சபை உறுப்பினர் மீது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதென்பது வேதனைக்குரிய விடயம். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்-என்றார்.

(க-246)

# பனைநின்றான் கிராமத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

முல்லைத்தீவு, செப்.14

ஒட்டுசுட்டான் பனைநின்றான்கிராமத்தில்அமைக்கப்பட்ட குடிதண்ணீர் சுத்திகரிப்புநிலையம்நேற்று முன்தினம்திறந்துவைக்கப்பட்டது.

சத்தியசாயிநிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் வி.மனோகரன் மற்றும்64ஆவதுபடைப் பிரிவின் தளபதி மேஜர் ஜென்ரல்கீர்த்திகொஸ்தா ஆகியோர்நிலையத்தைத் திறந்து வைத்தனர்.

நிகழ்வில் ஒட்டுசுட்டான் உதவி பிரதேச செயலாளர் இ.ரமேஸ், கிராம அலுவலர்மற்றும்அபிவிருத்தி அலுவலர் கலந்து கொண்டனர்.

64 ஆம் படைப்பிரிவின் மேஜர் ஜெனரல் கீர்த்தி கொஸ்தா அவரின் வேண்டுகோளுக்கு இணங்க, சத்திய சாயி நிறுவனத்தின் குடி தண்ணீர் செயல் திட்டத்தின் கீழ் இராணுவத்தினரால் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

(க-70)





யாழ்ப்பாணம் சாவகச்சேரி செருக்கல்பதி சித்தி விநாயகர் ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்பாக இடம்பெற்றது. மழை பெய்தவேளையிலும் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் தேர் இழுத்துச் சென்றதைக் காணக் கூடியதாகவிருந்தது. (ஐ-9)

### கையகப்படுத்தியுள்ள 40,000 ஏக்கரில்

# 25,000 ஏக்கர் நிலத்தை மக்களிடம் வழங்கவும்

## தலைமைஅமைச்சர் அலுவலகம் வனஜீவராசிகள் அமைச்சுக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், செப். 14

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வனஜீவராசிகள் திணைக்களத்தால் அரசிதழ்பிரசுரிக்கப்பட்ட40ஆயிரம் ஏக்கர் நிலத்தில் 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தை மீள மக்களிடமே வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தலைமைஅமைச்சர் அலுவலகம் வனஜீவராசிகள் அமைச்சுக்கு எழுத்தில் கடிதம் அனுப்பிவைத்துள்ளது. அதன் பிரதி யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு சில நாள்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்விடங்கள், தொழில் மையங்கள், மதவழிபாட்டுத்தலங் கள் என அனைத்தையும் உள்ளடக்கி எவருக்குமே தெரியாமல் கடந்த ஆட்சியில் 42 ஆயிரம் ஏக்கர் நிலத்தை வனஜீவராசிகள் திணைக்களம் இரகசியமாக அரசிதழ் பிரசுரித்து தனது ஆளுகைக்குள் எடுத்துக்கொண்டது. இதனால் இந்தப் பகுதியில் வாழ்ந்த பலஆயிரம்குடும்பங்கள் இருப்பிடத்தையும் மேலும் பல ஆயிரம் குடும்பங்கள் தொழில் வாய்ப்பையும் இழந்தன.

இதனைக் கருத்திற் கொண்டு பல கட்ட முயற்சியின் பின்னர் குறித்த பகுதியிலிருந்து 25 ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவிக்க குறித்த திணைக்களம் இணக்கம் தெரிவித்தது. இருப்பினும் அது இன்றுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்து 2 ஆண்டுகள் கடந்தபோதும் எந்த முன்னேற்றமும் கிடையாது. இதனால் 25ஆயிரம் ஏக்கர் நிலத்தை விடுவிக்க குறித்த திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றும்அதற்கு தலைமைஅமைச்சர் உத்தரவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடந்த ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதன்போது, "குறித்த திணைக்களத்திடம் இவை தொடர்பில் கோரினால் போதிய விளக்கமளிப்பதில்லை. ஏதாவது கடிதம் அனுப்பினால்கூட தனியே சிங்களமொழியில் கடிதம் அனுப்பி வைக்கப்படுகின்றது. தமிழ் தெரியாது விட்டால் ஆங்கிலத்தையாவது உபயோகம் செய்து மக்களின் விடயத்துக்குத் தீர்வை வையுங்கள்" என்றுஆளுநர்சுரேன் ராகவனும்தனதுகருத்தை தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த திணைக்கள அதிகாரி, இந்தவிடயம் தொடர்பில் மீண்டும் அரசிதழ் வெளியீடு செய்ய நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. என்றார்.

இவை தொடர்பில் பதிலளித்த தலைமைஅமைச்சர், அதற்காக மக்களின் கருத்தும் பெறப்பட்டுள்ளது. உரிய நடவடிக்கைகள் இடம்பெற்று அரசிதழ் வெளிவரும் என்றார். இதன்போது, அரசுடைமையாக்குவதாக அரசிதழ் அறிவித்தல் வெளியிடும் போது பின்பற்றாத நடைமுறை அதனை விடுவிப்பதற்கு மட்டும் கோருவது எந்த வகையில் நியாயமானது?. என்று கேள்வியெழுப்பியிருந்தார்.

இதனை மக்களின் பணியாகக் கருதி உங்கள் திணைக்களத்துக்குத் தெரிவித்து உடன் பணியை நிறைவேற்றுங்கள் எனவும் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் மேற்குறித்த பணிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

(த-105)

# பாகிஸ்தான் நாட்டவருக்கு ஆயுள் தண்டனை விதிப்பு

கொழும்பு, செப்.14

ஹெறோயின் போதைப் பொருளை நாட்டுக்கு இறக்குமதி செய்த குற்றத்துக்காக 7 பாகிஸ்தானிய நாட்டவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு ஹெறோயின் போதைப் பொருளை இறக்குமதி செய்தமை, அவற்றை சூட்சுமமாக விற்பனை செய்தமை ஆகிய குற்றங்களுக்காக சந்தேகநபர்களை பொலிஸ் போதைப் பொருள் பணியகம் கைது செய்தது.

6 பாகிஸ்தானிய குடிமக்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்டவர்கள் சுங்க பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, பொலிஸ் போதைப் பொருள் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னரே நீதிமன்றத்தால் இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

7 சந்தேக நபர்களும் 3 குற்றச் சாட்டுக்களையும்ஏற்றுக்கொண்டதை அடுத்து நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பாடசாலை ஆவணங்கள் விசமிகளால் தீக்கிரை

கிளிநொச்சி,செப்.14
கிளிநொச்சி கோணாவில் மகா வித்தியாலயத்தின் அதிபர் அலுவலகத்துக்கு நேற்றுக் காலை விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்த அனைத்து ஆவணங்களும் தீக்கிரையாக்க ப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

க.பொ.த சதாரண தர மாணவர்களுக்கு இடம்பெறுகின்ற காலை வகுப்புக்குமாணவர்கள்பாடசாலைக்குச் சென்ற போது, அதிபர் அலுவலகத்துக்குள்ளிருந்துபுகைவெளியேறுவதனை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து மாணவர்கள்உடனடியாகவகுப்புக்குப்பொறுப்பானஆசிரியருக்கு அறிவித்துள்ளனர்.

மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தினர்.

அதிபர் அலுவலகத்தின் கதவு உடைக்கப்பட்டுள்ளது.

அங்கு மண்ணெண்ய் மணம் வீசிய தோடு, தீப்பெட்டி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவர்களின் பிறப்புச் சான்றிதழ், பரீட்சைப்பெறுபேறுஆவணங்கள், ஆசியர்கள்தனிப்பட்டவிடயங்கள் அடங்கிய கோவைகள், மாணவர்களின் வரவுப் பத்திரங்கள் என அனைத்து ஆவணங்களும் எரிந்துள்ளன.

பாடசாலையின் கணக்கு நடவடிக்கைகள் அடங்கியஆவணங்கள்கொண்ட அலுமாரி ஒன்று காப்பற்றப்பட்டுள்ளதுஎன்றுபாடசாலை அதிபர் தெரிவித்தார்.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர், கரைச்சிக் கோட்டக் கல்வி அதிகாரி ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று நிலமைகளைப்பார்வையிட்டனர். மேலதிகவிசாரணைகளைக் கிளிநொச்சி பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

(க-222,105,21)

## முல்லைப் படைகளிடம் 2,278 ஏக்கர் நிலமுள்ளது

### மாவட்டச் செயலர் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 14

முல்லைத்தீவு மாவட்டத்தில் படையினர் வசம் 2 ஆயிரத்தி 278 ஏக்கர் நிலமும் திணைக்களங்களின் பிடியில் 26 ஆயிரத்து 504 ஏக்கர் நிலமும் உள்ளது என்று மாவட்டச் செயலர் எழுத்தில் அறிவித்துள்ளார்.

மாவட்டத்தில் படையினர் மற்றும் திணைக்களங்களின் பிடியில் உள்ள நிலங்கள்தொடர்பில்கிளிநொச்சிமாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்திலேயே மாவட்ட செயலர் மேற்படி தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இவற்றின்அடிப்படையில்முல்லைத்தீவு மாவட்டத்தில்இராணுவத்திடம்ஆயிரத்து 694.5 ஏக்கர்அரசநிலமும் சிவில்பாதுகாப்புத் திணைக்க ளத்திடம் 51.5 ஏக்கர் அரச நிலமும் உள்ளது. தனியார் நிலங்களில் இராணுவத்தினரிடம் 114.75 ஏக்கர்நிலமும்கடற்படையினரிடம்48ஏக்கர் நிலமும்உள்ளதுஎனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றின் அடிப்படையிலேயே 2 ஆயிரத்து 278 ஏக்கர் நிலம் படையினர் வசம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம்,வனவளத்திணைக்களத்தின் பிடியில் ஆயிரத்த 510 குடும்பங்களின் 3ஆயிரத்து582.5 ஏக்கர்நிலம்உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையின் பிடியில் 371குடும்பங்களின்ஆயிரத்து453ஏக்கர் நிலம் உள்ளதாகவும் மாவட்டச் செயலர் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்றுவனஜீவராசிகள்திணைக்களத்தின் பிடியில் 21 ஆயிரத்து 256 ஏக்கர் நிலம் உள்ளது. தொல்லியல் திணைக்களத்தின் வசம் 28 குடும்பங்களின் 212 ஏக்கர் நிலம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றினடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்து 909 குடும்பங்களுக்குச் சொந்தமான 26 ஆயிரத்து 504 ஏக்கர் நிலம் திணைக்களங்களின் பிடியில் உள்ளது என்று மாவட்டச் செயலர் எழுத்தில் சமர்ப்பித்த ஆவணத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(த-105)

### கனகசுந்தரசுவாமிக்கு சிலை அமைக்கத்திட்டம்

முல்லைத்தீவு,செப்.14
வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் வீ. கனகசுந்தரசுவாமிக்கு, புதுக்குடியிருப்புப் பொதுச்சந்தைவளாகத்தில் சிலை அமைப்பதற்கு கோரிக்கை விடுக்கப்பட்டால், அதற்கான இடத்தைவழங்கமுடியும் என்று புதுக்குடி யிருப்பு பிரதேச சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் இந்த மாதத்துக்கான அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சபையில் நீண்டநேர விவாதங்கள் இடம்பெற்றன. கனகசுந்தரசுவாமியின் சேவைகளைமதிக்கும்வகையில், புதுக்குடியிருப்புபொதுச்சந்தைக்கானகாணியைவழங்கியவர் என்ற ரீதியிலும் அவருக்கானசிலையை அமைக்க யாராவது கோரிக்கை விடுத்தால், சிலை அமைப்பதற்குரிய இடத்தை பிரதேச சபை வழங்கும் என்று தீர்மானிக்கப்பட்டது.

(க-246)

*ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரர் ஆலய*

## உற்சவகால கடைகளுக்கு 15 வீத வரி அறவிடப்படும்

முல்லைத்தீவு, செப்.14
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர்ஆலயத்தின்சீரமைப்பு வேலைகள் முடிவுறும் வரையில், ஆலயத்தின் உற்சவகாலத்தில்அமைக்கப்படும்தற்காலிகக்கடைகளுக்கு15வீதவரிஆலய நிர்வாகத்தினரிடமிருந்து அறவிடப்படும் என்று புதுக்குடியிருப்புப்பிரதேச சபை அமர்வில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புப்பிரதேச சபையின் இந்த மாதத்துக்கான அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய வளாகத்தில், உற்சவகாலத்தில் நிறுவப்படும் தற்காலிகக்கடைகளுக்காக, ஆலய நிர்வாகத்தினரிடமிருந்து பிரதேச சபையினர் இதுவரை காலமும் 40 வீத வரி அறவீடு பெற்று வந்தனர்.

தற்போது ஆலயத்தில் ராஜகோபுர வேலைகள், மற்றும்சீரமைப்புவேலைகள் என்பன இடம்பெறுகின்றன. இதனால் 40 வீத வரி அறவீட்டை 15 வீதமாகக் குறைத்து அறவீடு செய்யுமாறு பிரதேச சபையிடம், ஆலயநிர்வாகத்தினர் கோரியிருந்தனர்.

நிர்வாகத்தின் கோரிக்கையை, தவிசாளர் சபையின்நிதிக்குழுவினருக்கு சமர்ப்பித்தார். 20வீதவரி அறவிட வேண்டுமென நிதிக்குழுவினரால்ஆலோசனை வழங்கப்பட்டது.

எனினும் சபையில் இடம்பெற்ற நீண்ட விவாதங்களின் பின்னர், ஆலயச் சீரமைப்புப் பணிகள் இடம்பெறும்வரையில்15 வீத வரி அறவீடு செய்வதெனத் தீர்மானி க்கப்பட்டது.

(க-246)

## யாழ்.ஓ.எம்.பி.அலுவலகத்தை மூடுமாறுகோரிப் போராட்டம்

*நாளைமதியம் ஆரம்பம் எனத் தெரிவிப்பு*

யாழ்ப்பாணத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட ஓ.எம்.பி அலுவலகத்தை மூடுமாறும் பன்னாட்டு விசாரணையை வலியுறுத்தியும் தொடர்போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வவுனியா உறவுகளின் சங்கச் செயலர் கோ. ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

நாளை ஞாயிற்றுக்கிழமை தியாக தீபம் திலீபனின் உண்ணாவிரம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாளை முற்பகல் 11மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபியில் மலரஞ்சலி நிகழ்வு இடம்பெறுகின்றது. மதியம் 12மணியளவில் தாயகப் பகுதிகளிலுள்ள காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அனைவரும் ஒன்றிணைந்து ஓ.எம்.பி அலுவலகத்தை (காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகா ரங்களைக் கையாளும் அலுவலகம்) அகற்றுமாறும் பன்னாட்டு விசாரணயை வலியுறுத்தியும் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

(து)



[illegible] வியாழக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சட்டவிரோத மரக்கடத்தல் அதிகாரிகளால் முறியடிப்பு

வவுனியா,செப்.14
நெடுங்கேணி சின்னடம்பன் காட்டுப் பகுதியில் கடத்தப்பட்ட சட்டவிரோத மரக்குற்றிகள் நெடுங்கேணிவனவளதிணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டன.

பொதுமக்கள் வழங்கிய தகவலைஅடுத்துநெடுங்கேணிவன, வளதிணைக்களப் பொறுப்பதிகாரிகளும் அலுவலர்களும் இணைந்து கடந்த புதன்கிழமைசுற்றிவளைப்பில் ஈடுபட்டனர்.

திணைக்களத்தினரைக் கண்டவுடன், கடத்தலில் ஈடுபட்டவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். எனினும் அங்கு தரித்து விடப்பட்டிருந்த கன்ரர் வாகனமும், 5 லட்சம் ரூபாபெறுமதியான மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவை நெடுங்கேணி வன, வள திணைக்க ளத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் தேடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-7)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.14
யாழ்ப்பாணம் நீர்வேலி றோ.க.த.க பாடசாலையில் பரிசளிப்பு நிகழ்வு இன்று சனிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் சி.தர்மரத்தினம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர்நா.சிவநேசன்.மதிப்பு விருந்தினர்களாக பழைய மாணவர்கள் ஞா.சாகாயநாதன் அ.அருள்தாஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி யசோதை சரவணபவன் வழங்கிவைக்கவுள்ளார்.

(ஐ)

# சந்தேக நிலையைத் தீர்க்காவிடில் கிளர்ச்சிகள் மீண்டும் தலைதூக்கும்

## எச்சரிக்கின்றார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, செப்.14

இனங்களிடையே தற்போது நீடிக்கும் சந்தேக நிலமை தீர்க்கா விட்டால் மக்கள் விடுதலை முன்னணி செய்த கிளர்ச்சி போன்றோ, விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போராட்டங்கள் போன்றோ பூதாகரமான விடயமாக இது மாறிவிடும்.

இவ்வாறு எச்சரித்துள்ளார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னர் இந்த நாட்டில் இனரீதியாகவும் மதரீதியாகவும் வன்முறைகள் ஏற்படும் என்ற அச்சம் நிலவியது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடைபெற்று ஐந்து மாதங்கள் கடந்துள்ள போதிலும் இனங்களுக்கிடையில் சந்தேகங்கள் நிலவுவதைக் காண முடிகின்றது. மட்டக்களப்புப் பகுதியை பொறுத்தவரைக்கும் நிலமைகள் எவ்வாறு உள்ளது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால், சிங்கள பகுதிகளைப் பொறுத்தவரையில் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களுக்கு சிங்கள மக்கள் பொருள்கள் வாங்கச்செல்வது குறைவான நிலையிலேயே உள்ளது.

முஸ்லிம்களை பொறுத்தவரையில் பொது இடங்களில் கூடுவதற்கும் தமது கடமைகளைச் செய்வதற்கும் அச்ச நிலையில் உள்ளனர். இந்த நிலமை மாற்றப்படவேண்டும். எமக்குள் இருக்கும் அச்ச நிலமைகள் தூக்கியெறியப்படவேண்டும்.

இலங்கை கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் செய்ய தயாராகிக்கொண்டிருக்கும் நிலையில் அங்கு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்ச நிலை உருவாகியுள்ளது. இந்தப் பிரச்சினையை நாங்கள் சரியான முறையில் தீர்க்காவிட்டால் மக்கள் விடுதலை முன்னணி செய்த கிளர்ச்சி போன்றோ, விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போராட்டங்கள் போன்றோ இதுவும் பூதாகரமான போராட்டங்களாக வெடிக்கும் நிலமையேற்படும்.


இலங்கை அரசு, அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள், முஸ்லிம் மதத்தலைவர்களுக்கு இதற்கான பொறுப்பு இருக்கின்றது.

தற்போது படையினர், பொலிஸார் மற்றும் ஏனைய பாதுகாப்புத் தரப்பினர் மீதும் இந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் பாதுகாப்பில் தவறுகள் நடைபெற்றுள்ளது என்பதை உணர முடிகின்றது. 2018ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மட்டக்களப்பு, வவுணதீவு பகுதியில் இரண்டு பொலிஸ் அலுவலர்கள் சுட்டுக் கொல்லப்பட்டதை தொடர்ந்தே இந்தச் சம்பவங்கள் ஆரம்பமாகியுள்ளது.

2013 மற்றும் 2014ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ஸஹ்ரான் குழுவினருக்கு எந்தவகையில் நிதிகள் கிடைத்தன என்பது தொடர்பிலும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கு யார் நிதியுதவி வழங்கியது? என்பதையும் ஆராயச் சிறப்புக் குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்று நாம் கோரிக்கை முன்வைக்கிறோம். மதத்தால், இனத்தால் யாரையும் யாரும் தாக்குவதற்கோ, கொடுமைப்படுத்துவதற்கோ உரிமையில்லை. இலங்கைதான் எமது தாய்நாடு என்று கருதவேண்டும். இலங்கையின் பொதுவான சட்டத்துக்கு அனைவரும் மதிப்பளிக்கவேண்டும்- என்றார். (எ)





## உந்துருளி விபத்தில் இளைஞன் காயம்

வவனியா,செப்.14

உந்துருளி - வான் விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்து வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றது.

வவுனியா நகரிலிருந்து ஏ-9 வீதியூடாகப் பயணித்த உந்துருளி வீதியின் மறுபக்கம் திரும்ப முற்பட்ட சமயத்தில் அதே பாதையில் வந்த வான், உந்துருளியை மோதித்தள்ளியதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் உந்துருளி சாரதியான 22 வயதுடைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

வாகனங்கள் இரண்டும் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன. (ஐ-ரி4)

## வீட்டு நூலகம் வைத்திருப்போர் விவரங்கள் திரட்டு

முல்லைத்தீவு, செப்.14

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீட்டு நூலகம் வைத்திருப்போரின் விவரங்களைப் பிரதேச பொது நூலகத்தினர் சேகரித்து வருகின்றனர்.

ஒட்டுசுட்டான், ஒலுமடு, புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வீட்டு நூலகம் வைத்திருப்போர் அருகில் உள்ள பொது நூலகத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பெயர்களைப் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் இந்த வருடத்துக்கான தேசிய வாசிப்பு மாதத்தில் "வீட்டு நூலகம்" என்ற கருப்பொருளில் நடைபெறவுள்ளது.

பொதுமக்களால் பராமரிக்கப்படும் சிறந்த நூலகத்துக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (ஐ-9)

## 'தவளைப் பாய்ச்சல்' படகை கடலில் விடும் நிகழ்வு நாளை

கொடிகாமம், செப்.14

மறவன்புலவு, பிரபாகரனின் கைவண்ணத்தில் உருவான 'தவளைப் பாய்ச்சல்' என்ற புதிய படகு கேரதீவு, வாவியடிக் கடலில் இறக்கிவிடும் நிகழ்வு நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது. தென்மராட்சியில் கடல்சார் சுற்றுலாத்துறையில் அதிக பங்களிப்பை வழங்கும் பொருட்டு தியாக தீபன் தீலிபனின் 32ஆவது நினைவு நாளில் இந்தப் படகு கடலில் விடப்படவுள்ளது.

இந்தப் படகு சுமார் 10 லட்சம் ரூபா செலவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வின்போது பொங்கல் மற்றும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-159)



## முதல் முறையாக மழையுடன் தேரில் வலம் வந்தார் விநாயகர்

வவுனியா, செப்.14

வவுனியா, ஈச்சங்குளத்தில் சிறி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா முதல்முறையாக நேற்று கொட்டும் மழைக்கு மத்தியிலும் சிறப்பாக இடம்பெற்றது.

கந்த கணேசதாஸக் குருக்கள் தலைமையில் தேர்த் திருவிழா இடம்பெற்றது.

அந்தணச் சிவாச்சாரியார்கள் மந்திரம் ஓதி, அபிசேக தீபராதனைகளை நிகழ்த்த, விநாயகப் பெருமான் உள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார்.

அதனைத் தொடர்ந்து வெளிவீதியில் தேரில் எழுந்தருளிய விநாயகப் பெருமானை அரோகரா கோசத்துடன் ஆண்களும், பெண்களுமாக வடம் பிடித்து தேரில் இழுத்துச் சென்றனர்.

குறித்த ஆலயத்தில் முதன்முறையாக இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது, மழை பெய்தமையால் மகிழ்ச்சியடைந்த பக்தர்கள், தேவார திருவாசங்களை ஓதியும், கற்பூரச் சட்டிகளை ஏந்தியும் விநாயகப் பெருமானை வழிபட்டனர். (க-ரி4)

# வடக்கில் இலஞ்ச ஊழலை ஒழிக்கவும்

## இணைய நேரலையில் ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,செப் 14

ஜனநாயகத்தையும், பேண்தகு இலங்கையையும் கட்டியெழுப்புவதற்கு வடக்கு மாகாணத்தில் இலஞ்ச ஊழலை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இலஞ்ச ஊழலை வடக்கு மாகாணத்தில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டுமென்ற ஆளுநரின் எண்ணக்கருவுக்கு அமைய இலஞ்ச ஊழல் மற்றும் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பவை தொடர்பாக பொதுமக்களுக்கும், அரச அலுவலர்களுக்கும் அறிவூட்டும் செயலமர்வு யாழ்ப்பாண மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்றது.

செயலமர்வில் இணைய நேரலை ஊடாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"இலஞ்ச ஊழலில் ஈடுபடும் அதிகாரிகள் தமது செல்வாக்குகளால் தப்பிப்பதுடன், சாதாரண கடை நிலை ஊழியர்கள் தண்டிக்கப்படும் நிலமையே பெரும்பான்மையாகக் காணப்படுகிறது.

இலஞ்சம் மற்றும் ஊழல்களில் ஈடுபடும் உயரதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

அப்போதுதான் இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். அரச ஊழியர்களும், பொதுமக்களும் இது தொடர்பில் பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் -என்றார். இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சரத்துக்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் செயலமர்வுநடைபெற்றது. (க-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோரிக்கைக்குச் சாதகமான பதிலில்லை

# சில பணிகளிலிருந்து விலகுகின்றனர் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள்

### இதற்கும் தீர்வின்றேல் பணி முடக்கம் என்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 14

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளின் கோரிக்கைக்கு அரசு தரப்பினர் சாதகமான பதில் வழங்காததால் பல்வேறு விடயங்களிலிருந்து விலகிக் கொள்ளவுள்ளோம் என்று நிர்வாக சேவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் அண்மையில் இரண்டு நாள்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடு முழுவதிலுமுள்ள அமைச்சுக்கள், திணைக்களங்கள், ஆணைக்குழுக்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், மாகாண மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பொது நிர்வாக அலுவலர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டு முன் வைத்தல், சுயாதீனமாகக் கடமை புரிவதற்குப் பதிலாக அழுத்தம் கொடுத்தல், சம்பளம் மற்றும் கொடுப்பனவு முரண்பாடுகள், போக்குவரத்துக் கொடுப்பனவு முரண்பாடு, பதவி உயர்வு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் ஓய்வுபெற்ற அலுவலர்களைச் சேவையில் அமர்த்துதல் போன்ற பல்வேறு காரணங்களை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கோரிக்கை தொடர்பில் உரிய தரப்பினருக்குப் பல தடவைகள் தெரியப்படுத்தியும் அதற்கான தீர்வு கிடைக்காத நிலையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் பொது நிர்வாக இடர் முகாமைத்துவ மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் முன்பாக நடைபெற்ற எதிர்ப்பு நடவடிக்கையை அடுத்து கொழும்பு புதிய நகர மண்டபத்தில் ஒன்றுகூடிய நிர்வாக சேவைச் சங்கத்தின் சிறப்பு அமர்வில் அதிரடியான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. சாதாரண கடமை நேரமான 8.30 மணியிலிருந்து 4.15 மணி வரை மாத்திரமே கடமை புரிதல், மக்கள் பிரதிநிதிகளின் பங்குபற்றலில் இடம்பெறும் சகல நிகழ்வுகளையும் புறக்கணித்தல், சகல நிறுவன அலுவலர்களும் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் ஊடாக நடைபெறும் கூட்டங்களில் கலந்து கொள்ளாதிருத்தல், கிராம எழுச்சி, கிராம சக்தி, கமநெகும, நாட்டுக்காக ஒன்றிணைவோம், என்டர்பிரைசஸ் சிறீலங்கா போன்ற திட்டங்களுக்குரிய கடமைகளிலிருந்து விலகுதல், சமுர்த்திக் கடமைகளில் இருந்து விலகுதல், ஒரு நாள் சேவைகளிலிருந்து பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள் விலகுதல், மாகாணத் திணைக்களங்களினூடாக நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் ஒப்பந்தங்களில் உள்ளாவதைத் தவிர்த்தலில் ஈடுபடுவோம். இதற்கு மேலும் தீர்வு வழங்குவது தாமதமாகும் பட்சத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுதல் போன்ற விடயங்கள் தீர்மானமாக எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-7)



## கல்விக்காக அதிகம் நிதி ஒதுக்கியது நான் மட்டுமே

### தலைமை அமைச்சர் ரணில் பெருமிதம்

மன்னார், செப்.14

கல்விக்கு அதி கூடிய நிதியை ஒதுக்கீடு செய்த தலைமை அமைச்சராக நானே உள்ளேன். இன்னும் பெருமளவு நிதியை ஒதுக்குவேன் என்று தெரிவித்துள்ளார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

மன்னார், எருக்கலம்பிட்டி முஸ்லிம் மகா வித்தியாலத்தியத்தின் 75ஆம் ஆண்டு நிறைவு விழாவும், புதிய கட்டடத் திறப்பு விழாவும் நேற்றுமுன்தினம் நடைபெற்றன. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே தலைமை அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் இந்தப் பிரதேசத்திலே உள்ளனர். இந்தப் பாடசாலையில் ஜே.ஆர். என்கின்ற கட்டடமொன்று உள்ளது. அதனை மீண்டும் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன். கல்விக்கு அதிகூடிய நிதியை ஒதுக்கீடு செய்த தலைமை அமைச்சராக நான் இருக்கின்றேன். 1978ஆம் ஆண்டில் இருந்து பல்வேறு அபிவிருத்திகளைச் செய்து இந்த கல்வித் துறைக்கு வித்திட்டவனாக நான் இருக்கின்றேன். எதிர்காலத்திலும் இந்தக் கல்வித் துறைக்காகப் பல மில்லியன் ரூபா நிதியை நான் ஒதுக்கத் தயாராக இருக்கின்றேன்.

13 வருட பாடசாலை வாழ்க்கையை மாணவர்களுக்கு வழங்கி நல்லதொரு அறிவியல் சமூகத்தை உருவாக்குவதற்காக எதிர்காலத்திலே நல்லதொரு திட்டங்களை முன்வைத்துள்ளேன். அதற்கு நாங்கள் அனுமதிகளை வழங்கி இருக்கின்றோம். பாடசாலையில் இருக்கக் கூடிய மாணவர்களுக்குப் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் மூலமாக கல்வி மயமாக்கப்படவேண்டும். அவர்களுக்கு கல்வி புகட்டப்பட வேண்டும். 'அண்மையில் உள்ள பாடசாலை மிகச் சிறந்த பாடசாலை' என்ற தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த வாரம் சிறப்புத் தேவையுடையவர்களுக்கான ஒரு கல்வி நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் மூலமாகச் சிறப்புத் தேவையுடையவர்களுக்கும் கல்வி போய் சேர வேண்டும். 21 பல்கலைக்கழங்களில் 21 பல்கலைக்கழக பீடங்கள் அண்மையிலே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

13 வருடங்கள் பாடசாலைக் கல்வியில் மாணவர்களுக்குக் கல்வியை வழங்குவதற்கு மேலும் பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் தகவல் தொழில் நுட்பத்தை விருத்தி செய்வதற்குக் கூடிய கவனம் எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் வகுப்பறையில் மாணவர்களுக்குக் கல்வியை வழங்குபவர்கள் கல்வியியற்கல்லூரி மற்றும் பட்டதாரி போன்ற சிறப்பான மட்டத்தில் பயிற்சிகளை நிறைவு செய்தவர்களாக இருக்க வேண்டும். 'அண்மையிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை' திட்டத்தின் கீழ் பாடசாலைகள் தரம் உயர்ந்து வருகின்றன.

21 பல்கலைக் கழகங்களில் 21 பீடங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கல்விக்குப் பல்வேறு வேலை திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. எதிர் காலத்தில் அது இன்னமும் சிறப்பாக நடைபெறும் - என்றார். (எ-7)

## மாணவரிடமிருந்து ஆக்கங்கள் கோரல்

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழாவை முன்னிட்டு கலைநிகழ்வுகளும், நூல்வெளியீடும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடத்தப்படவுள்ளன. வெளியிடவுள்ள நூலில் நிலையத்தின் பழைய மாணவர்களால் ஆக்கப்பட்ட கவிதை, கட்டுரைகள், சிறுகதை போன்றவை இணைக்கப்படவுள்ளன. இதற்கான ஆக்கங்கள் அவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் தமது ஆக்கங்களையும், கல்வி கற்றவருடத்தையும் குறிப்பிட்டு ஒக்ரோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-9)

# சுதந்திரக் கட்சி தனித்து களமிறங்குவதே சிறப்பு

### மொட்டுடனான கலந்துரையாடலில் ஒருபோதும் கலந்துகொள்ளமாட்டேன் என்கிறார் சந்திரிகா

கொழும்பு, செப்.14

அரச தலைவர் வேட்பாளராகச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் ஒருவரை நியமிப்பதே கட்சியின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதாகும்.

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாமல் போனாலும் அடுத்து வரும் தேர்தல்களில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியை வெற்றிபெறச் செய்ய கட்சியின் வாக்குகளைத் தொடர்ந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும். ஆனால் கட்சியின் தலைமை சில விடயங்களில் தனித்துத் தீர்மானம் எடுக்கின்றது.

அத்துடன் மீண்டும் அதிகாரத்தில் இருக்கும் நோக்குடனே சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி யுடன் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறான நடவடிக்கைகள் எனது கொள்கைக்குப் பொருந்தாது. அதனால் அவ்வாறான கலந்துரையாடல்களுக்கு நான் ஒருபோதும் கலந்துகொள்ளப்போவதில்லை- என்றார். (எ-22)

# 2015இல் உருவான ஆட்சியைத் தக்கவைப்பது அவசியமானது

### தம்பர அமில தேரர் தெரிவிப்பு

2015ஆம் ஆண்டு உருவான 'நல்லாட்சி'அரசின் தொடர்ச்சியான செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் வகையில் இந்த முறை அரச தலைவர் தேர்தலிலும் மக்கள் ஆணையை வழங்க வேண்டும் எனத் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார். சிவில் சமூக அமைப்புகள் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சிலா கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மக்கள் வரலாற்றை மறக்கவில்லை. 2015ஆம் ஆண்டில் அனைவரும் ஒப்புதல் அளித்த 'நல்லாட்சி'யின் புனித பாதையே மீண்டும் முன்னெடுக்கப்படவேண்டும். 2015ஆம் ஆண்டில் எடுத்த தீர்மானம் ஒருபோதும் தவறாக அமையவில்லை. இந்த அரசதலைவர் தேர்தலை 2015ஆம் ஆண்டுத் தேர்தலின் நீடிப்பாக மாத்திரமே கருத வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி ஆளுகையில் சிக்காமல் சிறந்தவரைத் தேர்ந்தெடுங்கள்

*அமைச்சர் அர்ஜுன தெரிவிப்பு*



கொழும்பு, செப்.14
அரசியல் கட்சிகளின் ஆளுகைக்குள் சிக்காமல் எதிர்வரும் அரச தலைவர் தேர்தலில் ஒருவரைத் தெரிவு செய்யும் பொறுப்பு அனைவருக்கும் உண்டு என்று தெரிவித்துள்ளார் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க.

கம்பகா, தாதுகமவில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டை நேசிக்கும் நாட்டை வெற்றி பெறச் செய்யும் ஒருவர் அரச தலைவராகத் தெரிவாக வேண்டும். இனவாதத்துக்கு ஊக்கமளிக்கும் ஒருவர் நாட்டுக்கு தேவையில்லை . இந்த முறை அரசியல் ரீதியாக வேட்பாளர்களை அறிந்து கொள்வதில் பயனி ல்லை.

கடந்த தேர்தலின் மூலம் உருவான அரசு ஊடாகப் பல பிரச்சினை களைத் தீர்ப்பதற்கான இரு முதன்மைக் கட்சி களும் ஒன்றிணைந்து செயல்பட்டன. தற்போதைய அரசின் மூலம் செய்த வற்றை போன்று இதுவரையில் எந்தவொரு அரசும் செய்ததில்லை.

விளம்பரம் இல்லாமல் முன்னெடுக்கப்படும் வேலைகளில் பல குறைப்பாடுகள் உள்ளமையை ஏற்றுக்கொள்கின்றேன். தற்போதைய அரசே கிராமத்துக்குச் சென்று பணிகளை முன்னெடுக்கின்றது.

ஆனால் அரசு பலவீனமாக உள்ளது என ஊடகங்கள் காண்பிக்கின்றன. அதற்கு யாரையும் குறை கூற முடியாது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள பிரச்சினைகள் யாவும் விரைவில் தீர்க்கப்படும். பொருத்தமான நேரத்தில் அரச தலைவர் வேட்பாளர் நியமிக்கப்படுவார்.

அனைத்துக் கட்சிகளிலும் முரண்பாடுகள் உள்ளன. பொருத்த மான வேட்பாளரை நியமித்தால் கடந்த முறையை விட வெற்றி வாய்ப்பு அதிகம். - என்றார். (எ)

# அலுவலர்களின் முறைகேடுகள் பற்றிய விசாரணை ஒரு வருடத்துக்குமேல் இழுபறிப்பட்டால் அரைச் சம்பளம்

*பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கை*

யாழ்ப்பாணம், செப். 14
அரச அதிகாரிகள் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு நீதி மன்றத்தீர்ப்பு வருவதற்கு ஒரு வருட காலத்துக்கும் அதிகமான நாள்கள் எடுக்குமாயின், அவர்களுக்குச் சம்பளத்தின் அரைவாசியைவிட அதிகரிக்காத சம்பளம் வழங்கப்படும் என்று பொது நிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அலுவலக தலைவர்களுக்கு அமைச்சு அனுப்பிய சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச அலுவலர் மீது கையூட்டு, ஊழல், பயங்கரவாதச் செயற்பாடுகள், அரச விரோதசெயற்பாடுகள் போன்ற குற்றச் சாட்டுகள் தொடர்பாக நீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் இரண்டு மாதங்களுக்கு அதிகரிக்காத விசாரணை நிர்வாக அதிகாரியால் மேற்கொள்ளப்பட வேண்டும். விசாரணை அதிகாரியின் அறிக்கை அரச சேவைகள் அணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அரச சேவைக்கு எந்த வித அப கீர்த்தியும் செய்யவில்லை என்று ஆணைக்குழு கூறும் பட்சத்தில் குறித்த அலுவலரை சேவையில் இணைத்துக் கொள்ள முடியும். அபகீர்த்தி ஏற்படும் என்று தெரியும் பட்சத்தில் நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை குறித்த அலுவலரை பணி இடை நீக்கம் செய்ய வேண்டும். நீதிமன்றத் தீர்ப்புக் கிடைப்பதற்கு ஒரு வருட காலத்துக்கு அதிகமான நாள்கள் செல்லுமாயின் அலுவலருக்கு சம்பளத்திலிருந்து அரை வாசிக்கும் மேற்படாத தொகையை வழங்குவதற்கு ஒழுக்காற்று நடவடிக்கை அதிகாரியால் முடியும் என்றுள்ளது. (த-7)

# ஐ.தே.கவைக் காப்பதற்கே சந்திரிகா முயற்சிக்கிறார்

*செஹான் சேமசிங்க தெரிவிப்பு*

கொழும்பு, செப்.14
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைப் பாதுகாப்பதற்காக சந்திரிகா குமாரதுங்க, தயாசிறி மற்றும் துமிந்த ஆகியோர் திரைமறைவில் செயற்படுகின்றனர். சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டணியைத் தோல்வியடையச் செய்வதற்காக அவர்கள் மும்முரமாகச் செயற்படுகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிகள் இடையே தேர்தல் சின்னம் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. அது தொடர்பாகக் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர, துமிந்த திசாநாயக்க ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சியின் விசுவாசிகளாவர். அதனால்தான் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியையும், மகிந்த ராஜபக்சவையும் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டுத் தனியே செல்வது போன்று காண்பித்து ஐக்கிய தேசியக் கட்சியைப் பாதுகாக்க முனைகின்றனர்.

அது மட்டுமன்றி மத்திய வங்கிப் பிணை முறி மோசடியுடன் தயாசிறி ஜயசேகரவும் மறைமுகமாகத் தொடர்புபட்டுள்ளார். கோத்தபாய ராஜபக்ச ஆட்சியமைத்தால் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கண்டறியப்பட்டு நிச்சயமாகத் தண்டனை வழங்கப்படும். அதிலிருந்த தப்பவே தயாசிறி இவ்வாறு செயற்படுகின்றார். -என்றார். (எ)

# எதிர்க்கட்சியில் இருந்தவாறும் மக்களுக்கு சேவையாற்றலாம்

*பிரதி அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவிப்பு*



கொழும்பு, செப்.14
எதிர்க்கட்சி ஆசனங்களில் இருப்போருக்கு சேவையாற்ற முடியாது என்று முடிவெடு த்து முத்திரை குத்து வதற்கு பலர் பழக்கப்பட்டிருக்கிறார்கள் இந்தமனோபாவத்தை நாம் தகர்த்து விட்டிருக்கிறோம்.

இவ்வாறு வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும் மறுவாழ்வுமீள்குடியேற்றம்வடக்குஅபிவிருத்தி முன்னாள் பிரதி அமைச்சருமான காதர் மஸ்தான்தெரிவித்தார்.

முல்லைத்தீவு குமுழமுனை மகா வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு தனது சென்ற வருட 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் பெறப்பட்ட கற்றல் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தமது அரசியலை தக்க வைப்பதற்காக வெளிப்படையாகத் தெரியக்கூடிய அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை கொடுத்து விளம்பரம் தேடும்அரசியலைசெய்பவர்களிடமிருந்துநாம் வேறுபட்டுதேவையுடையவர்களை இனங் கண்டு சேவைகளைப் புரியதிடசங்கற்பம்பூண்டுள்ளோம்.

நான் எனது நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய சம்பளத்தையும் வன்னி மாவட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கேஅர்ப்பணித்துள்ளேன். மேலதிக வகுப்புகளுக்கும், கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கும் அந்தப் பணம் செலவிடப்படுகின்றது.

பாடசாலைக்காலம்என்பது எமது வாழ்வில் கிடைக்கும் பொற்காலமாகும். எமது எதிர்காலத்திற்கான விதைகள் இந்தக் காலத்தில் தான் விதைக்கப்படுகின்றன. பாடசாலை முடிந்து வீடு வரும் பிள்ளைகளிடம் அன்று என்ன கற்பிக்கப்பட்டன என்பது குறித்து அறிவதுடன் கற்றவற்றை மேம்படுத்துவது தொடர்பிலும் கூடிய கவனத்தை செலுத்துவதனூடே அவர்களது கற்றல் திறனை வளர்தெடுக்க முடியும்.

நான்பிரதியமைச்சராக பதவி வகித்த குறுகிய காலப் பகுதியில் பல மில்லியன் ரூபாவை அபிவிருத்திப் பணிகளுக்காக செலவிட முனைந்த போது அதனைதடுத்துநிறுத்த சிலர்முற்பட்டனர். எமது மக்களின்தேவைகளை நிறைவேற்றியே தீர வேண்டும் என்ற எமது அந்த வேட்கை விஸ்வரூபமெடுத்து எமக்கெதிரான தடைகளையெல்லாம் தகர்த்து மிகவும் தரமான சேவைகளை உங்களுக்கு செய்வதற்கு அடிகோலிட்டது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். என்றார். (எ)

## கஞ்சிப்பானவின் தந்தைக்கு விளக்க மறியல்

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதைப் பொருள் வர்த்தகரான கஞ்சிபான இம்ரானின் தந்தை மற்றும் சகோதரர் ஒருவர் உள்ளிட்ட 6 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுச் சந்தேக நபர்கள் ரத்கம பொலிஸாரால் காலி நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் பூயா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கஞ்சிபான இம்ரானை பார்க்க நேற்றுமுன்தினம் மாலை வந்த சந்தர்ப்பத்தில் அவர்களிடம் இருந்த சந்தேகத்துக்கு இடமான பொதி ஒன்று சோதனையிடப்பட்டது. அதில் இருந்து இரண்டு கைப்பேசிகள் மற்றும் இரண்டு சார்ஜர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. அதனடிப்படையில் ரத்கம பொலிஸாரால் கஞ்சிபான இம்ரானின் தந்தை மற்றும் சகோதரர் ஒருவர் உள்ளிட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர். பொலிஸ் அதிகாரி ஒருவரை தொலைப்பேசி ஊடாக அச்சுறுத்திய குற்றச்சாட்டின் பேரில் பிரபல போதைப் பொருள் வர்த்தகரான கஞ்சிபான இம்ரான் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.வி.பியின் தலைமையில் தூய்மையான ஆட்சி தேவை

*விஜித ஹேரத் எம்.பி. தெரிவிப்பு*



கொழும்பு, செப்.14

மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் தூய்மையான ஆட்சி ஒன்றை அமைக்க வேண்டிய கட்டாயத்திலேயே இலங்கை தற்போது உள்ளது என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத். குருநாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மேலும்தெரிவித்துள்ளதாவது: ராஜபக்சக்களின் கட்சிதான் நாட்டின் பெரும்பான்மையான உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றியுள்ளது. கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலின் போது, அவர்கள் பெரும் வெற்றியைப் பெற்றுக்கொண்டார்கள். ஆனால், ஒன்றரை வருடங்கள் கடந்தும் அவர்களால் முழுமையான மக்கள் சேவையை வழங்க முடியாதுள்ளது.

அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் இன்று ஊழல் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. மக்கள் விடுதலைமுன்னணிக்கு இலங்கை முழுவதும் 400 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒருவர் மீதுகூட எந்தவொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை. தற்போது, எதிரிக் கட்சிகளாக தங்களைக் காண்பித்துக் கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றாக இணைந்து பல்வேறு ஊழல் மற்றும் கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளன.

அவர்கள் இதுவரையான காலப்பகுதியில் சுயலாப அரசியலை மட்டுமே செய்து வந்தார்கள். ஆனால் மக்கள் விடுதலை முன்னணி அவ்வாறான கீழ்த்தரமான அரசியலை என்றும் மேற்கொண்டது கிடையாது. எமது அரசியலுக்கும் அந்தத் தரப்பினரின் அரசியலுக்கும் இடையில் பெரிய வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

நாம் மக்களுக்காக சேவை செய்கிறோம். அவர்கள் தங்களது அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்ளவும் செல்வந்தர்களாக வாழவும்தான் அரசியல் செய்து வருகிறார்கள். சொல்லப் போனால், புதிய திருடர்களும் பழையத் திருடர்களும் ஒன்றிணைந்து இந்த நாட்டையே இன்று அழித்து விட்டனர்.

இவர்களை நிச்சயமாக வீழ்த்தி, நாட்டை முன்னேற்றும் சவாலை நாம் நிச்சயமாக பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். - என்றார். (எ)



## ரணில் – சஜித் சண்டையால் கோத்தாவுக்கு அதிக பலன்!

*ரஞ்சன்*

கொழும்பு, செப்.14

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையே ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் கோத்தபாய ராஜபக்சவின் வெற்றியை உறுதி செய்கின்றன என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் தொடர்பாக ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையே ஏற்பட்டுள்ள இழுபறி நிலைமையால் கோத்தபாய ராஜபக்சவுக்கே அதிக பலன் ஏற்படும். கோத்தபாயவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில்தான் இவர்களின் முரண்பாடுகள் உள்ளன. இவர்கள் இருவரும் ஒரே மேடையில் இணைவதன் ஊடாகவே கோத்தபாயவின் தோல்வியை உறுதிப்படுத்த முடியும். - என்றார். (எ)

## மதுபான பாவனை தொடர்பில் ஆய்வு

கொழும்பு, செப்.14

புகையிலை மற்றும் மதுபான பாவனை தொடர்பில் நாடளாவிய ரீதியில் ஆய்வு நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளது என்று புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொகை மதிப்பு புள்ளி விவரத் திணைக்களத்தினூடாக இந்த ஆய்வு முன்னெடுக்கப்படவுள்ளது என்று புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர், சிறப்பு மருத்துவ நிபுணர் பாலித அபேகோன் குறிப்பிட்டார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இந்தகள ஆய்வு முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## திட்டத்தில் குறைபாடிருந்தால் கல்வி அமைச்சிடம் கூறலாம்

கொழும்பு, செப்.14

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளில் ஏதாவது முரண்பாடுகள், ஊழல் மற்றும் மோசடிகள், தரமற்ற கட்டுமானப் பணிகள் போன்ற விவகாரங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் கல்வி அமைச்சின் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் முதன்மைச் செயற் திட்ட பொறியிலாளருக்கு அந்த முறைப்பாட்டை வழங்குவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சர் சட்டத்தரணி அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத் திட்டத்தின் முதன்மைச் செயற்திட்ட பொறியிலாளரின் 0112786768 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டோ அல்லது முதன்மைச் செயற்திட்ட பொறியிலாளர், அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்ட அலுவலகம், 7 ஆம் மாடி ,இசுறுபாய, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு குறித்த முறைப்பாட்டை அனுப்பி வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை வேலைத்திட்டத்தின் கீழ் 65 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் 18 ஆயிரம் செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த திட்டத்தின் ஊடாக 9 ஆயிரத்து 64 பாடசாலைகள் பயனடைகின்றன.

அதன் ஊடாக பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப் படுகின்றன.

இந்த திட்டத்தின் கீழ் மூன்று கட்டங்களாக 950 புதிதாக அமைக்கப் பட்ட பாடசாலை கட்டடங்கள் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

## சு. கட்சியின் செயற்பாடுகள் சந்தேகத்துக்கு இடமானவை

*செஹான் சேமசிங்க தெரிவிப்பு*



கொழும்பு, செப்.14

சுதந்திரக் கட்சியின் தற்போதைய செயற்பாடுகள் சந்தேகத்திற்கிடமாக உள்ளன. ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக செயற்படுகின்றோம் என்று பெயரளவில் மாத்திரம் குறிப்பிட்டால் போதாது. செயலளவிலும் செயற்படுத்த வேண்டும்.

சுதந்திர கட்சியினர் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முயற்சிப்பது கட்சியை பாதுகாக்கும்.

இவ்வாறு கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் ஆட்சிக்கு வராமல் இருக்க வேண்டுமாயின் சுதந்திர கட்சி பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவுவழங்கவேண்டும். வீண் முரண்பாடுகளை தோற்றுவிப்பதை சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் தவிர்த்துக் கொள்வது அவசியமாகும்.

அதேபோல் தங்கள் சொந்த வேலைக்காக மக்களின் நிதியை பயன்படுத்தியது மற்றும் கொள்ளையடித்தது போன்ற செயற்பாடுகளே கடந்த நான்கு வருடங்களில் அரசால் மேற்கொள்ளப்பட்டன.

ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளர் எவராக இருந்தாலும் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்குத் தடையல்ல. கடந்த நான்கு வருட காலமாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவின் முதன்மை இலக்காகக் காணப்பட்டது. கட்சியை பலப்படுத்திக் கொள்வதே தவிர நாட்டு மக்கள் தொடர்பில் எந்தவித அக்கறையும் கொள்ளவில்லை.

பரந்துபட்ட கூட்டணி வெற்றிப் பெற வேண்டும் என்ற நிலையில் இருந்து ஒத்துழைப்புடன் செயற்படுகின்றோம். ஆனால் ஒவ்வொரு முறையும் சுதந்திர கட்சியினர் பொறுப்பற்ற விதமாகவும், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஆதரவாகவும் செயற்பட முற்படுகின்றார்கள். கடந்த நான்கு வருட காலமாக ஐக்கிய தேசிய கட்சியின் நிர்வாகத்தில் இடம் பெற்ற முறைக்கேடுகளுக்கு சுதந்திர கட்சியும் பொறுப்பு கூற வேண்டும். - என்றார். (எ)

## சு.க. மாவட்ட மாநாடு நாளை ஆரம்பம்

கொழும்பு, செப்.14

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தவுள்ள கட்சி மாநாடு நாளை ஆரம்பமாகவுள்ளது.

முதலாவது மாநாடு இரத்தினபுரி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இந்த மாநாடு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. அதில் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டைத் தொடர்ந்து அடுத்த மாநாடு மாத்தளை மாவட்டத்தில் இந்த மாதம் 21ஆம் திகதியும், 22ஆம் திகதி மாத்தறை மாவட்டத்திலும் 29ஆம் திகதி குருநாகல் மாவட்டத்திலும் நடக்கவுள்ளது. ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி காலியிலும், அதன்பின்னர் எல்பிட்டியவிலும் நடக்கவுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் இந்த மாநாடுகள் இடம்பெறவுள்ளன என்றும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நகரில்
# உயிர் மாய்ப்புக்கு எதிரான விழிப்புணர்வுப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப் .14
உயிர் மாய்ப்புக்கெதிராகக் குரல் கொடுக்க வேண்டும், அதனை தடுக்க வேண்டும் என்ற கருப்பொருளில் விழிப்புணர்வு போராட்டம் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.







கைகொடுக்கும் நண்பர்கள், சிறிலங்கா சுமித்ரேயோவின் யாழ்ப்பாண கிளையின் ஏற்பாட்டில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
"மனம் விட்டு பேசினால் மனப் பாரம் குறையும், மனித வளம் அரிய வளம் அதை நீ அழிக்காதே, தற்கொலைகள் 100 வீதம் தடுக்கப்படக் கூடியவை போன்ற வாசகங்களை தாங்கியவாறு விழிப்புணர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-7)

## கூட்டமைப்பின் கனவுகள் தகர்த்தெறியப்பட்டுள்ளன
### சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கூறுகிறார்

வவுனியா, செப்.14
புதிய அரசு இரண்டு முதன்மைக் கட்சிகளை உள்ளடக்கியதாகவுள்ளது. அதன் மூலமாக தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டுவிடலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கனவுகள்கூட தகர்த்தெறியப்பட்டுள்ளன.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார். அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு எட்டப்படவில்லை. இறுதிப் போரின்போது நடைபெற்ற போர்க் குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள் மனித குலத்துக்கு எதிராக நடத்தப்பட்ட குற்றங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து நீதி நிலைநாட்டப்படவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெரிவிப்பதற்கு அரசுக்கு இன்னமும் துணிவு வரவில்லை.
அரசியல்கைதிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. எமது நாளாந்தப் பிரச்சினை தொடக்கம் அரசியல் தீர்வுவரை எந்தவொரு விடயமும் தீர்க்கப்படவில்லை என்பதை இலங்கை அரசுக்கும் பன்னாட்டுச் சமூகத்துக்கும் வெளிப்படுத்தவேண்டும். எனவே அனைத்து தமிழ்மக்களும்தமிழ்மக்களைப்பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் நாளைமறுதினம் எழுக தமிழ் போராட்டத்தில் அணிதிரள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-110)

# விடுதலை வாழ்க்கை, நிலத்துக்காக இன்னும் பேசிக்கொண்டிருக்கிறோம்
### சேனாதிராசா எம்.பி. கிளிநொச்சியில் தெரிவிப்பு



கிளிநொச்சி, செப். 14
70 வருடங்களாக மக்கள் எங்களுக்குத் தொடர்ச்சியாக ஆதரவு தருகின்றார்கள். அவர்களின் விடுதலையான வாழ்கை மற்றும் கையகப்படுத்தப்பட்டுள்ள எமது நிலத்தை மீளப் பெறுவதற்கு பல்வேறு துறைகளுடன் கலந்துரையாடி வருகின்றோம்.
இவ்வாறுதமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சோ.சேனாதிராசா தெரிவித்தார்.
கிளிநொச்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் இயக்கச்சி முள்ளிப்பற்று உப அலுவலக புதிய கட்டடம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
சபைத் தவிசாளர் சு.சுரேன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராசா, சி.சிறிதரன் ஆகியோர் அதைத் திறந்து வைத்தனர்.
அதில் உரையாற்றுகையில் நாடாளுன்ற உறுப்பினர் சேனாதிராசா இவ்வாறு தெரிவித்தார்.
அரசதலைவர் தேர்தல் தொடர்பில் எதிர்வரும் 27ஆம் திகதி மற்றும் அதற்குப் பின்னர் குழுவாகச் சந்திக்கவுள்ளோம். வேட்பாளர்கள் தொடர்பில் சகலருடனும் பேசவுள்ளோம் என்று தெரிவித்தார்.
நிகழ்வின் நிறைவில் அவரிடம், எழுக தமிழ் நிகழ்வுக்கு உங்கள் ஆதரவு என்ன என்று செய்தியாளர்கள் வினவினர். "நிகழ்வு தொடர்பில் எமது தலைவர் இரா சம்பந்தனை எழுக தமிழின் ஒரு குழுவினர் சந்திக்கின்றனர். அந்தச் சந்திப்பில் சில முடிவுகள் எட்டப்படும்" என்று தெரிவித்தார்.
அரசதலைவர் தேர்தலில் யாருக்கு ஆதரவு தெரிவிப்பது என்பது தொடர்பில் வினவியபோது, "அரசதலைவர் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் இன்னும் தீர்மானிக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி யாரை நியமிக்கின்றது என்பதையும் பார்க்கின்றோம். முதலில் அவர்கள் வேட்பாளரைத் தெரிவு செய்யட்டும். அமைச்சர் சஜித்துடன் உத்தியோகபூர்வ சந்திப்பு எதுவும் இடம்பெறவில்லை" என்று தெரிவித்தார்.
சபையின் இயக்கச்சி முள்ளிப்பற்று உப அலுவலகம், அதனுடன் இணைந்த நூலகம், ஆயுள்வேத வைத்தியசாலை என்பன நான்கு மில்லியன் ரூபாமாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும்3.4 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக சுமார் 7.4 மில்லியன் ரூபாவில் கட்டம் அமைக்கப்பட்டுள்ளது. (த-6.35)

# ரணிலை சந்தித்தார் கனிமொழி

இலங்கைக்கு வந்துள்ள தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் கனிமொழி உட்பட இந்தியாவின் சில முக்கிய அரசில் தலைவர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுக் காலை அலரி மாளிகையில் சந்தித்துகலந்துரையாடியுள்ளனர்.
இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவரும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினருமான கே. கனிமொழி, இந்திய நாடாளுமன்ற (லோக் சபா) உறுப்பினர்கள், முன்னாள் கேரள இராஜாங்க அமைச்சர் அப்துல் மஜீத், இந்திய சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம். முஹம்மத் அபூபக்கர், முன்னாள் நாடாளுமன்ற (லோக் சபா) உறுப்பினர் எம். அப்துல் ரஹ்மான், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உறுப்பினரும் தமிழ் நாடு வக்பு சபை உறுப்பினருமான பாத்திமா முஸஃப்பர், முன்னாள் இந்திய சட்டமன்ற உறுப்பினர் பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லாஹ் உட்பட பல்வேறு முக்கியஸ்த்தர்கள் அந்தக் குழுவில் அடங்கியுள்ளனர்.
தலைமை அமைச்சருடனான இந்தச் சந்திப்பின்போது இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (எ)

# பொதுச் சின்னத்தாலேயே இணக்கம் ஏற்படவில்லை
### ஐ.ம.சு.கூ. பொதுச் செயலர் தெரிவிப்பு



கொழும்பு, செப்.14
பொதுச் சின்னம் தொடர்பாக இணக்கம் எட்டப்பட்டால் சிறிலங்கா பொது மக்கள் முன்னணி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தல் கூட்டணி தொடர்பான பேச்சை வெற்றிகரமாக நிறைவேற்றலாம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக்கும் இடையே தேர்தல் கூட்டணி தொடர்பாகப் பேச்சு நடைபெற்று வருகின்றது. இரு கட்சிகளுக்கும் இடையே பொதுச் சின்னம் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. அது தொடர்பாகக் கேட்ட போதே மகிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது
சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியுடனான கூட்டணிப் பேச்சை வெற்றியடையச் செய்ய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு ஆகும். ஆனால் அரச தலைவர் தேர்தலில் வேட்பாளரை விடவும் சின்னம் முக்கியத்துவம் பெறுகின்றது.
அதனால்தான் ஒரு பொதுச் சின்னத்தைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைத்துள்ளோம். எமது கோரிக்கைக்கு அந்தக் கட்சி இணக்கம் தெரிவித்தால் வெகு விரைவில் பரந்துபட்ட கூட்டணி தொடர்பாக தீர்க்கமான முடிவை எடுக்கக் கூடியதாக இருக்கும் என்றுஎதிர்பார்க்கின்றோம். - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறி மலையில் பொங்கல் படிக்கட்டால் பொலிஸார் கடுஞ்சினம்

## நேற்றுமுன்தினமிரவு மலையில் அது பொருத்தப்பட்டது

வவுனியா, செப். 14

முல்லைத்தீவு வெடுக்குநாறி சிவன் கோவில் வருடாந்தப் பொங்கலின் இறுதிநாள் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. ஏற்கனவே தயாரிக்கப்பட்டு மலையில் பொருத்தத் தடைவிதிக்கப்பட்டிருந்த ஏணிப்படிக்கட்டு நேற்றுமுன்தினமிரவு பொருத்தப்பட்டுள்ளது.





அதனையடுத்து சிவில் உடையில் வந்த நெடுங்கேணிப் பொலிஸார் ஏணிப்படிக்கட்டுப் பொருத்துவதற்கு அனுமதி அளித்தது யார் என்று கோவில் நிர்வாகத்தினரிடம் விசாரித்து, திருவிழா நிறைவுற்ற பின்னர் ஏணிப் படிக்கட்டை அகற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதோடு, பொலிஸ் நிலையத்துக்கு வருமாறும் கூறிச் சென்றுள்ளனர்.

கோவிலில் கடந்த 4ஆம் திகதி பொங்கல் நிகழ்வுகள் ஆரம்பித்திருந்தன. அதன் இறுதி நாள் பொங்கல் சிறப்பாக நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட பக்தர்கள் பலர் அதில் கலந்துகொண்டிருந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்று நேற்று சூரியன் உதிப்பதற்கு முன்னர் பொங்கல் பொங்கி படைத்து வழிபாடுகள் நடைபெற்று நிகழ்வுகள் நடைபெற்றன. ஒலுமடு பிள்ளையார் கோவிலிலிருந்து காவடிகள் வந்திருந்தன.

கோவிலின் உச்சிப்பகுதிக்குச் செல்வதற்கான படிக்கட்டு கடந்த வருடம் இரும்பால் அமைக்கப்பட்டது. அதை மலையில் பொருத்தவிருந்த நிலையில், பொலிஸாரும் தொல்பொருள்த் திணைக்களத்தினரும் அனுமதி மறுத்திருந்தனர்.

இந்த நிலையில் படிக்கட்டுகள் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று கடந்த முறை இடம்பெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டிருந்தது. அப்படியிருக்கும்போது, நீங்கள் ஏன் தடை ஏற்படுத்துகின்றீர்கள் என்று பொலிஸாரிடம் ஆலய நிர்வாகத்தினர் கேள்வியெழுப்பினர்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் முடிவும் காற்றில் பறந்துவிட்டதா என்றும் விசனம் தெரிவித்திருந்தனர்.

(த-110)

# காணவில்லை எனக்கூறப்பட்ட மாணவன் மீட்பு

வவுனியா, செப். 14

கடந்த 6 நாள்களாக காணாமல்போயிருந்த 14 வயதுடைய வவுனியா மாணவன் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பூந்தோட்டம், காந்திநகரைச் சேர்ந்த ஜெயராசா கனிஸ்டன்(வயது - 14) என்ற மாணவனே காணாமற்போயிருந்தார். இது பற்றி வவுனியாப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

வவுனியா, வெளிக்குளம் பகுதியிலுள்ள தனது வீட்டில் குறித்த மாணவன் உள்ளார் என்று நண்பன், மாணவனின் உறவினருக்குக் அலைபேசியில் கூறியுள்ளார்.

அவர் அழைத்துவரப்பட்டார். 'கரம்' விளையாடுவதற்குச் சென்றிருந்தேன் என்று மாணவன் கூறியுள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-ரி4)

# மீள் உரிமைகோரல் படிவங்களை சமர்ப்பிக்கக் கோருகிறார் ஆளுநர்

## வன்னிப் பிராந்திய மக்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 14

படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் பயன்படுத்தப்படும் தனியார் காணிகள் தொடர்பான விவரங்களை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்ட காணிகளின் உரித்தாளர்களை மீள் உரிமைகோரல் படிவம் ஊடாக அறியத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன்.

இது தொடர்பில் ஆளுநர் அலுவலகம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் துரிதப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனினால் படைத்தரப்பு மற்றும் பொலிஸாரால் பயன்படுத்தப்படும் வடமாகாணத்திலுள்ள தனியார் காணிகளை அடையாளம் கண்டு அவற்றை துரிதகதியில் மீளகையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஏற்கனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தனியார் காணிகளை அடையாளம் கண்டு அவற்றை துரிதகதியில் மீளகையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மீள் உரிமைகோரல் விண்ணப்பப்படிவங்கள் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்படுக் கொண்டிருக்கின்றன.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் அடுத்தகட்டமாக ஏனைய மாவட்டங்களிலும் முப்படையினர் மற்றும் பொலிஸார் நிலைகொண்டுள்ள தனியார் காணிகள் தொடர்பான விவரங்களை காணிகளின் உரித்தாளர்கள் அறியத்தருவதன் மூலம் அவர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிப்பவர்களாயின் அவர்களும் தமது காணிகளை அடையாளப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இதற்காக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உரிமைகோரலுக்கான தகுந்த ஆதாரத்துடன் அல்லது தகுந்த விளக்கத்துடன் மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு காணி உரிமையாளர்களை கேட்டுக்கொள்கின்றோம்.

விண்ணப்பப் படிவத்தை ஆளுநர் செயலகம், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் வடமாகாண சபையின் இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

காணி உறுதியின் பிரதியுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை இணைத்து எதிர்வரும் செப்ரெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் 'காணி கோரல்' வட மாகாண ஆளுநர் செயலகம், பழைய பூங்கா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ஓ5)

எழுக தமிழ் பேரணிக்கு பல்கலையின்

# கல்வி சார், சாரா சங்கங்கள் குருமார் ஒன்றியம் ஆதரவு

யாழ்ப்பாணம், செப். 14

யாழ்ப்பாணத்தில் நாளை மறுதினம் இடம்பெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம், ஊழியர் சங்கம் மற்றும் பன்னாட்டு இந்து மத குருமார் ஒன்றியம் என்பன ஆதரவு தெரிவித்துள்ளன.

மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் - சிங்கள பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து, பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணையை நடத்து, தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில், உடனடி விசாரணை நடத்து, வடக்கு - கிழக்கு இராணுவ மயமாக்கலை நிறுத்து, இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் மீளக் குடியமர்த்து ஆகிய கோசங்களை முன்னிறுத்தி பேரணி நிகழ்த்தப்படவுள்ளது என்று ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

தமிழர் கல்வி, கலாசாரம், பண்பாடு என்பவற்றை சிதைக்கும் மறைமுக நிகழ்ச்சிநிரல்களுக்கு அரச இயந்திரம் துணைநிற்கின்றது என்று ஊழியர் சங்கம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு அரசியல் பேதங்கடந்து தமிழ் மக்கள் அணிதிரண்டு எங்களின் அவலநிலையை உலகுக்கு எடுத்தியம்ப வேண்டுமென்று பன்னாட்டு இந்து மத குருமார் ஒன்றியத்தின் தலைவர் சிவசிறீ கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் வலியுறுத்தியுள்ளார்.

அவரது செய்திக் குறிப்பில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-21)

# வீதிகள் சீரமைப்பு ஆரம்பம்

வவுனியா, செப். 14

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் சேதமடைந்த வீதிகளைச் சீரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வட்டார உறுப்பினர்கள் சபையில் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி மூலமாக வீதிகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

உக்கிளாங்குளம், கூமாங்குளம், தோணிக்கல், எல்லப்பர் - மருதங்குளம் ஆகிய கிராமங்களின் வீதிகளே சீரமைக்கப்படுகின்றன. இவற்றை பிரதேச சபைத் தவிசாளர் து.நடராஜசிங்கம் மற்றும் வட்டார உறுப்பினர்கள் கண்காணித்து வருகின்றனர்.

(த-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கோத்தபாய கொலை முயற்சி வழக்கு:

# சந்தேகநபரின் குற்றஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

கொழும்பு, செப். 14

கோத்தபாய கொலை முயற்சி வழக்கின் நான்காம் எதிரியான புற்று நோயால் பாதிக்கப்பட்டவரை கொடூரமாக சித்திரவதை செய்து குற்றஒப்புதல் வாக்குமூலத்தை பொலிஸார் பதிவு செய்துள்ளதாக அரச தலைவர் சட்டத்தரணி கே. வி. தவராசா மன்றில் வாதத்தை முன்வைத்தார். அத்துடன் சட்டமருத்துவரின் சாட்சியம் என்பவற்றின் அடிப்படையில், அரசு தரப்பால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்றஒப்புதல் வாக்குமூலத்தை நிராகரிப்பதாக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி தீர்ப்பளித்தார்.

கோத்தபாய கொலை முயற்சி வழக்கு கொழும்பு மேல் நீதி மன்றத்தில் அண்மையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது. இந்த வழக்கில் சட்டமா அதிபர் சார்பாக அரச தலைவர் சட்டத்தரணி ரோகா ந்த அபேசூரியவும், எதிரி சார்பாக சட்டத்தரணி செல்வி தர்மஜாவின் அனுசரனையில் அரச தலைவர் சட்டத்தரணி கே. வி. தவராசாவும் முன்னிலையாகியிருந்தனர்.

2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பு-கொள்ளுப்பிட்டி, பித்தளைச் சந்தியில் பாதுகாப்பு செயலராக இருந்த கோத்தபாய ராஜபக்சவை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டி விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலை குண்டுதாரியால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது மூன்று பாதுகாப்பு அதிகாரிகள் உயிரிழந்ததுடன், கோத்தபாய ராஜபக்ச, பாதுகாப்பு அதிகாரிகள் உள்பட பொதுமக்களுக்கு காயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பில், 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 4ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஐவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நான்காம் எதிரியான செல்வச் சந்திரனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையே அண்மையில் இடம்பெற்றிருந்தது.

#### அரசு தரப்பு வாதம்

சட்டத்தரணி ரோகாந்த அபேசூரிய குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணை நிறைவடைந்ததையடுத்து தனது சமர்பணத்தில், பயங்கரவாதத் தடைப்பிரிவுப் பொலிஸார் நான்காம் எதிரியான செல்வச்சந்திரனை தடுத்து வைத்து விசாரணை செய்த காலத்தில் கைதியை தாக்கவும், சித்திரவதை செய்யவும் இல்லை என்றும் வழக்கிலிருந்து விடுதலையாவதற்காக தனது உடலில் பத்து கடும் காயங்களை கைதி தன்னைத் தானே தாக்கி ஏற்படுத்தியுள்ளார் எனவும் தமது வாதத்தை முன்வைத்திருந்தார். அத்துடன் கோத்தபாய கொலை முயற்சி தாக்குதலின் எதிரி, சதியில் ஈடுபட்டதையும் கொலை முயற்சிக்கு உதவி ஒத்தாசை வழங்கியதாக தனது சொந்த விருப்பத்தில் குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளார். எதிரியால் வழங்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை அரசு தரப்பில் எதிரிக்கு எதிரான சான்றாக நெறிப்படுத்துவதற்கு நீதிமன்றம் கட்டளையிட வேண்டும் என்று கோரினார்.

#### எதிரி தரப்பு வாதம்

எதிரியின் சார்பில் முன்னிலையாகிய அரச தலைவர் சட்டத்தரணி கே. வி. தவராசா, 1993ஆம் ஆண்டு புற்றுநோய் காரணமாக கொழும்பு வந்து மஹரகம புற்றுநோய் மருத்துவமனையில் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வரும்பொழுது கொழும்பில் 2006ஆம் ஆண்டு பயங்கரவாத புலனாய்வு பிரிவுப் பொலிஸார் செல்வ சந்திரனை கைது செய்து, தடுத்து வைத்து, சித்திரவதை செய்து குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றுள்ளனர்.

அரச தரப்பில் சாட்சியமளித்த சட்ட மருத்துவ அதிகாரி சுப்பிரமணியம் கணேஸ், பொலிஸார் கைதியை தாக்கி சித்திரவதை புரிந்ததற்கான எந்தக் காயங்களும், கைதியின் உடலில் காணப்படவில்லையென கூறியுள்ளார்.

எனினும், இவ்வழக்கில் எதிரி தரப்பால் சான்றுக்கு அழைக்கப்பட்ட சட்ட மருத்துவ அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதனின் சாட்சியமும், இவ்வழக்கின் எதிரியான சந்திரபோஸ் செல்வச்சந்திரனால் மன்றுக்கு வழங்கப்பட்ட சாட்சியமும், எதிரியை சித்திரவதை செய்ததன் மூலம் ஏற்பட்ட காயங்களும் சட்ட மருத்துவ அதிகாரி சுப்பிர மணியம் கணேஸின் சாட்சியம் உண்மைக்கு புறம்பான பொலிஸாருக்கு சார்பான சாட்சியம் என்பதை நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எதிரி தரப்பின் சாட்சியமாக சாட்சியமளித்த சட்ட மருத்துவ அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதனின் சாட்சியத்தில் புற்று நோயாளியான கைதியை பொலிஸார் சித்திரவதை செய்ததால் கைதியின் உடலில் 12 கடுங்காயங்கள் காணப்படுவதாகவும், அந்தக் காயங்கள் கைதி தடுப்புக் காவலில் பொலிஸாரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்த காலத்தில் ஏற்பட்ட காயங்கள் எனவும் நீதிமன்றில் சாட்சியமளித்ததுடன் சட்ட மருத்துவ அறிக்கையும் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

சட்ட மருத்துவ அதிகாரி சுப்பிரமணியம் கணேஸின் சாட்சியத்தின்படி, முதலில் எதிரியின் உடலில் எந்தக் காயங்களும் இல்லையென வாதத்தை முன்வைத்த பிரதி சொலிசிடர் ஜெனரல் எதிரி தரப்பால் சான்றுக்கு அழைக்கப்பட்டு சாட்சியமளித்த சட்ட மருத்துவ அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதன் எதிரியின் உடலில் 12 காயங்கள் காணப்படுவதாக சாட்சியமளித்ததையடுத்து, கைதியின் உடலிலுள்ள காயங்கள் பொலிஸாரின் சித்திரவதையால் ஏற்பட்டவையல்ல எதிரி தனக்குத் தானே ஏற்படுத்திக்கொண்டவை என்ற கற்பனை வாதத்தை முன்வைத்தார். ஆனால், எதிரியின் உடலிலுள்ள காயங்கள் ஏற்பட்டுள்ள இடங்கள் மற்றும் காயங்களின் தன்மையை பரிசீலனை செய்த சட்ட மருத்துவ அதிகாரி உருத்திரமூர்த்தி மயூரதன் கைதியான செல்வச் சந்திரனின் உடலில் காணப்படும் காயங்கள் கைதி தனக்குத் தானே ஏற்படுத்திக் கொண்ட சுயகாயங்கள் அல்ல. அவை சித்திரவதை மூலம் ஏற்பட்ட காயங்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார் என்பதை எதிரி தரப்பின் சார்பில் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அரசு தரப்பினதும், எதிரி தரப்பினதும் வாத பிரதி வாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி தனது தீர்ப்பில் சட்ட மருத்துவ அதிகாரி சுப்பிரமணியம் கணேஸின் சாட்சியத்தை நிராகரித்தார். அத்துடன் சட்ட மருத்துவ அதிகாரியான உருத்திரமூர்த்தி மயூரதனின் சாட்சியத்தின் படி, கைதியின் உடலில் காணப்படும் காயங்கள், கைதியினால் சுயமாக ஏற்படுத்திக் கொண்ட காயங்கள் அல்ல பொலிஸாரின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட காயங்கள் என்று எதிரி தரப்பால் முன்வைக்கப்பட்டுள்ள சான்றுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, அரசு தரப்பால் சான்றாக முன்வைக்கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரிப்பதாக மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டியாராச்சி தீர்ப்ப ளித்தார். (ஒ,5)




## தேசிய மட்ட போட்டிகளில் சாதித்த யாழ். மாணவர்கள்

யாழ்ப்பாணம், செப். 14

இலங்கை முழுவதிலும் உள்ள தமிழ் மொழி மூலமான பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டியில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த சுதாகரன் சுபாஸ் தனி நடிப்பில் முதலாம் இடத்தை பெற்றுள்ளார். கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நேற்று வெள்ளிக்கிழமை போட்டிகள் இடம்பெற்றன. இதில் கலந்து கொண்டு, தேசிய மட்டத்தில் மாணவன் சுபாஸ் முதலிடம் பெற்றுள்ளார்.

இதேவேளை, பிரிவு இரண்டுக்கான கட்டுரைப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவி க. கனிமொழி முதலிடத்தைப் பெற்றுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி கல்வி அமைச்சில் இடம்பெற்ற பிரிவு 5 இற்கான இலக்கணப் போட்டியில், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவி ம. மயூரா முதலிடத்தைப் பெற்றுள்ளார். (ஒ,5)

## காலநிலையால் இலங்கையின் எதிர்காலம் கேள்விக்குறியாகலாம்

### ஐ.நா. எச்சரிக்கை

கொழும்பு, செப். 14

இலங்கை கடந்த காலங்களில் வெள்ளப் பெருக்கிற்கும், கடுமையான வறட்சிக்கும் முகம் கொடுத்து வந்திருக்கின்றது. இந்த நிலமை காலநிலை மாற்றத்தால் வெகுவாகப் பாதிக்கப்படக்கூடிய நாடாக இலங்கையை மாற்றியிருக்கின்றது. இதற்குத் தீர்வுகாணும் வகையில் தற்போது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதிலேயே இலங்கையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது. காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படத்தக்க பாதிப்புக்களால் இலங்கையின் வாழ்க்கைத்தர மட்டம் 5 - 7 சதவீதம் வீழ்ச்சி யடையும் நிலையேற்படும் என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர எச்சரித்துள்ளார்.

பொருளாதாரம் மற்றும் வாணிப விஞ்ஞான மாணவர்களுக்கான பன்னாட்டு அமைப்பின் கூட்டத்தொடரில் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் 'இளைஞர்களை மாற்றியமைத்தல், இலங்கையை மாற்றியமைத்தல்' என்ற தலைப்பில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பெரும் பிரச்சினையாக மாறிவரும் காலநிலை மாற்றம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். எதிர் வரும் 21 ஆம் திக[illegible] நாங்கள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டை நடாத்தவிருக்கிறோம். காலநிலைமாற்ற சவாலுக்கு எதிராகப் போராடும் இளைஞர்கள், புத்தாக்க முயற்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், மாற்றத்தை ஏற்படுத்துபவர்கள் என அனைவரையும் ஒன்றிணைக்கும் என்று நம்புகின்றோம்.

அந்தவகையில் புதுப்பிக் கத்த சக்திவள உற்பத்தியில் முதலீடு செய்யும் தனியார் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு இல ங்கை வாய்ப்பளித்து வருவது உண்மையில் வரவேற்கத்தக்க விடயமாகும்.

2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் சுமார் 19 மில்லியன் மக்கள் நவீனமான அல்லது கடும் காலநிலைமாற்ற பிர தேசங்களி லேயே வசிப்பார்கள் - என்றார். (ஒ,5,31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் மீதான அசம்பாவிதம் தொடர்கிறது

## இலங்கைக் கடற்படை மீது குற்றஞ்சாட்டுகிறார் கனிமொழி எம்.பி.

யாழ்ப்பாணம், செப். 14

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தற்போது தாக்குதல் நடத்துவதில்லையென்றாலும், அசம்பாவிதங்கள் தொடர்கின்றன என்று இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் க.கனிமொழி தெரிவித்துள்ளார்.

கனிமொழி உள்ளிட்ட பலர் தனிப்பட்ட பயணம் மேற்கொண்டு இலங்கைக்கு வந்து அமைச்சர்கள் சிலரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

கொழும்பிலுள்ள விவசாய அமைச்சில் நேற்றுமுன்தினம் மாலை கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கை சார்பில் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் அமீர் அலி கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்துவதை நிறுத்தியுள்ளனர். எனினும், சில சந்தர்ப்பங்களில் சில அசம்பாவிதங்கள் இடம்பெறுகின்றன என்று தமிழகமீனவர்கள்குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர் என்று கனிமொழி சுட்டிக்காட்டினார் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எனினும், கனிமொழி முன்வைத்த குற்றச்சாட்டை இலங்கை அதிகாரிகள் மறுத்திருந்தனர். அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது எனவும் உறுதியளித்திருந்தனர் என்று அவர் தெரிவித்துள்ளார். இந்திய மீனவர்களோ அல்லது இலங்கை மீனவர்களோ திட்டமிட்டு கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்று இரண்டு தரப்பினரும் கூறியிருந்தனர். இரண்டு நாடுகளினதும் அதிகாரிகளும் ஒன்றிணைந்து, கலந்துரையாடல்களை நடத்தி எதிர்காலத்தில் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ள தீர்மானிக்கப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி தெரிவித்துள்ளார்.

மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள தமிழக அரசுடன் முன்னர் பேச்சுக்கள் நடத்தப்பட்ட போதிலும் மாநில ரீதியில் அதனைச் செயற்படுத்துவதில் காணப்பட்ட பிரச்சினையால் இரண்டு நாடுகளுக்கும் இடையில் உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இரண்டு நாட்டு மீனவர்களும் தாக்கப்படுவதாகக் கூறப்படும் சம்பவத்துக்குத் தீர்வாக, பொறிமுறையொன்று அத்தியாவசியம் என்று சுட்டிக்காட்டிய இராஜாங்க அமைச்சர் அமீர் அலி, இந்த ஆண்டு இறுதியில் நடத்தப்படவுள்ள மாநாட்டில் அதற்கான தீர்வு எட்டப்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (த-21)

### பங்காளிக் கட்சிகளுடன்

# சந்திப்பை தொடக்குகிறார் அமைச்சர் சஜித் பிரேமதாச

கொழும்பு, செப். 14

ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாசவுக்கும் ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளி கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் அரச தலைவர் வேட்பாளரை தீர்மானிப்பதற்காக கடந்த செவ்வாய்க் கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் பேச்சு இடம்பெற்றிருந்தது. அரச தலைவர் வேட்பாளர் விவகாரம் குறித்து ஐக்கிய தேசிய முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளுடன் பேசித் தீர்மானம் எடுக்க வேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சர் சஜித்திடம் வழியுறுத்தியிருந்தார். அதன் அடுத்த கட்டமாகவே முன்னணியின் அங்கத்துவ கட்சிகளுக்கும் சஜித் பிரேமதாசவுக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இன்று இரவு நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில் அமைச்சர் மனோ கணேசன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹகீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சரமான ரிசாத் பதியுதீன், ஜாதிக ஹெல உருமயவின் தலைவரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட பலர் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்புக் குறித்து அமைச்சர் மனோகணேசன் தெரிவித்ததாவது:

தேர்தலின் போது கூட்டணியில் கைகோர்க்கும் பங்காளிக் கட்சிகளை தேர்தல் காலத்தில் மாத்திரம் பயன்படுத்தி விட்டு, பின்னர் கைகழுவி விடக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம் இருக்கின்றன. இனிமேலும் அனுமதிக்க முடியாது. ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரே புதிய கூட்டணியின் தலைவராகவும் இருக்க வேண்டும். இரண்டு பிரிவுகளுக்கும் தலைமைத்துவம் ஒன்றாக இருந்தால் மாத்திரமே சரிக்கு சமமாக பயணிக்கும். இல்லாவிட்டால் முன்னணி பெயரளிவில் மாத்திரம் செயற்பட கூடிய நிலை ஏற்படும்.

பொதுக் கூட்டணியின் பெயர், சின்னத்துக்கு அமைவாகவே அரச தலைவர் தேர்தலில் பங்குப்பற்றுவதற்கு கூட்டணியின் சகல உறுப்பினர்களும் பொது உடன்பாட்டுக்கு வர வேண்டும். இதனை அமைச்சர் சஜித் பிரேமதாசவுக்கும் தெரிவித்துள்ளேன். அதேபோன்று தேர்தல் அறிக்கையைத் தயாரிக்கும் விடயத்தை முழுமையாக வல்லுனர்களிடம் ஒப்படைக்காமல், மக்கள் பிரதிநிதிக ளாகிய நாங்களே கூட்டாகத் தயாரிக்க வேண்டும். இந்த விடயங்களை கலந்துரையாடலின் போது எடுத்துரைக்கவுள்ளேன் - என்றார்.

(ஒ,5,61)

# எழுக தமிழ் நிகழ்வில் சகலரும் பங்கேற்கவும்

யாழ்ப்பாணம், செப். 14

எம் தமிழ்த்தேசத்தின் விடுதலைக்காக காலங்காலமாகக் காத்திருக்க முடியாது. எழுக தமிழ் நிகழ்வில் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கோரியுள்ளது.

இது பற்றி அந்த இயக்கத்தின் செயலர் நாயகம் ந.ஶ்ரீகந்தா அனுப்பிய செய்திக் குறிப்பில்,

விடுதலை என்பது தங்கத் தட்டில் அல்லது வெள்ளித் தாம்பாளத்தில் வைத்து மற்றவர்கள் எவராலும் தரப்படுவது அல்ல. சுதந்திரம் எமது பிறப்புரிமை. அதை நிலைநாட்டுவதும் எம் உரிமை. இந்தச் செய்தியை எழுக தமிழ்'உரத்துச் சொல்ல வேண்டும் - என்றுள்ளது.

(த)

## வங்கியில்...

என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கடந்த 2ஆம் திகதி இரவு திருட்டு முயற்சி இடம்பெற்றது. இயந்திரத்தை உடைக்க முற்பட்டபோதும் அது பயனளிக்காததால், சென்றுவிட்டனர். அவர்களின் ஒளிப்படம் வங்கியின் கமராவில் பதிவாகியது. அதன்படி அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த ஊழியர் பணிநீக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-105)

## இளைஞனின்...

திருநெல்வேலியைச் சேர்ந்த தயாபரன் சசீபன் (வயது24) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

தினமும் மதுபோதையில் வீட்டில் தகராறில் ஈடுபடும் இளைஞன், ஏற்கனவே 4 தடவைகள் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்ப்பதற்கும் முயற்சித்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணியளவில், கையில் கயிற்றுடன் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்க்கப் போவதாக வீட்டில் இருந்த தாய், தந்தை, சகோதரர்களை மிரட்டியுள்ளார்.

இதனையடுத்து தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் அயலில் உள்ள வீட்டில் தங்கி நின்றுள்ளனர். இரவு 8.30 மணியளவில் வீடு திரும்பியுள்ளனர். இளைஞன் உறக்கத்தில் இருப்பதாக எண்ணி பேசாமல் இருந்துள்ளனர். இரவு 9.30 மணியளவில் உணவு கொடுப்பதற்கான இளைஞனை, தாயார் எழுப்பியுள்ளார். இளைஞன் அசைவற்று இருந்துள்ளான். உடனடியாக மருத்துவமனைக்கு இளைஞனை எடுத்துச் சென்றுள்ளனர். இளைஞன் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டது. இளைஞனின் கழுத்தில் கயிறு இறுக்கியமைக்கான அடையாளம் காணப்பட்டது என்று, இறப்பு விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

இளைஞனின் கழுத்தில் அடையாளம் காணப்பட்டாலும் கயிறு பிறிதொரு இடத்திலேயே இருந்தது என்றும், அதுவும் நிலத்தில் இருந்தமையால் உயிரிழப்பில் தமக்குச் சந்தேகம் இருப்பதாக இளைஞனின் உறவினர்கள் இறப்பு விசாரணையின்போது தெரிவித்தனர்.

இதனையடுத்து இறப்பு விசாரணையை மேற்கொண்ட இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும், சடலத்தைப் புதைக்குமாறும் பணித்தார்.

(ஒ,5,105)

## யாழ். மையப்...

கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தில் உள்ள வடைக்கடையில் பணியாற்றும் ஒருவருக்கும் அங்கு வந்த ஒருவருக்கும் இடையில் அலைபேசிக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன. அது வாக்குவாதமாக மாறி கைகலப்பும் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

வடைக்கடையில் பணியாற்றியவர் கடையில் இருந்த வெங்காயம் வெட்டும் கத்தியால் வாக்குவாதப்பட்ட நபருடைய கையில் வெட்டியதாகவும், இதனால் ஆத்திரமடைந்த நபர் தனது சகோதரர்களை அழைத்து வந்து மீண்டும் தகராற்றில் ஈடுபட்டதாகவும் தெரிவித்த பொலிஸார், இந்தத் தகராற்றில் வடைக்கடை அடித்து நொருக்கப்பட்டதாகக் குறிப்பிட்டனர். இந்த மோதலில் கத்திக்குத்துக் காயங்களுக்கு இலக்கான மூவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் அடித்து நொருக்கப்பட்ட வடைக் கடையின் உரிமையாளர் ஜசிந்தன் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது,

'நேற்றுக் காலை சம்பவம் நடைபெற்றது. கடையில் வேலை செய்த பெடியனுக்கும் வேறொருவருக்கும் அலைபேசி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் முரண்பாடு இடம்பெற்றுள்ளது. இதனாலேயே சண்டை இடம்பெற்றது. தங்களுக்குள் பிரச்சினையிருப்பின் வெளியில் நின்று பேசியிருக்கலாம்.

ஆனால் அவர்கள் கடைக்குள் நின்று சண்டையிட்டு, கடையை நொருக்கியுள்ளனர். பொருள்கள் அனைத்தும் வீசப்பட்டுள்ளன. கடையில் இருந்த பணத்தைக் காணவில்லை. பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளேன்' -என்றார்.

யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் உள்ள அங்காடி விற்பனை நிலையங்க ளில் தொடர்ந்தும் இவ்வாறான மோதல்கள் இடம்பெற்று வருவது பேருந்து நிலையத்துக்கு வரும் பயணிகளை அச்சமடையச் செய்கிறது என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

(ஒ,5,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடம்புரண்டது தொடருந்து 50 பேர் பரிதாபச் சாவு!

கொங்கோவில் துயரம்

கின்ஷசா,செப்.14

தொடருந்து தடம் புரண்டதால் மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் 50 பேர் சாவடைந்தனர். கொங்கோவின் ராங்கான்கியா மாகாணத்தில் இந்தத் துயரச் சம்பவம் நடந்தது. இதனால் தண்டவாளங்கள் சேதமடைந்தன. அந்தப்பகுதி வழியான தொடருந்துச் சேவைகள் நிறுத்தப்பட்டன.

தகவலறிந்த மீட்புக்குழுவினர் அங்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

அவர்கள் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்தில் பலர் படுகாயம் அடைந்துள்ளனர். காயமடைந்தவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால் சாவுகள் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.



‘பிரெக்சிட் விவகாரம்’

## சட்டத்தை மீறிச் செயலாற்றுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது

பிரிட்டனின் சபாநாயகர் தெரிவிப்பு

லண்டன். செப்.14.

‘பிரெக்சிட்’ விவகாரத்தில் சட்டத்தை மீறித் தலைமை அமைச்சர் பொரிஸ் ஜோன்சன் செயற்படுவதை எந்த விதத்திலும் அனுமதிக்கப்போவதில்லை என எச்சரித்தார் பிரிட்டன் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் ஜோன் பெர்கவ்.

லண்டனில் கடந்த வியாழக்கிழமை இடம் கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தச் சந்தர்ப்பத்திலும் நான் நாடாளுமன்ற விதிகளை மீறி நடக்கவில்லை. எழுத்து மூலம் சட்டத்தை நிறைவேற்றியாவது பொரிஸ் ஜோன்சனின் இந்தச் சட்ட மீறலை நிறுத்துவேன் என்றார். எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் பதவி விலக உள்ள ஜோன் பெர்கவ் சபாநாயகராக நாடாளுமன்றில் மேற்கொள்ளும் இறுதி நடவடிக்கையாக இது அமையும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இதற்கிடையில் பொரிஸ் ஜேன்சன் நாடாளுமன்றக் கூட்டத்தொடரைப் பிற்போடுவதற்கான அனுமதிக்காக எலிசபெத் மகாராணியை அணுகியதாகக் கூறப்படுகிறது.

இந்தியாவில் விநோதச் செயல்!

# மழை பெய்ய வேண்டித் திருமணம் மழை நிற்க வேண்டி விவாகரத்து

தவளைகளுக்கு மனிதர்களால் சடங்கு

புதுடெல்லி,செப்.14

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் பெய்துவரும் கடும் மழையை நிறுத்த வேண்டி ‘ஓம் ஷிவ் சேவா’ மண்டல உறுப்பினர்கள் தவளைக்கு விவாகரத்துச் செய்யும் சடங்கு ஒன்றைச் செய்தனர்.



இதில், சுவாரஸ்யம் என்னவென்றால் இதற்குப் பயன்படுத்திய தவளைப் பொம்மைகளுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் ஓம் ஷிவ் சேவா மண்டல் உறுப்பினர்கள் திருமணம் செய்து வைத்தனர்.

இதுகுறித்துமேலும் தெரியவருவதாவது:

இந்தியாவின் மத்திய பிரதேசத்திலுள்ள போபால்- இந்திரபுரிக் கோயிலில் வேத மந்திரங்கள் ஒலிக்கத் தவளைப் பொம்மைகளுக்குக் கடந்த ஜுலை மாதம் 19ஆம் திகதி திருமணம் செய்யும் சடங்கு நடத்தப்பட்டது.

மத்திய பிரதேசத்தில் கடும் வறட்சி நிலவிய அந்தக் காலகட்டத்தில் மழைவேண்டி இந்தத் தவளைப் பொம்மைகளுக்கு ஓம் ஷிவ் சேவா மண்டல் உறுப்பினர்கள் திருமணம் செய்து வைத்தனர்.

தற்போது போபாலில் கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் கடும் மழை பொய்கின்றது. இந்த நிலையிலேயே அந்தத் தவளைகளுக்கு விவாகரத்துச் செய்யும் சடங்கை நடத்தினர்.

மழை வேண்டித் தவளைகளுக்குத் தாம் திருமணம் செய்து வைத்ததால்தான் கடும் மழை பெய்கின்றது என்று நம்பும் அவர்கள் அந்த மழையை நிறுத்த வேண்டியே தற்போது அந்தத் தவளைகளுக்கு விவாகரத்துச் செய்து வைத்தனர்.

## பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீரை மீட்பதற்கு நாம் தயார்

இந்திய இராணுவத் தளபதி தெரிவிப்பு

புதுடெல்லி,செப்.14

பாகிஸ்தானின் நிர்வா கத்துக்கு உட்பட்ட காஷ்மீரை மீட்க வேண்டி இருந்தால் அதற்கு இந்திய இராணுவம் தயாராக இருக்கின்றது என்று இந்திய இராணுவ தளபதி பிபின் ராவத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:




மத்திய அரசுதான் காஷ்மீர் குறித்த அடுத்தக்கட்ட நடவடிக்கையை முடிவு செய்யும்.

அரசு உத்தரவிட்டால் அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் அனைத்து அமைப்புகளும் அதை நிறைவேற்றுவதற்குத் தயாராக உள்ளன-என்றார். இந்தியாவின் தலைமை அமைச்சர் அலுவலக விவகாரங்களுக்கான அமைச்சரும், பா.ஜ.காவைச் சேர்ந்தவருமான ஜிதேந்திர சிங் சமீபத்தில் ‘பாகிஸ்தான் நிர்வாகக் காஷ்மீரை மீட்பதுதான் இந்தியாவின் அடுத்த இலக்கு’ என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீர் உள்ள கோள் கண்டுபிடிப்பு

பூமியிலிருந்து 110 ஒளி ஆண்டுகள் தூரத்தில் பூமியைப்போன்ற கோள் ஒன்று அமைந்திருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். கே2 18பி என்று அவர்கள் குறிப்பிடும் அந்தக்கோளில் பூமியைப் போன்றுநீர் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். இந்தக் கோள் பூமியைப் போல் 8 மடங்கு பெரியது என்றும் பூமியைப்போல தட்பவெப்ப நிலையைக் கொண்டது என்றும் விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்தனர்.

இதுவரை கண்டறியப்பட்ட கிரகங்களிலேயே, உயிரினங்கள் வசிப்பதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையைக் கொண்டுள்ள, பூமி அல்லாத ஒரே கோள் இது என்பது குறிப்பிடத்தக்கது.





அண்மையில் இயற்கை எய்திய சிம்பாவேயின் முன்னாள் அதிபர் ரொபேர்ட் முகாபேவின் பூதவுடல் சிங்கப்பூர் மருத்துவமனையிலிருந்து சிம்பாவேயின் எம்பரே டவுன்ஷிப்பில் உள்ள ருவ்பாரோ மைதானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த மைதானத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக வரிசையில் காத்து நிற்கின்றனர் மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2 கிலோ பிளாஸ்ரிக் கழிவுக்கு 1 கிலோ அரிசி வழங்கப்படும்

## பிளாஸ்ரிக்குக்கு எதிராகப் பிலிப்பைன்ஸ் அரசு நற்செயல்

*மணிலா,செப்.14*

*பிலிப்பைன்ஸ் நாட்டில் பிளாஸ்ரிக் குப்பைகளைச் சேகரித்து அரசிடம் வழங்கும் மக்களுக்கு அதன் பயனாக, இலவசமாக அரிசி வழங்கப்படுகிறது. இதன் படி 2கிலோ பிளாஸ்ரிக் கழிவுகளுக்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படுகிறது.*





இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

பிலிப்பைன்ஸின் தலைநகர் மணிலாவுக்கு அருகே உள்ள பேயனான் கிராமத்தில் பிளாஸ்ரிக் கழிவுகளை அழிக்கவும், வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் பசியைப் போக்கவும் அந்த நாட்டு அரசு புதிய திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. அந்தத் திட்டமே 2கிலோ பிளாஸ்ரிக்குக்குப் பதிலாக ஒரு கிலோ அரிசி வழங்குவது.

இந்தத் திட்டத்தின் படி 2 கிலோ பிளாஸ்டிக் குப்பைகளைச் சேகரித்து அரசிடம் ஒப்படைக்கும் மக்களுக்கு ஒரு கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படும். பிலிப்பைன்சில் ஒரு கிலோ அரிசி கிட்டத்தட்ட 125ரூபாவுக்கு மேலாக விற்கப்படும் நிலையில், அதை வாங்குவதற்குக் குறித்த பகுதி மக்கள் பெரும் சிரமப்படுகிறார்கள். இந்த ஏழை மக்களுக்கு அரசின் இந்தத் திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. அதே வேளை பிளாஸ்ரிக்கை ஒழிப்பதற்கான நடவடிக்கையும் இதன் மூலம் முன்னெடுக்கப்பட்டு விடுகிறது என்று அந்த நாட்டின் சமூக ஆர்வலர்கள் குறிப்பிட்டனர்.

உலகம் முழுவதும் கடலில் பிளாஸ்ரகி கழிவுகள் கலப்பதும், அதனால் கடல்வாழ் உயிரினங்கள் உயிர் இழப்பதும் அதிகரித்து வருகிறது. பிளாஸ்ரிக் கழிவுகளை அதிகளவில் வெளியேற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பிலிப்பைன்ஸ் முதலிடம் வகிப்பதாக ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன.

இந்த நிலையிலேயே மேற்குறித்த செயற்பாட்டைப் பிலிப்பைன்ஸ் முன்னெடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# தலிபான்கள் தாக்கப்படுவர்!

## *மிரட்டல் விடுத்தார் ட்ரம்ப்*

தலிபான்கள் இதற்கு முன்னர் பார்த்திராத தாக்குதலுக்கு உள்ளாவார்கள் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்தார். தலிபான்களுடனான பேச்சுகள் நிறுத்தப்படுவதாக அவர் அறிவித்த பின்னர் விடுத்துள்ள எச்சரிக்கை இதுவாகும்.

தலிபான்கள் - ஆப்கான் அரசு இடையிலான பேச்சுகள் 9 சுற்றுகளாக அமெரிக்கா தலைமையில் நடந்தன. இதன் அடிப்படையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தைத் தலிபான்கள் ஏற்றுக்கொண்ட நிலையில், ஆப்கனில் தலிபான்கள் தாக்குதல் நடத்தினர். இதில் அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். இதனால், தலிபான்களுடனான பேச்சை நிறுத்துவதாக ட்ரம்ப் அறிவித்தார்.

இந்நிலையில், 'தலிபான்கள் இதற்கு முன்னர் தாக்கப்பட்டதைவிடக் கடுமையாகத் தாக்கப்படுவார்கள்.

இதுவரை அமெரிக்கா நிகழ்த்தியி ராத தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவார்கள். அவர்களுக்கு என்ன நடக்கும் என்று நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்கள்' என்றார் ட்ரம்ப்.

**ஆப்கான் - அமெரிக்கா**

அமெரிக்க வர்த்தக மையம் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலேயே அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்கத் தொடங்கின.

ஆப்கானில் அமெரிக்கப் படைகளுக்கும் தலிபான் படைகளுக்கும் அந்த நாட்டு அரச பகைளுக்கும் இடையே சிக்கி நிம்மதியை இழந்து வருகின்றனர் ஆப்கான் மக்கள்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு அமைதியான தீர்வு காண்பதில் முயற்சிகள் நடந்து வருகின்றன. ஆப்கனில் 18 ஆண்டுகளாக நடந்து வரும் போரிலிருந்து தன்னை விடுத்துவித்துக் கொள்வதற்கு அமெரிக்கா கடந்த சில ஆண்டுகளாக முயற்சிகள் மேற்கொள்கிறது.


இதற்கான பேச்சுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

கடந்த வாரம், தலிபான்கள் நடத்திய தாக்குதல்களில் அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டதால் பேச்சுகள் முறிவடைந்துள்ளன.

வர்த்தகப்போர் விவகாரம்

# வரி விதிப்புத் தள்ளி வைப்பு டொனால்ட்ட்ரம்ப் அறிவிப்பு

வோஷிங்டன்,செப்.14



சீனாவின் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட 5சதவீத கூடுதல் இறக்குமதி வரி விதிப்பை 2 வாரங்களுக்குத் தள்ளி வைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார். 250 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த வரியை நல்லெண்ண அடிப்படையில் தள்ளி வைப்பதாக அவர் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார்.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கிடப்பட இருந்த இந்த வரியை இரண்டு வாரங்களுக்குத் தள்ளி வைப்பதாகவும், ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதி புதிய சீனா உருவாக்கப்பட்ட நாள், அதனால் இறக்குமதிப் பொருள்களுக்கான வரி அந்தக் காலத்தில் நடைமுறைக்கிடப்படுவதைத் தள்ளி வைக்க வேண்டுமெனச் சீனா கேட்டுக்கொண்டதை அடுத்தே இந்த வரி விதிப்பைத் தான் தள்ளி வைப்பதாகவும் அந்தப் பதிவில் மேலும் குறிப்பிட்டார் ட்ரம்ப்.


அமெரிக்கப் பொருள்களுக்கான இறக்குமதி வரியை நீக்குவதாகச் சில நாள்களுக்கு முன்னர் சீனா அறிவித்திருந்த நிலையில் அமெரிக்காவின் இந்த அறிவிப்பு வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# 20 ஆண்டுகளுக்கு முன் நீரில் மூழ்கி சாவடைந்தவரின் உடல் கண்டுபிடிப்பு

## *'கூகுள்' உலக வரைபடச் செயலியே காரணம்!*

வோஷிங்டன்,செப்.14

இருபது வருடங்களுக்கு முன்பு, சாவடைந்தவரின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த எச்சங்களைக் கண்டுபிடிப்பதற்கு 'கூகுளின் உலக வரைபடச் செயலி' (கூகுள் மப்) காரணமாக இருந்துள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:



1997ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதியன்று அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள லான்டனா எனும் பகுதியில் வில்லியம் மோல்ட் (வயது 40) என்ற நபர் காணாமல் போனார்.

இரவு விடுதிக்குச் சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் அவர் காணாமல் போனதாகப் பொலிஸ் விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. இது தவிர அவர் எங்கே, அவருக்கு என்ன நடந்தது என்ற எவ்வித தகவல்களையும் பொலிஸாரால் அறிய முடியவில்லை. இந்த நிலையில், இந்த பகுதியில் முன்னர் வசித்த ஒருவர், கூகுள் வரைபடச் செயலி மூலம் தான் வசித்த பகுதியைப் பார்வையிட்டுள்ளார்.

அதன்போது அங்குள்ள ஏரிக்குள் மகிழுந்து ஒன்று மூழ்கிக் கிடப்பதை அவதானித்துள்ளார்.

அதை அந்தப் பகுதியில் தற்போர் வசிக்கும் நபருக்குத் தெரியப்படுத்தியுள்ளார். தற்போது வசிக்கும் நபர் பொலிஸாருக்கு விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். மகிழுந்தை மீட்கும் நடவடிக்கையில் இறங்கிய பொலிஸார். அதிலிருந்து உடல் எச்சங்களை மீட்டனர். அது வில்லியமின் மகிழுந்து என்றும் அதற்குள் இருந்த உடல் எச்சங்கள் வில்லிம் என்றும் உறுதிப்படுத்தப்பட்டது.

இறந்த ஒருவரை 22 ஆண்டுகளுக்கு பிறகு, உடல் எச்சங்களாகக் கண்டறிந்தமை அங்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாச்சி இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், செப்.14

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை 3 மணிக்கு தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

அதன் ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஞானம் சிறிதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான குரு குல ராஜா, பா.கஜதீபன், உடுவில் பிரதேச செயலர் ஜெயகாந்தன், மதிப்புறு விருந்தினர்களாக தாச்சி நடுவர் சங்கத் தலைவர் த.கமலநாதன், கிருபா சாரதி பயிற்சிக் கல்லூரி இயக்குநர் கிருபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ.23)






வினுசாந்


கௌதமன்

ஈரான் நாட்டில் நடை பெறவுள்ள யூனியர் உலக கிண்ண கபடிப் போட்டியில் பங்குபற்றவுள்ள இலங்கை யூனியர் தேசிய கபடி அணியில் இரண்டு தமிழ் வீரர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை சென். தோமஸ் விளையாட்டுக் கழக அணி வீரர் வினுசாந், நெல்லியடி மைக்கல் விளையாட்டுக் கழக அணி வீரர் கௌதமன் ஆகிய இருவரும் 15 பேர் கொண்ட இலங்கை யூனியர் தேசிய கபடி அணியில் உள்வாங்கப்பட்டுள்ளனர். (எ-23)

# தாச்சி இறுதிப் போட்டி

கொழும்பு, செப்.14

சங்கானை மக்கள் ஒன்றியம் நடத்த்திய அமரர் பரம்சோதி தங்கேஸ்வரி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான

தாச்சி சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 3.30 மணிக்கு சங்கானை கிங்ஸ் விளையாட்டு கழகம் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்தில் சங்கானை கிங்ஸ் விளையாட்டு கழக ஏ அணியை எதிர்த்து சங்கானை இளங்கதிர் விளையாட்டு கழக அணி மோதவுள்ளது. (எ-23)

# சிவகுருநாதன் வெற்றிக் கிண்ண துடுப்பாட்டத் தொடர் இன்று

யாழ்ப்பாணம், செப்.14

கொழும்பு ஆனந்தாக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு இடையிலான 8 ஆவது சிவகுரு நாதன் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப் பந்து துடுப்பாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. ஆரம்ப நிகழ்வுக்கு முதன்மை விருத்தினராக வடக்கு மாகாண ஆளுனர் கலாநிதி சுரேன் ராகவன் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-23)





# கால்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.14

மன்னார் கால்பந்தாட்ட லீக்கால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்ததும் எடிசன் சுற்றுக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அதில் நானாட்டன் மைடன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும், பெரிய பண்டிவிரிச்சான் மரியகொறற்றி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நானாட்டன் மைடன்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பொன்தீவுக் கண்டல் சென்.அன்ரனிஸ் விளையா ட்டுக்கழக அணிக்கும், சிறுக்கண்டல் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சிறுக்கண்டல் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக்கழக அணிக்கும், சுண்டுக்குளி உதயதர்சனம் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தோட்டவெளி ஜோசவாஸ்நகர் ஜக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும், பட்டித்தோட்டம் சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தோட்டவெளி ஜோசவாஸ்நகர் ஜக்கிய் விளை யாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)

# போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப் 14

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் 23 ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டமொன்றில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின் ஒளியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புதுமடம் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்மாள் விளையாட்டுக்கழக அணி மோதியது.

அதில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி 7 : 4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (எ-23)

---

யாழ்ப்பாணம், செப்.14

மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பி பிரிவு அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி, கலைமதி விளையாட்டுக் கழக பி அணி என்பன வெற்றி பெற்றன.

மட்டுவில், வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி 2: 1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக பி அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக 'பி' அணி மோதியது. அதில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக பி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)

# முத்துக்கள் மூன்று கால்பந்து தொடரின் ஆட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.14

மன்னார் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மாரியாம்பிள்ளை எடிசனின் அனுசரணையுடன் முத்துக்கள் மூன்று புகழ் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக் கழகம் நடத்தும் எடிசன் வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் முத்துக்கள் மூன்று புகழ் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம் பெற்றது.

அதில் சின்னபண்டிவிரிச்சான் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும், தம்பனை உதயதாரகை விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சின்னபண்டிவிரிச்சான சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக் கழக பி அணிக்கும், ஆண்டான்குளம் சென். தோமஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் ஏதுவித கோல்களையும் பதிவு செய்யாது போக, ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது.

அதில் பெரியபண்டிவிரிச்சான் வள்ளுவர் விளையாட்டுக்கழக பி அணி 2:0 என்ற கோல் கணககில் வெற்றி பெற்றது. முருங்கன் பொதுசன சேவைகள் விளையாட்டுக் கழக அணிக்கும், தேவன்பிட்டிசென்.சேவியர் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலா ன ஆட்டத்தில் ஆட்ட நேரமுடி வில் இரண்டு அணியும் தலா இரண்டு கோல்களை பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. அதில் முருங்கன் பொதுசனசேவைகள விளையாட்டுக்கழக அணி 4,3 என்ற கோல் கணககில் வெற்றி பெற்றது. (எ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இங்கிலாந்து முன்னிலை

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் ஐந்தாவது மற்றும் கடைசி டெஸ்ட் லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா பந்து வீச்சை தெரிவு செய்தது. இங்கிலாந்து முதலில் துடுப்பாட்டம் செய்தது. ஜோ பேர்ன்ஸ் 47 ஓட்டங்களையும், ஜோ ரூட் 57 ஓட்டங்களையும் பெற்றுச் சிறப்பாக ஆடினர். ஏனையோர் சொதப்பினர். இறுதியில், பட்லர் சிறப்பாக விளையாடி அரைசதம் அடித்தார்.

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கியது. பட்லர் மேலும் 6 ஓட்டங்கள் எடுத்து 70 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். லீச் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 87.1 பந்துப்பரிமாற்றங்களில் 294 ஓட்டங்களைப் பெற்றது.

ஆஸ்திரேலிய அணி சார்பில் மிட்செல் மார்ஷ் 5 இலக்குகளையும், கம்மின்ஸ் 3 இலக்குகளையும், ஹசில்வுட் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சை தொடங்கியது. அந்த அணியின் லபுஸ்சக்னே 48 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இந்த தொடரில் சிறப்பாக விளையாடி வரும் ஸ்டீவ் ஸ்மித் அரை சதமடித்தார். அவர் 80 ஓட்டங்களுடன் வெளியேறினார். கடைசி கட்டத்தில் நாதன் லயன் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆஸ்திரேலியா அணி தனது முதல் இன்னிங்சில் 225 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

இங்கிலாந்து அணி சார்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 6 இலக்குகளையும், சாம் கர்ரன் 3 இலக்குகளையும் வீழ்த்தினர். அதையடுத்து 69 ஓட்டங்கள் முன்னிலை வகிக்க இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்சை விளையாட ஆரம்பித்துள்ளது.

(எ)

# முதலிடத்தில் ஜோகோவிச் நெருங்குகின்றார் நடால்!

ஏடிபி ஒற்றையர் ரென்னிஸ் தரவரிசையில் செர்பிய வீரர் ஜோகோவிச் முதலிடம் பிடித்துள்ளார். 2ஆம் இடத்தில் நடால் நீடிக்கிறார்.

ஏடிபி ஒற்றையர் ரென்னிஸ் தரவரிசைப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. ஆண்கள் ஒற்றையர் ரென்னிஸ் ஏடிபி தரவரிசையில் முதல் இடத்தில் செர்பிய வீரர் ஜோகோவிச் உள்ளார். இரண்டாம் இடத்தில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால் உள்ளார்.

யுஎஸ் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ஆண்கள் ஒற்றையர் தொடரில் இரண்டாம் இடத்தை வென்றதன் மூலம், ரஷ்யாவின் இளம் வீரர் டேனில் மெட்வடேவ் தரவரிசையில் 4ஆம் இடத்தை எட்டிப் பிடித்துள்ளார்.

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியான யுஎஸ் ஓபன் போட்டி கடந்த வாரம் முடிவடைந்தது. ஆண்கள் ஒற்றையர் இறுதியாட்டத்தில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால், ரஷ்ய வீரர் டேனில் மெட்வடேவை 5 செற்களில் போராடி வீழ்த்தி, யுஎஸ் ஓபன் பட்டத்தை கைப்பற்றினார்.

ஏடிபி தரவரிசையில் முதலாம் இடத்தை தொடர்ந்து தக்க வைத்து வரும் ஜோகோவிச்சுக்கும், இரண்டாம் இடத்தில் உள்ள நடாலுக்கும் இடையே இந்த ஆண்டு பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர், 4 ஆயிரத்து 400 புள்ளிகள் வித்தியாசம் இருந்தது. யுஎஸ் ஓபன் ஆரம்பமாகவதற்கு முன்னர் இருவருக்கும் இடையே 3 ஆயிரத்து 740 புள்ளிகள் வித்தியாசம் இருந்தது.

யுஎஸ் ஓபன் 4ஆவது சுற்றில் முதல் 2 செற்களை வாவ்ரிங்காவிடம் இழந்த நிலையில் காயம் காரணமாக ஜோகோவிச் வெளியேறினார். பட்டம் வெல்வார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் ஜோகோவிச் வெளியேறியது, அவரது ரசிகர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இருப்பினும் தற்போது ஏடிபி தரவரிசையில் ஜோகோவிச் முதலிடத்திலேயே தொடர்ந்து நீடிக்கிறார்.

அவர் 9 ஆயிரத்து 865 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். 2ஆம் இடத்தில் உள்ள நடால் 9 ஆயிரத்து 225 புள்ளிகள் பெற்றுள்ளார். இருவருக்கும் இடையேயான வித்தியாசம் மிகவும் குறைந்துள்ளது.

யுஎஸ் ஓபன் ஆடவர் ஒற்றையர் ஆட்டத்தில் இரண்டாம் கைப்பற்றிய ரஷ்ய வீரர் டேனில் மெட்வடேவ், ஒற்றையர் தரவரிசையில் 10 இடங்கள் வரை முன்னேறி, தற்போது 4ஆம் இடத்தை பிடித்துள்ளார்.

# நவிண்டில் கலைமதி கிண்ணம் வென்றது



கொழும்பு, செப்.14

எள்ளங்குளம் இராணுவத்தினரால் இளைஞர்களுக்கிடையிலான நல்லுறவை வளர்க்கும் நோக்குடன் வடமராட்சியில் அழைக்கப்பட்ட கால்பந்தாட்ட கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்ட தொடரில் நவிண்டில் கலைமதி அணி கிண்ணம் வென்றது.

குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவு செய்ய ஆட்டம் நிலையில் முடிவடைந்தது. வெற்றி, தோல்வியை தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. அதில் நவிண்டில் கலைமதி அணி 8:7 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

(எ-23,422)

# சாதனை படைத்த ரூட்



இங்கிலாந்து -ஆஸ்திரேலியா அணிகள் மோதும் 5ஆவது மற்றும் கடைசி ஆஷஸ் டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல்நாள் ஆட்டத்தின் முடிவில் 8 இலக்குகளை இழந்து 271 ஓட்டங்களை எடுத்து இருந்தது.

ஜோ ரூட் 57 ஓட்டங்களையும், ஜோ பேர்ன்ஸ் 47 ஓட்டங்களையும் எடுத்தனர். பட்லர் 64 ஓட்டங்களுடனும், லீச் 10 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்காமல் இருந்தனர். மிட்செல் மார்ஷ் 4 இலக்குகளையும், கம்மின்ஸ், ஹசில்வுட் தலா 2 இலக்குகளையும் எடுத்தனர்.

ஜோ ரூட் 35 ஓட்டங்களை எடுத்து இருந்தபோது டெஸ்டில் 7 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டார். அவர் 85 டெஸ்டில் 157 இன்னிங்சில் 7 ஆயிரத்து 22 ஓட்டங்கள் எடுத்து உள்ளார். இதில் 16 சதமும், 44 அரை சதமும் அடங்கும். அதிகபட்சமாக 254 ஓட்டங்களைக் குவித்துள்ளார். 7 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த 12ஆவது இங்கிலாந்து அணித் தலைவர் என்ற பெருமையை ஜோ ரூட் பெற்றார். குறைந்த இன்னிங்சில் 7 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த 4ஆவது இங்கிலாந்து வீரரும் இவராவார். ஹேமந்த் 131 இன்னிங்சிலும், பீட்டர்சன் 150 இன்னிங்சிலும், அலைஸ்டர் குக் 151 இன்னிங்சிலும் 7 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டு இருந்தனர்.

அதேவேளை, குறைந்த வயதில் 7 ஆயிரம் ஓட்டங்களை எடுத்த 3ஆவது பன்னாட்டு வீரர் ஜோ ரூட் ஆவார். அவர் 28 வயது 256 நாள்களில் இந்த ஓட்டங்களை எடுத்தார். குக் 27 வயது 346 நாள்களிலும், டெண்டுல்கர் 28 வயது 193 நாள்களிலும் 7 ஆயிரம் ஓட்டங்களைத் தொட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர்கள் தேவை



யாழ் நகரிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. சாரதி
2. சுத்திகரிப்பாளர்கள்
3. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் உங்கள் சுயவிபரக் கோவையுடன் 17.09.2019 புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 1.00 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1039
சீட்டிழுப்பு திகதி 2019.09.12 வியாழக்கிழமை
N 31 61 68 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,002,196/-



ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 13.09.2019 | 2616 | கடும்நீலம் |

விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 22 34 46 48
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,221,382/=
14.09.2019 ம் திகதி சனிக் கிழமை இளம்நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4834824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



அத கோடிபதி
சீட்டிழுப்பு இல 780
ரூ. 50,515,410/-
சீட்டிழுப்பு திகதி 2019.09.18
16 39 54 69 M
8448



## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல புடைவையகத்துக்குக் கீழ்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

- அலுவலக உதவியாளர் (பெண்)
  கல்வித் தகைமை A/L
- விற்பனைப் பிரதிநிதி (ஆண்/ பெண்)
  வயது எல்லை 18 - 30
- அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை.
- கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் போனஸ் கொடுப்பனவுகள் உண்டு.

நேர்முகத்தேர்வு:- 17.09.2019, 9.00 - 5.00 வரை நிறுவனத்தில்

071 844 4333
அபி பெஷன் வேல்ட்
112, K.K.S. வீதி. 021 222 3738



සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 279
சீட்டிழுப்பு திகதி 13.09.2019 சிகப்பு

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் | விதி எண் |
|---|---|---|
| J | 17 37 48 | 08 |

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 43,895,844/=
18.09.2019 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk




# சப்ராஸ் தலைமையில் களமிறங்குகிறது பாக்.

இலங்கை அணிக்கு எதிரான துடுப்பாட்டத் தொடருக்கான பாகிஸ்தான் அணிக்கு சப்ராஸ் அகமட் அணித் தலைவரா நீடிக்கப்பட்டுள்ளார். துணை அணித் தலைவராக பாபர் ஆஸம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் தலைமைப் பயிற்சியாளர் மற்றும் தலைமை அணி தேர்வாளருமான மிஸ்பா உல் ஹக் பரிந்துரைகளின் அடிப்படையில் இந்த நியமனங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

எதிர்கால அணித் தலைவராக பாபர் ஆஸம் நியமிக்கப்படும் வாய்ப்பை அதிகப்படுத்துவதற்காக அவர் துணை அணித் தலைராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மிஸ்பா உல் ஹக், "ஓய்வறையில் வீரர்களிடையே கலாசாரம் மற்றும் மனநிலை மாற்றங்கள் தேவை என்பதை நான் வலியுறுத்துகிறேன். அப்போதுதான் சிறந்த முடிவுகள் கிடைக்கும். சப்ராஸ் அகமட் இந்த குறிக்கோள்களை எட்ட எனக்கு உதவியாக இருப்பார்.

கடந்த இரண்டு வாரங்களாக சப்ராசுடன் நான் இணைந்து பணியாற்றினேன், அதாவது அவரது கிரிக்கெட்டின் சிலபகுதிகளை மேம்படுத்தி அதன் மூலம் அணித் தலைவராக அவரது ஒட்டுமொத்த திறனையும் வளர்க்கப் பணியாற்றினோம். இது திறமைக்கான உலகம் என்பதை உணர்ந்து ஒவ்வொரு முறையும் களத்தில் சிறந்த திறமையை வெளிப்படுத்துவது இப்போதைய காலக்கட்டங்களில் அவசியம் என்பதை இருவரும் உணர்ந்தோம். என்றார் .

சப்ராஸ் அகமட்டும் பயிற்சியாளர் மிஸ்பா உல் ஹக் கருத்தை ஆமோதித்துள்ளார். தான் மிஸ்பாவின் தலைமையின் கீழ்தான் அதிகம் விளையாடியுள்ளேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ)


## தவறவிடப்பட்டுள்ளது

08.09.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சுதுமலை, தாவடி, கொக்குவிலுக்கு இடைப்பட்ட பகுதியில் கைச்சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 418 6880



வெளிநாடு, உள்நாடு மணமகன், மகணமகள் தேவையா?
Jaffnaroots.com
என்ற இணைய தளத்தில் இலவசமாக பதிவு செய்யுங்கள்
0014 1631 95236 (கனடா)



JCB
சாரதி தேவை
0779082146
0772138444


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் 74வது பிறந்த நாள் நினைவு தினமும்



தாயின் மடியில் 15.09.1945
இறைவனடியில் 17.09.2018

அமரர்
நவரத்தினம் சாமுவேல் மகாரத்தினம்

எப்போதும் சிரிக்கின்ற இன்முகம் காட்டி
எல்லோர்க்கும் நல்லவராய் வாழ்ந்துவிட்டு
சிலநாள் நோயென்று படுத்திருந்து.எங்கள்
சிறகொடித்து விரைந்ததேன் எமை மறந்து

பிரிவுகள் எப்போதுமே துயரமானவை ஆனால்
பரிவான நினைவுகள் எப்போதும் ஆழமானவை
நெஞ்சின் ஆழத்தில் ஊறிடும் நினைவுகள்தான்
மிஞ்சியுள்ள காலத்தில் உம் துணையாகும் மகா

என்றும் உம்மை மறவாது உம் நினைவாகவே வாழும்
மனைவி, சகோதர சகோதரிகள், குடும்பத்தினர்
துவாளி வீதி, இமையானன் மேற்கு, உடுப்பிட்டி



2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரை கட்டார் நடத்தவுள்ள நிலையில், இந்தத் தொடருக்கான இலச்சினை டோகாவில் உள்ள இமாலய டவரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காட்சிப்படுத்தப்பட்டது. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.09.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org